சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 16 17-5-'42 Price 2 Annas

குழந்தைப்பருவத்தில்
முக்கியமான சுகத்தைத் தரும்
வுட்வார்ட் வைத்தியனின்
“கிரைப் வாட்டர்”
என்னும் மருந்துத் திராவகம்
குழந்தைக்கு
ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND



அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கும் விமானப் படைத்தலைவர் மேஜர் ஜனரல் லூயிஸ் எச். ப்ரியர்டன். இந்தியாவில் விமான நிலையமொன்றுக்கு அவர் வந்தபோது இந்தப்படம் எடுக்கப்பட்டது. (வலது) சீனாவுக்குச் செல்லும் அமெரிக்க தூதர் மிஸ்டர் க்ளாரன்ஸ் இ. காஸ் (மத்தி) டில்லி வந்தார். அவருக்கு வலதுபுற மிருப்பவர் ராஜப் பிரதிநிதியின் ராணுவக் காரியதரிசி, இடதிருப்பவர் கர்னல் லூயி ஜான்ஸனின் காரியதரிசி கர்னல் க்ரிப்பித்ஸ்.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

17—5—42

சென்ற வார நிகழ்ச்சிகள்

பஸிபிக்கில் யு. எஸ். வெற்றி

தென் மேற்கு பஸிபிக்கில் யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படைக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. ஜப்பானுக்குச் சொந்தமான ஒரு குரூஸர் 2 நாசகாரிகள், 4 பீரங்கிப் படகுகள், ஒரு சப்ளை கப்பல் ஆகியவை மூழ்கடிக்கப்பட்டன.

எதிரியைச் சேர்ந்த ஒரு குரூஸர், கடல் விமானங்களை ஏற்றிச் செல்லும் ஒரு கப்பல் (9000 டன்) ஒரு சாமான் படகு, இன்னொரு பெரிய சாமான் கப்பல் ஆகியவைகளுக்குச் சேதமேற்பட்டது. மேலும் 6 ஜப்பானிய விமானங்கள் நாசமாயின.

தூரக்கிழக்கில் யு. எஸ். ஸப்மரீன்கள் இரு ஜப்பானிய சாமான் கப்பல்களையும், எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பலொன்றையும் மூழ்கடித்தன.

விசேஷ மகிழ்ச்சிக்குரிய இச்செய்தியைத் தெரிவிக்கும். யு. எஸ். கடற்படை மேலும் கூறுவதாவது:—

சென்ற 4-ந் தேதி ஸாலமன் தீவுகளுக்கருகே யு. எஸ். ஜப்பானிய கடற்படைகள் போர் புரிந்தன. யு. எஸ். படை 3 விமானங்களை மட்டுமே இழந்தது.

தென்மேற்கு பஸிபிக்கில் ஒரு பெரிய கடல்—விமான யுத்தம் நடப்பதாக ஆஸ்திரேலியாவிலுள்ள நேச அதிகாரிகள் அறிவிக்கின்றனர். இந்த யுத்தத்தின் ஆரம்பப் பகுதியில் எதிரிக்கு ஏற்பட்ட சேதத்தைப் பற்றி மட்டுமே ஏற்கனவே அறிக்கை வெளியாகியிருக்கிறது.

* * * *

பல ஜப்பானியக் கப்பல்கள் நாசம்

'வடகிழக்கு ஆஸ்திரேலியாவுக்கு அருகே, படையெடுப்புக்கான முஸ்தீப்புடன் திரண்டிருந்த ஒரு பெரிய ஜப்பானியக் கடற்படை சிதறடிக்கப்பட்டு விட்டது; 'பாக்கியிருந்த எதிரிக் கப்பல்கள் ஓட்டம் பிடித்தனர்' என்று நேசதேச முன்னணித் தளத்திலிருந்து ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

பவழக்கடல் யுத்தம் தற்காலிகமாக நின்றிருப்பதாகவும், எதிரியை விரட்டியடித்து விட்டதாகவும் மெல்போர்ன் செய்தியொன்று கூறுகிறது. மீண்டும் யுத்தம் துவங்குவதற்குப் போதிய உதவிப்படை ஜப்பானியருக்கு உடனேயே வந்து சேருமா என்று தெரியவில்லை.

ஜப்பானியக் கடற்படையைச் சேர்ந்த விளம்பர அதிகாரிகள் அறிவிப்பதாவது:—

'ஆஸ்திரேலியாவுக்குக் கிழக்கே பவழக்கடலில் நமது கடற்படை ஆங்கிலோ—அமெரிக்கக் கடற்படையைத் தாக்கி மகத்தான வெற்றி எய்தியது.

* * * *

யு. எஸ். உதவி ஜனாதிபதி எச்சரிக்கை

யுனைடெட் ஸ்டேட்ஸின் உதவி ஜனாதிபதியான மிஸ்டர் ஹென்ரி வாலஸ் ரேடியோவில் பேசினார்: அதன் சாரமாவது:—

யுனைடெட் ஸ்டேட்ஸிலும், தென் அமெரிக்காவிலும் ராணுவம், யந்திர நாசவேலை, பிரசாரம் இம்மூன்று துறைகளிலும் அச்சு தேச நடவடிக்கை இன்னும் சில மாதங்களில் உச்சஸ்தானத்தை அடையும். நேச நாடுகளில் உள்ள படைகள் அனைத்தும் தங்கள் முழு பலத்தையும் உபயோகித்தாகவேண்டியது அவசியம், அடுத்த ஆறு மாதகாலம் நமக்கு மிகவும் நெருக்கடியானதாயிருக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஹிட்லர் தான் அடியோடு தோல்வியுறும் நிலையிலிருப்பதை அறிவார். கடைசி முறையாக ஒரு முறை ஓங்கியடித்துப் பார்க்கலாமென்ற எண்ணத்துடன் அவர் பாக்கியுள்ள தனது பலம் முழுதையும் திரட்டி வருகிறார். தனது கடைசி யுத்தத்திற்கு முஸ்திப்பு செய்துவரும் இந்த பைத்தியக்காரன் மனத்திலுள்ள பயம் சொல்லி முடியாது. இதே சமயத்தில் அவரது ஜனங்களிடையே அதிருப்தி வலுத்து வருகிறது.

அடுத்தபடியாக அமெரிக்கப் பிரதேசம் தாக்கப்படலாமென்று நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். யாரும் எதிர்பாராத ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொள்வதில் ஹிட்லரும், ஜப்பானியரும் ஒத்துழைப்பார்களென்பது நிச்சயம். ஒருக்கால் தென் அமெரிக்காவில் ஜெர்மன் கலகம் ஆரம்பமாகையில் அதை வலுப்படுத்தும் பொருட்டு ஜெர்மன் துருப்பு விமானங்கள் டாகாரிலிருந்து அங்கு போய்ச் சேரக் கூடும். அதே சமயத்தில் ஜப்பானியர் அலாஸ்காவையும், நமது வடமேற்குக் கரையையும் தாக்கலாம். தென் அமெரிக்காவில் மிக மோசமான ஐந்தாம் படை வேலை நடக்கக்கூடும். அதைச்சமாளிக்க நாம் தயாராயிருக்கவேண்டும்.

* * * *

மடகாஸ்கர் பிரிட்டிஷ் வசம்

"மடகாஸ்கர் தீவைப் பிரிட்டிஷ் படைகள் வசப்படுத்திக் கொண்டன. மடகாஸ்கரைப் பிரிட்டிஷ் படைகள் வசப்படுத்திக்கொண்டதை யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் பூரணமாக ஆதரிக்கின்றனர்."

நேச தேசப் படைகள் மடகாஸ்கருக்கருகில் இம்மாதம் 5-ந் தேதி காலை வந்தன. ஜப்பானியர் இந்த பிரெஞ்சு தளத்தைக் கைப்பற்றாமல் செய்வதே நேசப்படைகளின் நோக்கம்.

மடகாஸ்கரிலுள்ள பிரெஞ்சு அதிகாரத்தில் நேச நாட்டினர் தலையிடமாட்டார்களெனவும், மடகாஸ்கர் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் பகுதியாகவே இருக்குமென்றும் பிரெஞ்சு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

பிரெஞ்சு எதிர்ப்பு நின்றது

கடற்படை மந்திரி, யுத்த மந்திரி ஆபீஸ்களின் கூட்டறிக்கையொன்று பின்கண்டபடி கூறுகிறது:—

டைகோசுவாரெஸ் துறைமுகத்திலுள்ள ஆண்டிஸிரேனே என்ற பிரதம நகரம் 5-ம் தேதி இரவில் தாக்கிப் பிடிக்கப்பட்டது. தெற்கிலிருந்து முக்கிய தாக்குதல் ஏற்பட்டது. ஆனால் வடக்கில் பிரிட்டிஷ் கடற்படையினர் இறங்கி வந்தனர். இது எதிரியின் கவனத்தைத் திருப்புவதற்கு மிக்க உதவியாக இருந்தது.

ஆண்டிஸிரேனேயிலுள்ள பிரெஞ்சுக் கடற்படைத்தலைவர்களும் ராணுவத் தலைவர்களும் சரண் புகுந்துவிட்டனர். ஆனால் இன்னும் சில இடங்களில் எதிர்ப்பு இருக்கிறது. அதனை ஒழிக்க வேண்டும். ஒரு விச்சி சப்மரீனும் ஒரு சிறிய கப்பலும் (ஸ்லூப்) டைகோசுவாரெஸ் துறைமுகத்திலிருந்தன. அவை மூழ்கடிக்கப்பட்டன.

டைகோசுவாரெஸ் துறைமுகம் 6-ந் தேதி பிடிபட்டது.

மடகாஸ்கர் தீவில் கட்டுப்பாடான எதிர்ப்பு நின்றுபோய் விட்டது. பிரிட்டிஷாருக்கு இப்போர் நடவடிக்கைகளில் ஏற்பட்ட சேதம் அதிகமாக இல்லை.

* * * *

ரஷ்யாவுக்குப் பிரிட்டிஷ் சப்ளை

சென்ற சில தினங்களில் ஆர்க்டிக் சமுத்திரம் வழியாகச் சென்றுகொண்டிருந்த பிரிட்



பிரிட்டனின் பெரிய யுத்தக் கப்பல்

"ட்யூக் ஆப் யார்க்" என்ற பெயருள்ள இந்த யுத்தக் கப்பல் மிகப்பெரிது. பெரிய பீரங்கிகளைக் கொண்டது இது.

டிஷ் கப்பல் கூட்டத்தை ஜெர்மன் கடற்படையும், விமானங்களும் தாக்கியதாகப் பிரிட்டிஷ் கடற்படை இலாகா அறிவிக்கிறது.

இப்போராட்டத்தில் "எடின்பரோ" என்ற பிரிட்டிஷ்குரூஸர் மூழ்கடிக்கப்பட்டது. ஜெர்மனியர் ஒரு நாசகாரியை இழந்தனர்.

பிரிட்டிஷ் கப்பல் கூட்டம் ரஷ்யாவிலிருந்து பிரிட்டனுக்குத் திரும்பும் வழியில் ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அக்கப்பல் கூட்டம் தளவாடங்களுடன் வட ரஷ்யாவுக்குச் சென்றபோது எதிரி விமானங்கள் அதன்மீது டார்பிடோக்களைப் பிரயோகித்தன. இதன் பலனாக 3 பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கின. எதிரி விமானங்களில் ஒன்றுவது நாசமாகியிருக்கும். ரஷ்யாவுக்கு அனுப்பிய சப்ளையில் 90 சத விகிதம் பத்திரமாக அங்குபோய்ச் சேர்ந்தது.

"எடின்பரோ" என்ற குரூஸரின் நிறை 10,000 டன். அது 1938-ம் வருஷம் மார்ச் மாதத்தில் மிதக்கவிடப்பட்டது. அதில் 12 ஆறு அங்குல பீரங்கிகளும் விமானங்களைச் சுடக்கூடிய 12 நாலு அங்குல பீரங்கிகளும், வேறு பல சிறிய பீரங்கிகளும், டார்பிடோ குழாய்களும் அமைக்கப்பட்டிருந்தன. அதில் நான்கு விமானங்களும் இருந்தன. மத்தியதரைக் கடலில அக்கப்பல் மிகத் திறமையாகப் போராடியதை முன்னிட்டு அதன் சிப்பந்திகளுக்கு 1941-ம் வருஷம் நவம்பரில் உயரிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

சென்ற ஏப்ரல் 30-ந்தேதி பிற்பகல் ஒரு எதிரி ஸப்மரீனின் டார்பிடோவால் "எடின்பரோ" சேதமுற்றது. மறு நாள் மூன்று ஜெர்மன் நாசகாரிகள் பிரிட்டிஷ் கப்பல்கூட்டத்தைத் தாக்கப் பெரு முயற்சி செய்தனவாயினும் அது பலிக்கவில்லை. அதற்கு மறு நாள் நடந்த போராட்டத்தில் "எடின்பரோ" மீது ஒரு டார்பிடோ பாய்ந்தது. இதனால் பெருஞ்சேதமுற்றது கண்டு, நமது படைகளே அதை மூழ்கடித்துவிட்டன. ஜெர்மன் நாசகாரிகளில் ஒன்று மூழ்கடிக்கப்பட்டதுடன் இன்னொன்றுக்கும் பெருஞ் சேதம்.

* * * *

காரிஜிடார் சரணகதி

பிலிப்பைன் தீவில் மணிலா விரிகுடாவாயிலிலுள்ளகாரிஜிடார் தீவிலுள்ள அமெரிக்க பிலிப்பைன் படைகள் ஜப்பானியரிடம் சரண் புகுந்து விட்டதாக ஆஸ்திரேலிய தலைமைக் கார்யாலய அறிக்கை கூறுகிறது.

* * * *

தூரக் கிழக்கு யுத்தரங்கம்

ஆஸ்திரேலிய வெளிநாட்டு மந்திரியான டாக்டர் இவாட் இம்மாதம் 5-ந் தேதி காலை பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குப் பேட்டியளித்தார்.

தூரக்கிழக்குப் போர் முனை அவ்வளவு முக்கியமில்லை என்று சிலர் சொல்லி வருவதால் ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றி டாக்டர் இவாட் குறிப்பிட்டார்.

அவர் கூறியதாவது:—மிகச் சக்திவாய்ந்த எதிரிகளான ஜெர்மனி, ஜப்பான் இரண்டையும் நாம் எதிர்த்தாக வேண்டியிருக்கையில் ஒரு அரங்கத்தில் மட்டும் நமது கவனம் முழுதையும் செலுத்துவது வெறும் பைத்தியக்காரத்தனம்.

"ஹிட்லரையே முதலில் தோற்கடிக்கவேண்டும்" என்ற கோஷம் மிகவும் வருந்தற்குரியது. நாம் எதிரிகள் அனைவரையும் ஒரே சமயத்தில் எதிர்த்துப் போராடினாலன்றி அவர்களில் எவரையும் தோற்கடிக்க முடியாமல் போய்விடும்.

ஆஸ்திரேலியா, இந்தியா இரண்டின் மீதும் ஒரே சமயத்தில் பாய்வதற்கான வல்லமை ஜப்பானிடம் இருக்கிறது. அந்நாடு சமீப காலத்தில் பொருளாதாரத் துறையில் பெற்றுள்ள லாபம் கொஞ்சநஞ்சமல்ல. சென்ற ஐந்து மாத காலத்தில் ஜப்பானின் தாக்குதலால் பஸிபிக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல் மகத்தானது, இவ்வளவு சீக்கிரமாக இவ்வளவு பெரிய மாறுதலானது ஐரோப்பாவில் ஜெர்மனி எய்திய வெற்றியால் கூட ஏற்படவில்லை. தளவாட சப்ளை கப்பல்கள் விஷயம் ஆகியவைகளைப் பற்றிக் கலந்து பேசுவதற்காகவே யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் பிறகு பிரிட்டனுக்கும் வந்தேன். ஒவ்வொரு அரங்கத்திலும் உள்ள ராணுவத் தேவைகளுக்கு ஒத்தவாறு யுத்த தளவாடங்களைப் பிரித்தனுப்ப வேண்டியது அவசியம்.

டாக்டர் இவாட் லண்டனிலுள்ள அதிகாரிகளுடன் பேசி முடிந்ததும் வாஷிங்டனுக்குத் திரும்பி அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் போய்ச் சேர்வார்.

* * * *

மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை

"ஹிட்லர் ரஷ்யாமீது விஷவாயுவைப் பிரயோகிப்பாராயின், பிரிட்டனும் ஜெர்மனியிலுள்ள ராணுவ சாதனங்கள்மீது மிகப் பெருவாரியான முறையில் அத்தகைய வாயுவைப் பிரயோகிக்கும்." என்று மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் இம்மாதம் 10-ந் தேதி ரேடியோவில் பேசுகையில் ஜெர்மனிக்கு எச்சரித்தார்.

ரஷ்யாமீது விஷ வாயுவை உபயோகித்தால் அதைப் பிரிட்டன் மீது உபயோகித்ததாகவே கருதப்படுமென்றும் மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

அவர் செய்த பிரசங்கத்தின் சாரம்:—

ரஷ்யப்படைகளை நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம். பிரிட்டன் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான டாங்கிகளையும் விமானங்களையும் அனுப்பி வைத்திருக்கிறது.

விஷ வாயுவை முதலில் ஜெர்மனியர் பிரயோகித்தாலன்றி நாம் அதைப் பிரயோகிப்பதில்லையென்று திண்ணமாக உறுதி கொண்டிருக்கிறோம். எனினும் ஜெர்மனியர் விஷயம் நமக்குத் தெரியுமாதலின், அதைப் பெருவாரியாகப் பிரயோகிப்பதற்கான முஸ்தீப்புச் செய்ய நாம் தவறவில்லை. ஜெர்மனியர் தாங்களாக ரஷ்யர்மீது விஷவாயுவைப் பிரயோகித்தால் அதை நம்மீது பிரயோகித்ததாகவே நாம் கருதுவோம். அந்நிலையில் நாம் வர வர அதிகமாகி வரும் நமது விமானபலத்தைக் கொண்டு ஜெர்மனியிலுள்ள ராணுவ சாதனங்கள் மீதெல்லாம் அத்தகைய வாயுவைப் பிரயோகிப்போம். எனவே இப்புதிய பயங்கரம் தலையெடுக்க விடுவதாவென்பதை முடிவு செய்ய வேண்டியவர் ஹிட்லர் தான். யுத்தத்தில் ரஷ்யருடன் பரிபூரணமாக ஒத்துழைத்து வரும் பிரிட்டிஷ் மக்கள் எந்தத் தியாகத்துக்கும், எத்தகைய சோதனைக்கும் தயங்கப் போவதில்லை.

இதுவரை நமக்குப் பல துர்ப்பாக்கியங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

பிரான்ஸ் வீழ்ச்சியடைந்ததும், நமக்கும் அந்தியகாலம் வந்துவிட்டதென்று அனைவரும், நமது உண்மையான நண்பர்கள் கூட, எண்ணினர். எனினும் நாம் உறுதியுடன் நமது கடமைகளைச் செய்து வந்தது காரணமாக, ஆண்டவன் கருணையால் நாம் உயிர் பிழைத்தோம். பிரான்ஸ் வீழ்ச்சிக்குப் பின் ஒரு வருஷ காலம் வரை நாம் தனியாகவே போராடினோம். இத்தாலிய சாம்ராஜ்யத்தை நாம் ஜயித்தோம். அபிஸீனியாவை விடுவித்தோம். கிரேக்கர்களைக் காக்கச் சென்றதில் நமக்குக் கொடுந்தோல்வி ஏற்பட்டது. சென்ற யுத்தத்தைப் போல் இந்த யுத்தத்திலும் பல தோல்விகள் மூலமே நமக்கு இறுதியான பூரண வெற்றி ஏற்பட விருக்கிறது. நம்மிடம் முன் போல் ஆயுதங்கள் இல்லாமலில்லை. இப்போது நாம் தனியாகவும் இல்லை. மிகச் சக்தி வாய்ந்த நாடுகள் நமது கட்சியில் சேர்ந்திருக்கின்றன, யுத்தத்திற்கு ஒரே முடிவுதான் உண்டு. அது எப்போது எவ்வாறு ஏற்படுமென்பது எனக்குத் தெரியாது. ஆனால் நமது வசமுள்ள மகத்தான சாதனங்களைக் கவனிக்கையில் நாம் வர வர அதிகமான நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லக்கூடும்.

ஹிட்லர் செய்த முதல் பெரிய தவறு ரஷ்யா மீது போர் தொடுத்ததுதான். இதில் ஜெர்மனிக்கு ஏற்பட்டதுபோன்ற சேதம் எந்த நாட்டுக்கும் இவ்வளவு சொற்ப காலத்தில் ஏற்பட்டதில்லை.

ரஷ்யரும் நம்மைப்போல் ஒரு போதும் பணிவதில்லையென உறுதிகொண்டார்கள். ஹிட்லர்

(28-ம் பக்கம் பார்க்க)

"ஹரிஜன்" கட்டுரைகள்

"தவறைத் திருத்துங்கள்"

நிருபர்களுக்கு மஹாத்மாஜியின் பதில்

★ ★

ஆங்கிலேய நிருபர் ஒருவர் மகாத்மாவுக்குப் பின்வருமாறு எழுதினார்:—"இந்தியாவிடம் எங்களைப் போன்றசிலர் அத்தியந்த அன்பு கொண்டிருக்கிறோம். நாங்கள் உண்மையாகவே இந்தியாவுக்கு ஊழியம் செய்ய முயன்றிருக்கிறோம். எங்களுக்குத் தொல்லை நேர்ந்துள்ள இந்த சமயத்தில் எங்களிடம் த்வேஷம் பெருகி வருகிறதென்றால் அது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. இந்தியர்கள் விரும்புவது போல நாங்கள் அவ்வளவு அதிகமாக நியாய புத்தியுடன் நடந்து கொள்ளாமலிருந்திருக்கலாம். ஆனால், ஒரு தவறைத் திருத்த இன்னொரு தவறைச் செய்வதா? விரோதியாக இருந்தாலும் துன்பம் நேர்ந்த காலத்தில் அவர்களுக்குச் சற்று ஆதரவு காட்ட வேண்டாமா? எங்களைப் போய்விடும்படி தாங்கள் சொல்லுகிறீர்களே? அதன் மூலம் தாங்கள் தங்களுடைய நாட்டினரை ஜப்பானுக்குப் பணியும்படிச் சொல்வதாகாதா? அந்நியர் படையெடுப்பைச் சமாளிக்க தங்கள் நாட்டினருக்கு அஹிம்ஸா முறையுடன் கூடிய ஆற்றல் போதுமானபடி இல்லையெனத் தங்களுக்குத் திட்டமாகத் தெரிந்தும் தாங்கள் இவ்விதம் சொல்லலாமா? அந்த ஆற்றல் தங்கள் நாட்டினருக்கு இருந்திருந்தால் நாங்கள் இத்தனை நாளாக எங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தி வந்திருக்கமாட்டோம். பழைய பாவத்தை மறந்து புதிதாகத் தோன்றியுள்ள ஆங்கில வாலிபர்களின் நல்லெண்ணத்திலாவது தாங்கள் நம்பிக்கை வைக்கக் கூடாதா? இந்த சந்ததியார் இனி ஏகாதிபத்யக் கொள்கையை மனத்தில் சிந்திக்கவும் மாட்டார்கள். தங்களைத் தவிர காங்கிரஸிலுள்ள மற்றத் தலைவர்கள் அஹிம்ஸையில் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறார்களா? தங்களுடைய நிலை திட்டமாகத் தெரிந்திருக்கிறது. தங்களே பிரிட்டனின் உண்மையான தோழர்."

துவேஷம் சிறிதுமில்லை

மகாத்மா மேற்கண்ட கடிதத்தைப்பற்றி தமது "ஹரிஜன்" பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகிறார்:—

ஆங்கில நண்பர் ஒருவர் மிக்க பரிதாபத்துடன் எழுதிய கடிதத்தின் சாரத்தை மேலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். யுத்தம் ஆரம்பித்ததும் நான் லார்ட் லின்லித்கோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட விஷயத்தையே இப்போதும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலிருந்து நான் பின் வாங்குதற்கு எதுவுமில்லை. எதற்காகவும் நான் வருந்தவேண்டியதுமில்லை. எப்போதும்போல பிரிட்டிஷாருக்கு நான் இப்போதும் நண்பனாகவே இருக்கிறேன். அவர்களிடம் எனக்கு ஒரு சிறிதும் த்வேஷமில்லை. அவர்களது அரிய குணத்தை நான் போற்றுவது போலவே அவர்களுடைய குறைகளையும் உணர்ந்து அவற்றைக் கண்டிக்கிறேன். இந்நாட்டில் பலருக்கு அவர்கள் விஷயத்தில் துவேஷமிருப்பது எனக்குத் தெரியும். அதை நான் மறுக்கவில்லை. அந்தத் துவேஷம் இப்போது நடக்கும் சம்பவங்களை அநுசரித்துப் பெருகிவருவதும் எனக்குத் தெரியும். ஆனால் எடுத்துக்காட்டியுள்ள பரிகாரத்தால் அந்தத் துவேஷம் குறைந்திருக்கிறது. ஒரு விதத்தில் அது அப்படியே ஸ்தம்பித்துப் போயிருப்பதாகவும் சொல்லலாம்.

ஆகவே, இந்த யுத்தகாலத்திலேயே-யுத்தத்துக்குப் பிறகல்ல-பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு விலகிப்போவது நலமென நான் உறுதியுடன் நம்புகிறேன். அவ்விதம் செய்தால் தான் இருதரப்பாருக்கும் நல்லது. உலக நிலையை ஊன்றிக் கவனித்தல் மனக்கசப்புதான் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தெளிவாகத் தெரிகிறது. பிரிட்டிஷார் செய்யும்காரியம் ஒவ்வொன்றும்அவர்களுடைய நன்மைக்கான காரியமாகவே இருக்கிறது. அவர்களின் பாதுகாப்புக்காகத் தான் அவர்கள் ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள் எனப் பிறர் கூறுவது எனக்குச் சரியென்றே தோன்றுகிறது. பொது நன்மைக்கான காரியமெதுவுமே இல்லை.

'சுலபமான காரியமல்ல'

பிரிட்டிஷார் தங்களுடைய பரம்பரை குணத்தை மாற்றிக் கொள்ளுவதென்றால் அது சுலபமான காரியமன்று; ஜாதிச் செருக்கு, பாராட்டுவது ஒரு நல்ல காரியமாகப் பாவிக்கப்படுகிறது. இது இந்தியாவில் மட்டுமல்ல, ஆப்பிரிக்காவிலும் இவ்விதமே நடக்கிறது: பர்மாவிலும் இலங்கையிலும் கூட இக்கதிதான்; ஜாதிச்செருக்கு பாராட்டியே இந்த நாடுகளை அடக்கியாண்டு வருகிறார்கள்.

இது மஹா கொடிய நோய்-இதற்குக் கடுமையான சிகிச்சை வேண்டும். நான் அந்த சிகிச்சை இன்னதெனத் திட்டமாக மேலே சொல்லி விட்டேன். இந்தியாவிலிருந்தாவது, பிரிட்டிஷார் உடனே ஒழுங்கான முறையில் அடியோடு போய்விட வேண்டும். அதோடு அவர்கள் பொதுவாக ஐரோப்பாவுக்கு வெளியே பிரிட்டிஷ் வசமுள்ள எல்லா நாடுகளிலுமிருந்து விலக வேண்டியது நியாயம். அவ்விதம் பிரிட்டிஷார் செய்தால் அதுவே தீரத்துடன் கூடிய சிறந்த காரியமாகும். ஏகாதிபத்யக் கொள்கை அடியோடு ஒழிந்தால், நாஸிக்கொள்கையும் பாஸிஸ்டு கொள்கையும் மாய்ந்தொழியும், ஏகாதிபத்யக் கொள்கையின் விளைவாகவே மேற்கண்ட இரண்டு கொள்கைகளும் கிளைத்து வருகின்றன. அது ஒழிந்தால் இவற்றின் கூர் மழுங்கிவிடும்.

ஆங்கில நண்பர் சொன்னது போல இந்திய தேசிய வாதிகள் உதவி செய்தால் பிரிட்டிஷாரின் துன்பம் நீங்காது. தற்சமயம் அந்தப் பரிகாரம் ஏற்றதன்று. தேசிய வாதிகளுக்கு ஊக்கம் பிறப்பதற்கான வழி என்ன இருக்கிறது? சூரியன் தோன்றினாலல்லவா அதன் உஷ்ணம் இன்னதெனத் தெரியும்? அதைப் போல சுதந்திரம் கிடைத்தாலல்லவா இந்தியருக்கு உற்சாகமும் ஊக்கமும் பிறக்கும்? ஒரு காரியம் சித்தியாகுமுன் சற்று அதிர்ச்சி ஏற்படுவது இயற்கைதான். அந்த அதிர்ச்சி இன்றியமையாததாகும். இந்தியா பெரியதொரு நாடு. அந்த அதிர்ச்சி ஏற்படும்பொழுது இந்தியா எவ்விதம் நடந்து கொள்ளுமென்பதை யார் அறிய வல்லார்? ஆகவே நான் இந்தப் பெரிய காரியம் பலிப்பதற்கான முயற்சியையே இனி பூரணமாகச் செய்ய வேண்டும், பிரிட்டிஷார் இந்தியாவுக்கு இழைத்து வரும் அநீதியை எனக்குக் கடிதம் எழுதிய ஆங்கில நண்பர் உணர்ந்திருக்கிறார். அதை ஒப்புக்கொள்ளுகிறார். ஆகவே அந்தத் தவறை முதலில் போக்க வேண்டும். வெற்றிக்குப் பின்னையில்லாமல் அந்தக் காரியத்தை முன்னாலேயே செய்ய வேண்டும்.



புது டில்லியில் சமீபத்தில் அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் கமிட்டிக் கூட்டம் 'ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸன் தலைமையில் கூடியது: மேற்படி கமிட்டியார் ஒரு தேனீர் விருந்து நடத்தினர்: அநேக முக்யஸ்தர்கள் அச்சமயம் வந்திருந்தனர். விருந்தின் போது ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் ஸர். எச். பி. மோடியுடன் சம்பாஷிப்பதை படத்தில் பார்க்கலாம்.

சீனாவிலிருந்து இந்தியாவுக்கு தூதராக வந்திருக்கும் மிஸ்டர் ஷேன்ஷி ஹுவா. அவர் புது டில்லி வந்து சேர்ந்தவுடன் மேற்படம் பிடிக்கப்பட்டது. (வலது) பர்மா நதியொன்றில் அடிலெய்டிலிருந்து ஆஸ்திரேலியர் ஒருவர் ஓட்டிவந்த விமானம் கீழே இறங்கியது. அப்போது அவர் சில முக்கிய தஸ்தாவேஜிகளைக் கண்டெடுக்க முயன்றார்.

* * * *

வெளியேற்றும் பிரச்னை

கிராமங்களைத் திருத்தியமைக்க யோசனை

நகரில் அவசியம் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லாதவர்கள் நகரினின்றும்வெளியேறலாம் எனத் தாங்கள் யோசனை கூறினீர்களே. போய்த் தங்க இடமில்லாத ஏழை ஜனங்கள் எங்கே போவது? அவர்களை ஏற்று உதவ ஆளில்லாதபோது அவர்களின் கதி என்ன? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு மகாத்மா பின்வருமாறு பதில் எழுதியிருக்கிறார்.

"உண்மையில் இது பெருங் கஷ்டம்தான்! எந்தெந்த மாகாணத்தை இவர்கள் சேர்ந்தவர்களோ அந்தந்த மாகாணத்தினர்தான் இவர்களுக்கு உதவ வேண்டும். நாம் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மையானால் இவ்விஷயத்தில் கஷ்டமிருக்கக் காரணமில்லை. சமூகத்திலேயே புதிய நிலையை ஏற்படுத்த விரும்பினால் இப்போதிருந்தே அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அஹிம்ஸா மனோபாவத்துடன்தான் நான் இப்போது பேசமுடியும். தேசத்தினர் அறிந்தோ அறியாமலோ அந்த வழியைப் பின்பற்றினால் தனிபட்டவர்களும், ஸ்தாபனங்களும், எவ்வித ஆடம்பரமுமின்றி இவ்வித திக்கற்றவர்களுக்கெல்லாம் வசதி தேடலாம். இப்போதே அவ்வித உதவி அளிக்கப்படுகிறது. ஆனால் அது பெருவாரியாக வில்லை. திடகாத்திரமுடையவர்களுக்குத் தர்மமாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. அவர்களுக்குச் சாப்பாடு கிடைக்கும்படி வேலை கொடுக்கவேண்டும். புத்திசாலித்தனத்துடன் இதற்கான ஏற்பாடு செய்தால் சந்தடியில்லாமல் கிராமங்களையே திருத்தியமைத்து விடலாம்."

வேறு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்கு வந்து வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டவர்கள் இந்த நெருக்கடியான காலத்தில் தங்கள் மாகாணத்துக்கு ஓடிவிடுவது நியாயமா? அவர்கள் சௌகரியம் அடைந்த மாகாணத்தில் தங்கி நன்மை செய்ய வேண்டாமா, என நிருபர் கேட்டிருப்பதற்கு மகாத்மா பின்வருமாறு பதில் கூறினார்.

வங்காளம் அஸ்ஸாம் ஆகிய மாகாணங்களிலிருந்து இவ்வித புகார் வருகிறது. பல தலைமுறைகளாக வியாபாரிகள் வேறு மாகாணங்களிலிருந்து இங்கு வந்து தங்கியிருக்கிறார்கள் இவர்கள் தங்கள் நன்மையை நாடி திடீரெனப் போய் விடுவதால் இவர்களிடம் வியாபாரம் செய்தவர்களுக்குக்கஷ்டம்தான். சுலபமாக வேறு சிலர் அங்கு வந்து வியாபாரம் செய்துவிட முடியாது. இவர்கள் கடைகளை மூடி விட்டுப் போவதற்கு முன்பே வியாபாரம் நடப்பதற்கு வேறு வழி தேடினால் தான் நன்மையாகும். அப்போதுதான் அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றியவர்களாவார்கள். வாடிக்கைக்காரர்களே முதலில் ஓடி விட்டால் வியாபாரிகளும் அவர்களைப் பின் பற்றினால் அது வேறு விஷயம். இவ்விஷயத்தைப்பற்றி ஒரு முடிவு கூறுமுன் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டியது அவசியம இதுவிஷயத்தில் வியாபார ஸ்தாபனங்கள் சற்றுசிரத்தைசெலுத்தி பரிசீலனை நடத்தி வியாபாரிகளுக்கு வழி காட்டவேண்டும்.

* * * *

சண்டையைத் தடுக்கவே

நான் வியாசம் எழுதி வருகிறேன்

நிருபர் ஒருவர் மகாத்மாவைப் பின்வருமாறு கேட்டார்:-

"முஸ்லீம்களில் பெரும் பகுதியினர் தங்களைத் தனி நாட்டினர் எனச் சொல்லிக்கொண்டு இந்தியாவைத் துண்டாட விரும்பினால் அவர்களை வேறுவிதமாக நினைக்கும்படி ஒருவரும் வற்புறுத்தமுடியாது. ஹிந்துக்கள் வேண்டுமானால் அதை எதிர்த்துப் போராடலாம். எனக்குத் தெரிந்தவரையில் இரு தரப்பிலும் அதற்காக ஏற்பாடுகள் ஆடம்பரமின்றி நடந்து வருவதாகவே தெரிகிறது" எனத் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

முஸ்லீம்களைப் பொறுத்தமட்டில் அவ்வித ஏற்பாடு ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஹிந்துக்கள் அதற்கான ஏற்பாடுகள் செய்வதாகத் தங்களுக்குத் தெரியும் போலிருக்கிறது. அப்படியிருக்கையில், தங்களுடைய வகுப்பினர் இவ்வித காரியங்கள் செய்வதைத் தாங்கள் தடுக்காமலிருப்பது தவறல்லவா? தாங்கள் எழுதியிருப்பது பயங்கொள்ளித்தனமாகவும், விஷமத்தனமாகவுமிருக்கிறது. ஹிந்துக்களைத் தூண்டிவிடுவதாகவும் அது இருக்கிறது.

மகாத்மா இதற்கு ஹரிஜனில் பின்வருமாறு பதில் கூறியிருக்கிறார்.

பலர் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அவற்றில் மிக்க நிதானமாக எழுதியுள்ள ஒருவரின் கடிதத்தைத் தான் மேலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்தக் கடிதத்திலிருந்தும் விஷமத்தன்மையுடனிருந்த வாக்கியங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. என் மீது காட்டியுள்ள குற்றங்களுக்குப் பதில் சொல்வதே நியாயம் என நினைக்கிறேன். அதற்காக நான் வருந்தவில்லை. என் வாழ்நாளில் நான் எப்போதும் இவ்வித குறைகளுக்குப் பதில் சொல்லிவந்திருக்கிறேன். பொதுஜன ஊழியத்தில் ஈடுபட்ட அனைவரது வாழ்க்கையும் இவ்விதம்தானிருக்கும். ஆனால் விஷயமறியாமல் குறை கூறிவிட்டால் குறை கூறுவோருக்கும் நன்மையில்லை. அவர் மேற்கொண்ட கொள்கைக்கும் சாதகமில்லை. இவ்விதம் விஷய மறியாமல் குறை கூறுவோரை அறிவாளிகள் தடுக்க வேண்டுமென்பதற்காகவே நான் இப்போது இதைப் பற்றி பிரஸ்தாபிக்கிறேன். ஹிந்துக்கள் சார்பாக ஏதாவது ஏற்பாடு நடப்பதாக எனக்கு விசேஷமாக எந்த தகவலும் தெரியாது. இருதரப்பிலிருந்தும் தலைவர்கள் பேசுவதைக் கொண்டும், நிருபர்கள் எழுதுவதிலிருந்தும்தான் நான் இவ்வாறு சொல்லுகிறேன்.ஏற்பாடுகள் நடப்பதாகக் கூறுவதற்கு எனக்குத் தக்க ஆதாரங்களிருக்கின்றன. நிருபர் சொல்லுவது போல ஒருதரப்பில் தான் ஏற்பாடுகள் நடப்பதாக விருந்தால் ஒரு தரப்பாரால் மட்டும் சச்சரவை வளர்க்க முடியாது. இரண்டு கைகளையும் தட்டினால் தான் சப்தம் எழும். எனக்குச் சொந்த வகுப்பினர் என ஒரு தரப்பினரும் இல்லை. என் விஷயத்தில் நம்பிக்கையிருந்தாலும் சரி,இல்லாவிட்டாலும்சரி. சர்வமதத்தைச் சேர்ந்தவர்களை நான் சரிசமத்துவத்துடன் சகோதரர்களாகவே பாவிக்கிறேன். ஆகவே, சண்டையிடாமலிருக்க ஒரு தரப்பாருக்கு மட்டுமின்றி எல்லோருக்கும் தான் யோசனை கூறுவேன். நியாயத்தை அறிந்து நடக்க வேண்டுமென்பதற்காகவே நான் இந்தப் பத்திரிகையில் எழுதி வருகிறேன். ஆகவே என் விஷயத்தையும் என் வியாசத்தின் தன்மையையும் நன்கறிந்து அந்நிருபர் எனது சமாதான முயற்சிக்கு உதவ வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

கிழவனின் உயில்

★

சிறு கதை - என். நாராயணன்

பண ஆசையால் தமயனுக்குத் துரோகம் புரியத் துணிந்தான் வடிவேல். தகப்பனார் உயில் எழுதாமல் இறந்துவிட்டதால் அதை ஒருவருக்கும் தெரியாமல் மறைத்து வைத்து தன் காரியத்தை சாதித்துக் கொள்ள அவன் செய்த முயற்சி என்ன வாகியது என்பதை நீங்களே படியுங்கள்.

"தம்பி, தீனதயாளு!" என்று கூப்பிட்டார் கிழவர் இருமிக்கொண்டே.

"இதோ இருக்கிறேன், அப்பா! என்ன வேண்டும்?" என்றான் தனயன் தீனதயாளு.

மார்க்கபந்து பிள்ளை இருமிக்கொண்டே சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்துகொண்டார்.

"தம்பி, உன்னிடம் ஒரு ரகசியத்தை இவ்வளவு நாளாகச் சொல்லாமல் வைத்திருந்தேன்... அதை இப்பொழுது சொல்லப் போகிறேன்..."

"என்ன ரகசியமப்பா அது?" என்று ஆவலுடன் கேட்டான் தீனதயாளு.

"அது ஒரு வேடிக்கையான கதை. நாம் குடியிருக்கும் வீட்டைப் பற்றியதுதான். கவனமாகக் கேள்," என்று கிழவர் ஆரம்பித்தார்.

இப்பொழுது நாம் குடியிருந்து வரும் வீடு இந்தத் தெருவின் மேலக் கோடியில் தானே இருக்கிறது? இதே தெருவின் கீழ்கோடியில் ஒரு பெரிய மாடி வீடு இருக்கிறதே, தெரியுமா?... ஆம்...வடிவேல் பிள்ளை குடியிருந்து வரும் வீடு தான்!

வடிவேல் பிள்ளையின் தந்தை ஷண்முகம் பிள்ளை ரயில்வே கண்டிராக்டில் ஏராளமாகச் சம்பாதித்துக் குவித்திருந்தான். அந்தக் காலத்தில் அவனுக்கு ஜீரே யோகம் அடித்தது...

ஹும்...அந்த ஷண்முகம் பிள்ளைக்கு இரண்டுபிள்ளைகள். மூத்தவன் முத்து வேல், இளையவன் வடிவேல்.

'மூத்தது மோளை, இளையது காளை' என்ற பழமொழிக்குப் பிரத்தியட்சப் பிரமாணமாயிருந்தனர் முத்து வேலுவும் வடிவேலுவும். முத்து வேல் இயற்கையாகவே ரொம்ப அடக்கமும், சாந்தமும், தெய்வபக்தியுமுடையவனாயிருந்தான், வடிவேல் அவனுக்கு நேர் விரோதம். சுயபுத்தி இல்லாதவன், முன் கோபி, அவசரக் குடுக்கை.

நேர் விரோத முள்ள குணங்களுடைய இரண்டு பிள்ளைகள் எவ்வளவு நாள் தான் சச்சரவு இல்லாமல் காலம் தள்ள முடியும்? வழக்கம் போல் நடக்கும் வாய்ச் சண்டை ஒரு நாள் விபரீதமாகக், கைக் கலப்பில் முடிந்தது. தமையனாயிற்றே என்ற தாட்சண்யம் கொஞ்சம் கூட இல்லாமல், தன் புஜ பல பராக்கிரமத்தைப் பரிபூரணமாக வெளிப்படுத்தி விட்டான் வடிவேல்.

மூத்தவனுக்குக் கோபம் ஒரு பக்கம். ஆத்திரம் மற்றொரு பக்கம். வெட்கமோ பிடுங்கித் தின்றது.

தகப்பனோ பாவம், வியாதியால் படுத்த படுக்கையாயிருக்கிறான். அவனுடைய சமாதானத்தை ஏற்றுக் கொள்பவர்களாகத் தோன்றவில்லை பிள்ளைகள்.

கடைசியில் என்ன? மானத்திற்குப் பயந்த முத்துவேல். தகப்பனிடம், "நீயுமாச்சு, உன் சொத்துமாச்சு! என்னால் இந்த வீட்டில் ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். வியாதியஸ்தனான தகப்பன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான், ஆனால் போனவன் போனவன் தான். இன்று வரையில் திரும்பி வரவில்லை,

மூத்த மகனைப் பிரிந்த சோகமே முற்றிப்போய், ஷண்முகம் பிள்ளை உருகிப் போய் விட்டான். அவன் நிலைமை ரொம்பக் கேவலமாகி விட்டது.

* * * *

முத்துவேல் வீட்டை விட்டுப் போய் மூன்று மாதங்கள் சென்றிருக்கலாம். ஒரு நாள் இரவு சுமார் பத்துமணி இருக்கும். வடிவேல் வேர்க்க, விறுவிறுக்க மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க என் வீட்டிற்கு ஓடி வந்தான்.

"என்னடாவிசேஷம்?" என்று படபடப்புடன் கேட்டேன். "ஐயோ, என் தந்தை போய் விட்டாரே!" என்று கதறி யழுதான் வடிவேல்.

"அட கஷ்டமே! எப்பொழுதடா?... ஏன் எனக்கு முன்னமேயே சொல்லி யனுப்பவில்லை?" என்று வருத்தத்துடன் கேட்டேன். உண்மையிலேயே நானும் ஷண்முகம் பிள்ளையும் சிறு வயதிலிருந்தே உயிர் தோழர்களாக இருந்தோம். பெரியவர்களான பிறகும், எங்களுக்குள் பரஸ்பரம் தொடர்பு இருந்துவந்தது.

"ஐயோ, கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், திடீரென்று மாரடைப்பினால் போய்விட்டாரே!...நான் என்ன செய்வேன்?...எனக்கு ஒருவரும் கிடையாதே!" என்று புலம்பினான் வடிவேல். "உயில் எழுதி வைத்திருக்கிறாரா?" என்று கேட்டேன். "ஐயோ, அதுதானே இல்லை! எனக்கு அதனால் தான் பயமாயிருக்கிறது. என் அண்ணன் இப்பொழுது திடீரென்று எங்கிருந்தாவது முளைத்தானால் என் பாடு திண்டாட்டமாகி விடுமே!...எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது...அப்படிச் செய்தாலென்ன?..."

"என்ன யோசனை தம்பி?"

"என் தந்தை இறந்துவிட்டது இன்னும் ஒருவருக்கும் தெரியாது. நான் ஒருவரிடமும் சொல்லவில்லை, என் வீட்டிலும் நல்ல வேளையாக வேறு யாருமில்லாததும் நம் அதிர்ஷ்டம் தான்!"

"என்னவோ புதிர் போடுகிறாயே?...விஷயம் என்ன?"

"அவசரப்படாதீர்கள். நான் சொல்வதைத் தயவு செய்து கொஞ்சம் கவனமாய்க் கேளுங்கள்...இப்பொழுது இறந்து விட்ட என் தகப்பனாரும் நீங்களும் கிட்டத்தட்ட ஒரு வயதும் முகஜாடையும் உள்ளவர்கள் தான் என்று நினைக்கிறேன். அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு நான் சொல்வது போல் நடந்தால் இருவருக்கும் லாபமுண்டு...உங்களால் முடியுமா?..." "முடிந்தால் எனக்கு ஆட்சேபணையில்லை!" "அப்படியானால் சரி, சொல்கிறேன். நீங்கள் இப்பொழுது என்னுடன் வீட்டிற்கு வாருங்கள். என் தகப்பனாரைத் தூக்கிப் பத்திரமாக ஓரறையில் வைத்துவிடுவோம், நீங்கள் அவரிருந்த படுக்கையில் படுத்துக்கொண்டு போர்வையால் உடம்பு பூராவையும் போர்த்திக்கொண்டு சற்று முகத்தை மாத்திரம் வெளியே காண்பித்துக்கொண்டு, 'லொக், லொக்' கென்று இருமிக்கொண்டிருங்கள். நான் ஓடிப்போய் எங்கிருந்தாவது ஒரு புதிய வக்கீலைக் கூட்டிக்கொண்டு வருகிறேன், நீங்கள் சாகுந்தறுவாயிலிருப்பதால், உயிலை எழுதிவிட உத்தேசித்திருப்பதாகச் சொல்லி, உங்களுடைய- அதாவது, என் தகப்பனாருடைய- சொத்துக்களை யெல்லாம் என் பேரில் எழுதிவிடச் சொல்லிவிட்டால், உங்களுக்கு நூறு ரூபாய் தருகிறேன்...இதில் சிரமமொன்றுமில்லை...கொஞ்சம் தயவு பண்ணினீர்களானால், ஆயுளுள்ளவரையில் தங்களுக்குக் கடமைம்பட்டிருப்பேன்..." என்று அழாக்குறையாகக் கெஞ்சினான் வடிவேல்.

நான் இரண்டு நிமிஷங்கள் யோசித்து விட்டு, "சரி, அதற்கப்புறம்?" என்று கேட்டேன்.

"அப்புறமென்ன?...உயில் எழுதி முடிந்தவுடன், வக்கீல் போய் விடுவார். பிறகு, நீங்களும் எழுந்து போய் விடுங்கள், உடனே நான், என் தந்தை இறந்து விட்டார்!" என்று கூக்குரலிட்டு, ஊருக்குத் தெரியப்படுத்துகிறேன். பிறகு, நடக்க வேண்டிய காரியங்கள் தானே நடக்கின்றன! என்றான் வடிவேல்.

நானும் 'சரி' யென்று ஒப்புக் கொண்டு, அவனுடன் சென்றேன். அவன் தகப்பனாரைத் தூக்கி, ஓரறையில் கொண்டு போய்க் கிடத்தி விட்டு, நான் படுத்துக் கொண்டேன்.

வடிவேலு ஒரு நொடியில் ஓடிப் போய் வக்கீலை அழைத்து வந்தான். என்னைப் பார்த்து, "அப்பா, இதோ வக்கீல் வந்திருக்கிறார்!" என்றான்.

"லொக், லொக்" என்று இருமிக் கொண்டே, நான் வக்கீலைப் பார்த்து, "வக்கீல் ஐயா. நான் சொல்வதைக் கவனமாக எழுதிக் கொள்ளுங்கள்!" என்று ஆரம்பித்தேன். வக்கீலும் 'சரி' யென்று ஆயத்தமானார்.

"லேவாதேவி மூலம் எனக்குச் சேர வேண்டிய ரொக்கமனைத்தும் என் இளைய மகன்...லொக் லொக்...வடிவேலுவுக்குச் சேர வேண்டியது...லொக்...அப்புறம்..." என்றார் வக்கீல்.

"புளியம்பட்டியிலிருக்கும் நஞ்சை நாற்பது வேலியும், வேப்பம்பட்டியிலிருக்கும் முப்பது காணி புஞ்சையும் கருகம்பட்டியிலிருக்கும் தோப்பு வகையறுக்களும் என் இளைய மகன் வடிவேலுக்குச் சேர வேண்டியது...லொக்...லொக்..." "...ஹும்...மேலே..." என்றார் வக்கீல்.

"கடைத்தெருவிலிருக்கும்என் மளிகையும்......லொக் லொக்... இப்பொழுது நான் குடியிருந்து வரும் இந்த வீடும்...லொக்... என் இளைய மகன் வடிவேலுவுக்கே சேர வேண்டியது... லொக்..." "...சரி..." என்றார் வக்கீல், பேனாவை உதறிக் கொண்டே. "இப்பொழுது இந்தத் தெருவின் மேலக் கோடியில் இருக்கும் ஓட்டு வில்லை வீடு, என்னுடைய நெடு நாள் சிநேகிதனும், எனக்கு அநேக தடவைகளில் பல உபகாரங்கள்

(20-ம் பக்கம் பார்க்க)

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

ஹிந்திக்கதை

சாயா

ஸ்ரீ தாராதேவி எழுதியது

வெகு நாட்களுக்குப் பிறகு அன்று சாயா இலாவின் அறைக்கு வந்து கலைந்து கிடந்த அவள் புடவைகளை மடித்து அலமாரியில் வைத்துக் கொண்டிருந்தாள். இலா வந்தாள்; அவள் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அவள் முகம் சிவந்திருந்தது. சாயா தயக்கத்துடன் அவளிடம் "உடம்பு எப்படி இருக்கிறது ஜிஜி?" என்றுகேட்டாள்.

"நன்றாகத்தான் இருக்கிறது. நீ உன் முகத்தை சற்றுக் கண்ணாடியில் பார். என்னைவிட உன் உடம்புதான் கெட்டிருக்கிறது" என்றாள் இலா.

"எங்கே? இல்லையே!" என்று சொல்லிக்கொண்டே சாயா தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

இலா புன்னகையுடன் "சாயா! என்னுடைய வார்த்தையைக் கேட்பாயா?" என்றாள்.

சாயா கைவேலையை விட்டு விட்டு "ஜிஜி என்று உன் வார்த்தையை நான் கேட்கவில்லை?" என்றாள்,

"அப்படியானால் நீ நல்லவள் தான். நான்...நான்......விரும்புகிறேன். நீ டாக்டரை மணந்து கொள்வதை!"

சாயாவின் முகம் கறுவடைந்தது. கையில் இருந்த புடவை கீழே நழுவியது. இலா நரேந்திரனைக் காதலிக்கிறாள் என்பது அவளுக்கு நன்கு தெரியும். நரேந்திரன் எங்கே? இந்த அனாதை சாயா எங்கே? அன்று சந்திர மோஹனிடம் 'சாயாவை மணந்து கொள்' என்று நரேந்திரன் கூறினான். அப்பொழுது இலா 'இது ஒரு நாளும் நடவாது. ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தாலும் நடவாது' என்று சொன்னாள், இன்று அவளே 'சாயா, நீ டாக்டரை மணந்து கொள்' என்று சொல்லுகிறாள்.' சிச்சீ! இவர்கள் எல்லோரும் சேர்ந்து என் உயிரை வாங்க நினைக்கிறார்களா? இந்தச் சொத்துக்கும் துணிக்கும் தானே நான் இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்? இந்த அவமானத்தைச் சகித்துக்கொண்டிருக்கிறேன். இல்லை, முடியாது, இனிச் சகிக்க முடியாது, அவள் மெதுவான குரலில் "நீ...இலா ஜிஜி, நீ என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாய்?" என்றாள்.

"சாயா! நான் உண்மையாகத் தான் சொல்லுகிறேன்!"

"அன்று டாக்டர் கூட சந்திர மோஹன் அண்ணாவிடம் உண்மையாகத் தானே சொன்னார். அன்று நீ சொன்னதை இன்று மறந்து விட்டாயா?"

சாயா மேஜை மேலிருந்த ஜம்பர் ஒன்றை எடுத்து அலமாரியில் வைத்துக்கொண்டே "எஜமானியம்மாள் தன் மருமகனுக்கு அநாதையை மணம் செய்துகொள்ள முடியாத போது டாக்டரின் தாய் மாத்திரம் தன் மகனுக்கு அநாதைப் பெண்ணை மணம் செய்து கொள்ளச் சம்மதிப்பாளா? இதை யோசித்தாயா ஜிஜி? நீங்கள் எல்லோரும் உங்களைப் பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஒருவரை விட ஒருவர் அன்பு காட்ட முன் வருகிறீர்கள். ஆனால் இதனால் என் நிலைமை...இல்லை ஜிஜி! அதிகமாக என்னால் சகிக்க முடியாது. நான் டாக்டரை மணந்து கொள்ள முடியாது. அவர் தாய் சொன்னாலும் சரி, அப்பொழுதும் முடியாது. வெளிப்படையான விஷயம்...நான் அவ்வரை லவலேசமும் காதலிக்கவில்லை. எப்பொழுதாவது காதலிக்கமுடியுமா—அம்மாதிரியான நம்பிக்கையும் எனக்கு இல்லை" என்று கூறிவிட்டு சட்டென்று அவள் அந்த அறையை விட்டகன்றாள். இலா திகைப்புடன் அவள் சென்ற பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகம் வியர்த்தது.

சாயாவுக்கு எஜமானியம்மாள் எவ்வளவோ சொன்னாள், ஆனால் சாயா அங்கே மணம் செய்துகொள்ளவும் ஒப்புக்கொள்ளவில்லை. அங்கே இருக்கவும் ஒப்புக்கொள்ளவில்லை. அழுதுகொண்டே "அம்மா! சந்திரமோஹன் அண்ணாவுடன் என்னை லக்ஷ்மிபுரத்தில் இருக்கும் அத்தை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள். அவளுக்கு எங்கே இஷ்டமோ அங்கே என்னை மணம் செய்து கொடுக்கட்டும். நீங்கள் இந்தச் சள்ளையில் இறங்காதீர்கள்" என்று சொல்லிவிட்டாள்.

நரேந்திரன் வந்து அவளிடம் "சாயா! எங்களிடம் கோபித்துக்கொண்டு நீ போக முடியாது! எங்களுடைய குற்றங்களை உன்னால் மன்னிக்க முடியாதா?" என்றான்.

சாயா நடுங்கும் குரலில் "நீங்கள் ஏன் இந்த மாதிரி பேசுகிறீர்கள், டாக்டர்! யாருடைய குற்றமும் இல்லை. நான் அத்தை வீட்டுக்குப் போகவேண்டும். ஆகையால் செல்கிறேன்" என்றாள்.

இலா ஒன்றும் சொல்லவில்லை: இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் சாயா சென்று விட்டாள்.

சாயாவும் சந்திர மோஹனும் வக்கீல் வீட்டின் வாசலில் வந்து இறங்கினார்கள். அவளுடைய பேரன் விநயனும் வாசலில் ஒரு வேலைக்காரனும் நின்றிருந்தான். விசாரித்த பிறகு வீட்டிலுள்ளவர்கள் யாவரும் ஏதோ கல்யாணத்திற்காக கான்பூர் சென்றிருப்பதாகவும், வீட்டில் நோய் வாய்ப்பட்ட நாட்டு பெண் மாத்திரம் இருப்பதாகவும் தெரிய வந்தது சந்திரமோஹன் சாயாவிடம் "உள்ளே சென்று அவர்களிடம் கேட்டுப்பார்!" என்றான்.

சாயா உள்ளே சென்றாள். அந்த நாட்டுப்பெண் வெளிதேசம் சென்றிருக்கும் தன் கணவனுக்கு கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். கண்களில் கண்ணீர் நிரம்பி இருந்தது. சாயாவைக் கண்டதும் அவள் சட்டென்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு "வா! உட்கார்!" என்றாள்.

தான் தன் அத்தையைச் சந்திக்க வந்திருப்பதாக சாயா சொன்னாள். கைலாஸ் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு "ஆஹா!...நீ தானா அவளுடைய மருமகள். எப்பொழுதும் உன்னைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பாள். என்ன அம்மா செய்வது? அவள்—இறந்து—ஐந்து மாதங்களுக்குமேல் ஆகி விட்டது?" என்றாள்.

சாயாவுக்கு இருந்த இந்த ஆதரவும் போய் விட்டது. உரக்க அழுவோமா என்று தோன்றியது. ஆனால் அவள் தன்னை அடக்கிக் கொண்டு கைலாஸ் தடுத்தும்கூட அவ்விடம் விட்டு வெளியேறினாள். சந்திரமோஹன் வெளியே நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். "வா, அண்ணு" என்றாள் சாயா.

ஏமாற்றத்துடன் அவள் ஜட்காவில் ஏறியமர்ந்தாள். சாயா வண்டிக்காரனிடம் "வண்டியைத் திருப்பி ஸடேஷனுக்கு ஓட்டு!" என்றாள்.

சந்திரமோஹன் மெதுவாக "ஏன், உன் அத்தை என்ன சொன்னாள்?" என்று கேட்டான்.

கண்ணீர் அணை உடைந்தது. சாயா கோவென்று கதறியழுது "அவளும் இறந்து விட்டாள்!" என்றாள்.

அன்று உண்மையாகவே சாயாவிடம் சந்திரமோஹனுக்கு இரக்கம் ஏற்பட்டு விட்டது. அவன் அன்புடன் தன் கைக்குட்டையினால் அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே "சீச்சி! இனி அழுவதால் என்ன பயன்? அழாதே! மாமியுடன் இருக்கலாம். உனக்கென்ன பயம்? உன்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம். இலாவுக்கு உன்னிடம் மிகுந்த பிரியம். நீ திரும்பிச் சென்றால் அவள் மிக்க சந்தோஷமடைவாள். வா, அங்கேயே செல்லலாம்!" என்றாள்.

சாயா தடை சொல்லவில்லை. அன்று இரவே இருவரும் ரயிலேறினார்கள்.

* * * *

சந்திரமோஹன் சொன்னதைக் கேட்டு மூவரும் பயந்து போயினர். "நீ போலீசுக்குத் தகவல் தெரிவித்தாயா?" என்று கேட்டான் நரேந்திரன்,

"அவளைப்பற்றிய பூரா விவரங்களையும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் தெரிவித்திருக்கிறேன். நானே இறங்கி ஒவ்வொரு இடங்களிலும் தேடினேன். ஆனால் சாயாவின் சாயையைக் கூட எங்கும் காணவில்லை. பாவம்! எங்கே சென்றாளோ? அத்தை இறந்தாள் என்ற செய்தி அவளுக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுத்துவிட்டது. ரயிலிருந்து குதித்திருந்தால் பிணமாவது கிடைத்திருக்கும்!" என்றான் சந்திரமோஹன்.

எஜமானியின் உடல் நடுங்கியது. இலா நினைவு தப்பிக் கீழே சாய்ந்தாள். நரேந்திரன் அவளைத் தேற்றலானான்.

* * * *

இரண்டு வருஷங்கள் சென்றன. இலாவுக்கு விவாகம் நடந்துவிட்டது. அவள் நரேந்திரனுடன் தன் புக்ககத்தில் இருந்தாள். இருவரும் ஆனந்தமாக இருந்தார்கள். ஆனால் இருவர் உள்ளத்திலும் சாயாவின் நினைவு முனைப் போல் உறுத்திக்கொண்டிருந்தது. ஒரு நாள் இலா சிங்கார மேஜைமுன் உட்கார்ந்து தலை வாரிக்கொண்டிருந்தாள். சட்டென்று "இலா! எங்கேயடியம்மா இருக்கிறாய்?" என்று மாமியாரின் குரல் கேட்டது.

அவள் உடனே வெளியே வந்தாள். மாமியார் அவளிடம் "உன் கிழ வேலைக்காரன் ராம்

"சாயாதேவி! பம்பாயின் கீர்த்தி வாய்ந்த ஸினிமா ஸ்டார். ஜனங்களின் மனதை கொள்ளை கொள்ளும் அவள் நடனம்......" மேற்கொண்டு இலாவினால் படிக்க முடியவில்லை. அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை—சாயா நடிக்க முன் வந்தது எப்படி? அதற்குக் காரணம் என்ன? பிறகு அவளுக்கு என்ன நேர்ந்தது?—இந்த விவரங்களை எல்லாம் சென்ற இரண்டு வார காலமாக வெளிவரும் இந்த ரஸமான கதையில் படிக்கலாம்.

* * * * *

★ "ஜயம்" மொழி பெயர்த்தது ★

தீன் வந்திருக்கிருன் அம்மா!" என்ருள்.

"ஆமாம்! அம்மா! வெகுநாட்களாயின. அவன் சாயாவைத் தேடச் சென்றிருந்தான். ராம்தீன் பம்பாயில் இருப்பதாக நேற்று அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது, ஒருக்கால் அவள் இருக்குமிடம் தெரிந்துவிட்டதோ என்னவோ? அவனை உள்ளே அனுப்புங்கள்' என்ருள்.

ராம்தீன் உள்ளே வந்தான். இலா அவனருகே வந்தமர்ந்து "ராம்தீன்! ரொம்ப களைத்துப் போயிருக்கிருய்! அந்த நாசமாய்ப் போகிறவளின் தகவல் ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்டாள்,

"ஆமாம் அம்மா, கடவுள் கிருபையால் அவள் இருக்குமிடம் தெரிந்துவிட்டது. அவள் பம்பாயில் இருக்கிருள். ஆனல் அம்மா! நான் அவளைச் சந்தித்த போது அவள் தூர விலகி நின்று நான் உங்கள் சாயா அல்ல, மாமா, என்னை விட்டு விடுங்கள். இந்தா இந்த இருநூறு ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு செல். இதை வைத்துக்கொண்டு உங்கள் சாயாவைத்தேடு! என்ருள். நான் அம்மா! அந்த நோட்டை அவள் முன் வீசி எறிந்து விட்டு வந்து விட்டேன்!" என்ருன்.

"நீ அவளை நன்ருக அறிந்து கொண்டாயா? நமது சாயா தானு? அதில் பிசகில்லையே ராம்தீன்?"

"என்ன அம்மா! நீ பேசுகிருய்? அந்தக் குட்டியை எனக்குத் தெரியாதா? இந்தா இதைப் பார். இதில் அவளுடைய படம் இருக்கிறது, பார் அவள் தானே இல்லையா?" என்று சொல்லி ஒரு விளம்பரக் காகிதத்தை அவளிடம் கொடுத்தான்.

இலா அதைப் படித்தாள்—சாயா தேவி. பம்பாயில் கீர்த்தி வாய்ந்த சினிமா ஸ்டார். ஜனங்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் அவள் நடனம்... மேற்கொண்டு அவளால் படிக்க முடியவில்லை......கண்கள் மின் மின் என பறந்தன. அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவள் தலை நிமிர்ந்து "ராம்தீன்! நீ போய் அவரை உள்ளே வரச் சொல். நாங்கள் இருவரும் இப்பொழுதே சென்று அவளை அழைத்து வருகிருேம்!" என்ருள்.

நரேந்திரன் சந்திரமோஹனுக்கும் தந்தி கொடுத்தான். மூவரும் மறுநாட் காலையிலேயே பம்பாய் வந்து சேர்ந்தார்கள். ஆபீஸுக்குச் சென்று மானேஜரைச் சந்தித்தார்கள். அவர் "இன்று சாயா தேவியை நீங்கள் பார்க்கமுடியாது. மணி நாலாகிவிட்டது. நாலரை மணிக்கு ஆபெரா ஹவுஸில் அவள் நடனத்திற்குச் செல்ல வேண்டும்!" என்ருர்.

"சரி, ஆனல் நாளைக்கு வருகிருேம்." என்று சொல்லிவிட்டு நரேந்திரன் டாக்ஸியை நோக்கி நடந்தான்.

"இப்பொழுது ஆபெரா ஹவுஸுக்குச் செல்லலாம் என்பது என் அபிப்பிராயம். அங்கே சென்று அவள் நமது சாயாவா இல்லையா என்பதையாவது பார்க்கலாம் அல்லவா!" என்ருன் சந்திரமோஹன்.

இலாவும் நரேந்திரனும் இதை ஒப்புக் கொண்டனர். மூவரும் ஆபெரா ஹவுஸுக்குச் சென்றனர். மூன்று முதல் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொண்டு முன்னல் சென்று அமர்ந்தனர். சரியாக நாலரை மணிக்கு நடனம் ஆரம்பமாயிற்று. அவளுடைய ஒவ்வொரு நாட்டிய முத்திரைக்கும் ஜனங்கள் கரகோஷமளித்தனர். இந்தக் கூட்டத்தின் முன் நடனமாடும் சாயாவைப் பார்க்க நரேந்திரனும் சந்திரமோஹனும் சகிக்கவில்லை. அவர்கள் தலை குனிந்தனர். இலா வியப்புடன் சாயாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென்று சாயாவின் பார்வை இவர்கள் பக்கம் திரும்பியது. அவள் முகம் சுண்டியது, கால்கள் தயங்கின. அதே சமயம் இலா எழுந்து நின்ருள். நரேந்திரனும் சந்திரமோஹனும் அவளைத் தொடர்ந்து ஹாலை விட்டு வெளியேறினர். மூவரும் மீண்டும் டாக்ஸியில் ஏறினர். முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டே "சாயா தான். இதைவிட இவள் இறந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும்!" என்ருன் சந்திரமோஹன்,

அன்றிரவு சாயா தூங்கவே இல்லை. அழுது அழுது அவள் கண்கள் வீங்கிப் போயின. காலையில் அவள் ஒரு சாதாரண சேலை யணிந்து ஒன்றும் சாப்பிடாமல் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். மத்தியானம் வேலைக்காரி உள்ளே வந்து "யாரோ ஒரு அம்மாள் உங்களைச் சந்திக்க வந்திருக்கிருள்!" என்ருள்.

"நிச்சயம், என் ஜீஜியாகத் தான் இருக்கும்!' என்று சொல்லிக்கொண்டே சாயா வெளியே ஓடி வந்தாள். இலா நின்று கொண்டிருந்தாள். சாயா அழுது கொண்டே அவள் பாதங்களில் வீழ்ந்து "ஜீஜீ! அந்தமாதிரிப் பார்க்காதே! என்னை நம்பு. நான் முன்போலவே தான் இருக்கிறேன்!" என்று கதறி யழுதாள்!

இலா அவளைத் தூக்கி நாற்காலியில் உட்கார வைத்து தானும் அவள் பக்கத்தில் அமர்ந்து "அது எனக்குத் தெரியும் சாயா! நீஎப்படி இந்த வேலைக்கு ...நீ அன்று தினம் சொன்னுய். 'ஒருவரைவிட ஒருவர் அன்பு காட்டுகிறீர்கள். அதனல்?..." என்ருள்.

"அதொன்றையும் சொல்லாதே ஜீஜி. என்னை வெட்கமடையச் செய்வதினல் யாதொரு லாபமும் இல்லை. என் தவறை நான் நன்கு உணர்ந்துவிட்டேன். அந்தச் சமயம் நான் கோபத்தினல் குருடியாகிவிட்டேன். ஏழை வீட்டுப் பெண்ணை ஒருவரும் மணம் செய்து கொள்ள விரும்பவில்லை. இதனல் பணக்காரர்களிடம் எனக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. நான் விரும்பினேன்...நான் நான்..."

"நான் அதை அறிந்து கொண்டேன். சாயா! வா! வீட்டுக்குச் செல்லலாம்!"

"எனக்கு இனி வீட்டில் இடமிருக்கிறதா ஜீஜி! இதையெல்லாம் கேள்விப்பட்டால் அம்மா என்னை உள்ளே நுழைய விடுவாளா?"

"அப்படியானல் என்னுடன் இருக்கலாம்!" மனதிற்குள் சாயா நடுங்கிஞள். "ஜீஜி! என்னை மன்னித்துக் கொள். என்னைப் போன்ற துரதிர்ஷ்டம் பிடித்தவள் வீட்டுக்கு வந்தால் உங்கள் குடும்பத்திற்கு அசுபம் ஏற்படும். நான் அங்கே வரமாட்டேன்!" என்ருள்.

சந்திரமோஹன் அங்கே வந்து "சாயா! நீ அந்த இரண்டு இடத்திற்கும் போக விரும்பாவிட்டால் வேண்டாம். வா, என்னுடன் வா!" என்ருன்.

"சாயா! உனக்காக அண்ணு இதுவரை கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அம்மா ஒன்றும் சொல்ல மாட்டாள்'. நீங்கள் இருவரும் என்னுடன் வாருங்கள்!" என்ருள் இலா.

(தொடரும்)

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.
Please apply at once to:—
S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.
நஞ்சன்கூட பல்பொடி
ஜீர்ணப் கூலாயில்
ஸ்நான தைலம்
கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்
சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)



அலஹாபாத்தில் தாகூர் நகரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட இடம்.

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிருன். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனுன ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிருன். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிருன். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிருள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிருன். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிருன். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிருன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிருன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிருள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிருன். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிருன். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிருள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிருள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிருர் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன. மேலும் சில பரிச்சயங்கள் இவர்களுக்கு ஏற்படுகின்றன.

11

மறு நாள் அதிகாலையிலேயே எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு ராஜலக்ஷ்மி ரதனை கூட அழைத்துக்கொண்டு வெளியே போய் விட்டாள் என்று நான் தூங்கி எழுந்ததும் கேள்விப்பட்டேன். அவள் அந்த மூன்று நாள்களுக்கு நடுவில் வீட்டுக்குத் திரும்பி வர முடியாது என்ற தகவலையும் அறிந்தேன். அங்கே ஏதோ பிரமாதமாக நடந்தது என்பதுமல்ல. இருபது பிராம்மணர்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். ஏதோ பிராம்மண சந்தர்ப்பனை, தானம் இவைகள் நடப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. என் ஜன்னலிலிருந்தே பார்த்தேன். அது என்ன வ்ரதம்? அதைஅநுஷ்டிக்கும்விதமென்ன? அதைச் செய்து முடிப்பதால் ஸ்வர்க்கத்தின் பாதை எவ்வளவு தூரம் சுலபமாகும்? இதொன்றும் எனக்குத் தெரியாது; தெரிந்து கொள்ள எனக்கு ஆவலுமிருக்கவில்லை. ரதன் ஒவ்வொரு நாளும் மாலையில் திரும்பி வந்து விடுவான்.

"ஏன் பாபு, நீங்கள் ஒரு தடவை அங்கே போய் வரக்கூடாதா?" என்ருன் அவன்.

"அதனல் என்ன? யாருக்கு என்ன பிரயோஜனம்?"

"அப்படியானல் போகவே மாட்டீர்களா?"

"இல்லை. போகவே போவதில்லை. உன்னுடைய எஜமானி என்ன சொல்லுகிருள்.

"அவர்களுடைய இஷ்டம் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். நீங்களில்லாவிட்டால் அவர்களுக்கு ஒன்றும் ஓடுவதில்லை. ஆனல் என்ன செய்வோம்? கேட்கிறவர்களுக்கெல்லாம் அவர்கள் 'பலஹீனமான' சரீரம், இவ்வளவு தூரம் வந்து திரும்புவது என்ருல் உடம்புக்குக் கெடுதலோ என்று பயமாக இருக்கிறது' என்று பதில் சொல்லுகிருர்கள்."

"அதுதான் சரி, அதைத் தவிர உனக்குத்தான் தெரியுமே ரதன், எனக்கிந்த பூஜை, அர்ச்சனை, தானதர்மங்கள் இவற்றிலெல்லாம் பெருத்த வெறுப்பு என்று?"

"அது சரிதான்," என்ருன் ரதன்.

ஆனல் அப்பொழுது திடீரென்று ஒருநல்ல செய்தி கிடைத்தது. எஜமானியம்மாளுடைய சௌகரியங்களைக் கவனித்துக் கொள்வதற்காகக் கூப்பிடாமலேயே, காசிநாத குசாரி மஹாசயர் தன் மனைவியுடன் அங்கே போய்ச் சேர்ந்தார் என்று நான் தெரிந்து கொண்டு, "மனைவியையும் கூட்டிக் கொண்டுபோயிருக்கிருரென்ரு சொல்லுகிருய் ரதன்?" என்று அவனைக் கேட்டேன்.

"ஆமாம் பாபு, அதுவும் கூப்பிடாமலேயே!" இதனடியில் ராஜலக்ஷ்மியினுடைய சாமர்த்யம் ஏதோ வேலை செய்திருக்கிறது என்று அறிந்து கொண்டேன், ஓஹோ! இதற்காகத் தானு அவள் தன் வீட்டையே விட்டுவிட்டு பிறர் வீட்டில் போய் எல்லாவற்றையும் செய்தாள்?

"வினுவைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு பெரியவள் அப்பா. என்ன அழுகை அழுதாள். சின்னம்மா தன் கையாலேயே பெரியவளுடைய சரணங்களை அலம்பி, ஆஸனமிட்டு உட்கார்த்தி வைத்து, தன் கையாலேயே பரிமாறினுள். நம் அம்மாவினுடைய கண்களிலிருந்து ஜலம் பெருகிக் கொண்டே இருந்தது. இதையெல்லாம் பார்த்து கிழவர் குசாரி மஹாசயர் ஒரேயடியாக தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். இனிமேல் பாபு—இந்த வ்ரதம் முடிந்ததும் இரண்டு குடும்பமும ஒன்ருகிவிடும். இதற்கெல்லாம் காரணமாயிருந்து இதை நடத்தி வைத்த பெருமை நம் எஜமானியம்மாளுடையது."

ஸுநந்தா நடந்துகொண்டதில் எனக்கேதும் ஆச்சரியமில்லை. அவளுடைய சுபாவம் எனக்குத் தெரியும். ஆனல் ராஜலக்ஷ்மி மேல் எனக்கிருந்த கோப மனஸ்தாபங்களெல்லாம் சரத்காலத்து மேகங்களைப்போல பார்த்துக்கொண்டிருக்கும் போதே மறைந்து போய்விட்டன.

அந்த இரண்டு சகோதரர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த பிரிவு உண்மையானதுமல்ல: இயற்கையானதுமல்ல. உள்ளத்தில் யாதொரு களங்கமுமில்லாமல் வெளியில் மட்டும் இவ்வளவு பெரிய பிரிவு ஏற்பட்டால் அதை பலஹீனப்படுத்தி மறுபடியும் உள்ளங்களை சாமர்த்யமாகவும், அனுதாபத்துடனும் ஒட்ட வைக்கும் திறமை வேறு யாருக்கிருக்கிறது? இந்த உத்தேசத்துடன் தான் அவள் ரகசியமாக முயற்சி செய்துகொண்டு வந்திருக்கிருள். என் மனதிற்குள்ளேயே அவளுடைய நல்லெண்ணத்தையும் வெற்றியையும் வாழ்த்தினேன். கொஞ்ச நாளாக என் மனதில் சுமந்துகொண்டிருந்த சுமை பூராவும் திடீரென்று விலகி இன்று நான் நிம்மதியாக ஆனேன், ஏந்த சாஸ்திரோக்தமான விரதத்தை அவள் அனுஷ்டித்தாளோ அது எனக்குத் தெரியாது. ஆனல் இப்பொழுது அவளுடைய மூன்று நாள் வ்ரதம் முடிந்து அவள் திரும்பும்போது அவளைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு அப்பொழுது ஏற்பட்ட அவா வெகு நாட்களுக்குப் பிறகு நினைத்துப் பார்த்தபொழுதுகூட புதிதாக இருந்தது.

மறுநாட் காலையில் ராஜலக்ஷ்மி வரமுடியவில்லை. இந்த மாதிரி அதிர்ஷ்டத்தை ஒருதரம் பார்த்து விட்டு வந்து விடுவது கூடாது. சிறிதுகாலம் கழித்துவருகிறேன் என்று ரதன் மூலம் சொல்லி அனுப்பினுள். பக்கத்தில் எங்கோ வக்ரேச்வரம் என்று ஒரு தீர்த்தம் இருந்ததாம். அங்கே ஜாக்ரத தேவதையும், வென்னீர் ஊற்றும் இருந்ததாம். அதில் ஸ்நானம் செய்துவிட்டால் செய்தவாகள் மட்டுமல்ல; அவர்களுடைய பித்ரு தேவதைகள், மாதுர் தேவதைகள், மாமனுர் தேவதைகள் இவர்களுடைய மூன்று கோடி ஜன்மம் எடுக்கவேண்டிய பாபம் நீங்கி ஸ்வர்கப்ராப்தி யடைவார்கள். கட்டை வண்டி உடனே புறப்பட்டுவிட்டது. ஏதோ முக்யமான இரண்டு மூன்று வஸ்துக்களை ரதன் வேலைக்காரனிடம் கொடுத்து விரட்டினுன். அந்த துர்பாக்யவான் மூச்சுத்திணர ஓடினுன். ராஜலக்ஷ்மி திரும்பிவர ஏழெட்டு நாளாகுமென்று அறிந்தேன்.

இன்னும் ஏழெட்டு நாட்களா? பழக்கத்தாலோ என்னமோ இன்று அவளைப்பார்க்க வேண்டுமென்று ஒரு ஆவல் ஏற்பட்டது. ஆனல் அவள் தீர்த்த யாத்திரை போகப்போகிருள் என்று ரதன் மூலம் கேள்விப்பட்டதும் என் உள்ளத்திலிருந்த ஏமாற்றமும், கோபமும் மாறி பரிதாபஉணர்ச்சியையும் வேதனையையும் உண்டாக்கின. பியாரி உண்மையிலேயே பரிபூர்ணமாக இறந்து போய் அவளுடைய கர்மபலன்களின் பாரத்தைத் தாங்கவொட்டாது, இனறு ராஜலக்ஷ்மி உள்ளமும், உடலும் உருக அந்த பாரத்தை கழிப்பதற்கான வழியைத்தேடி அலையலானுள். இடைவிடாமல் அவள் அனுப

சமீபத்தில் டில்லி சாவ கலாசாலைப் பட்டமளிப்பு விழா நடந்த போது உப அத்யக்ஷகர் ஸர் மாரிஸ்க்வயர் தலைமை வகித்தார். இந்தியா ஸர்க்கார் கல்வி மெம்பர் ஜனம் என். ஆர். ஸர்க்கார் பட்ட மளிப்பு விழாப் பிரசங்கத்தை புரிந்தார்.

ஓரிடத்தில் இருப்பதில்லை என்று தீர்மானித்த பிறகு அங்கே தங்குவது எவ்வளவு கஷ்டம்! ஆனல் அப்பேர்ப்பட்ட வேதனை எனக்குக் கொஞ்சம்கூட இருக்கவில்லை. அது என்னுளும் என்னுள் புதைபட்டுக்கிடக்க வேண்டியதுதான். ராஜலக்ஷ்மியைக் காதலிக்கும் உரிமையை வாழ்க்கை எனக்கு அளிக்கவில்லை. இந்த ஏகாக்கிரமான அன்பும், இந்தச் சிரிப்பும் ஊடலும், வெட்கமும் கோபமும், இந்தத் தியாகமும் இந்த நெருங்கிய சேர்க்கையும், இதெல்லாம உலகத்தின் பார்வையில் வியர்த்தமானது. அதேபோல வரப்போகும் பிரிவினையின் தாங்க முடியாத உள்ளப் பொருமலும் வெளியுலகத்துப் பார்வையில் அர்த்தமற்றுதான் இருக்கும். எல்லாவற்றையும்விட இப்பொழுது இந்த விஷயம்தான் என்னை அதிகமாக வாட்ட ஆரம்பித்தது; ஒருவருடைய படமுடியாத துக்கம் மற்ளெருவர் கண்ணுக்குக் கேலியாகவும் நகைப்புக்கிடமாகவும் இருப்பதுபோன்ற வீழ்ச்சி நிலை உலகத்தில் வேறொன்றும் இல்லை. ஆனலும, அது அப்படித்தான் இருக்கிறது.

சமூகத்தின் நடுவில் இருந்து கொண்டு அதன் தர்மத்திற்கு மதிப்பு கொடுக்காவிட்டால், அதற்கு துரோகம் செய்தால் பிறகு யாரிடம் போய் முறையிடுவது? இந்தப் பிரச்னை என்று முள்ளது. என்றும் தீராதது உலகம் பிறந்தது முதல் இன்று வரை இதே பிரச்னை திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருக்கிறது. எதிர் காலத்திலும் யோசனை எட்டும்வரை இதற்கு விதாயகம் இருப்பதாகவும் காணும்! இந்த அநியாயம் யாரும் கோராதது. ஆனலும் இப்பேர்ப்பட்ட சம்பத்து மனிதனுக்கு வேறெது இருக்கிறது? துர்ப்பாக்கியர்களான ஆண் பெண்களுடைய இந்த உள்ளக் குமுறலின் மௌனவேதனையைப் பொருள்ளாககொண்டு யுகம் யுக

ஸங்கீத சிந்தாமணி	...	ரூ. 3
திராவிட கானம்	...	ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை		ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனம். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷி மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

வித்த கலக்கமும் 'அவளுடைய உள்ளத்தையே' உடைத்துக் கொண்டு வெளியே புறப்பட்ட அவள் போக்கற்ற வியாகூலமும் இன்னுமா தீரவில்லை? கூண்டில் அடைபட்ட பறவைபோல அவள் இரவு பகலாக் கம்பிகளில் தலையை மோதிக்கொண்டே தான் சாகவேண்டுமா? அந்தக் கூண்டின் இரும்புக் கம்பி போல நான் என்னுளும் அவள் விடுதலையடையாமல் வழியை அடைத்துக் கொண்டிருக்க வேண்டுமா? வாழ்க்கையில் நான் அவளுக்கு ஒன்றுமே செய்ய வில்லை; என்னைமட்டும் ஆயுள் பூராவும் கால் கட்டாகப்பெறும் துர்ப்பாக்கியத்தைக் கடவுள் அவளுக்கு அளித்திருக்கிருனு? அவள் என்னிடம் உள்ளம் முழுவதும் பறிகொடுத்து அன்பு செலுத்துகிருள். அந்த மோகத்தை அவளால் போக்கவே முடியவில்லை. இதற்காக அவளுடைய நற்கருமங்கள் யாவும், எதிர் காலமெல்லாம் தடைபடவேண்டுமா?

அவளை விட்டு விட்டுப்போய் விடவேண்டும். என் மனதிற்குள்ளேயே எண்ணலானேன். முன்போல் அல்ல. இந்தத் தடவை: மனப்பூர்வமாக அவளுடைய் காரியங்கள் நிறைவேற வேண்டுமென்று ஆசீர்வாதம் செய்துவிட்டு பாக்கி நாட்களில் அவளுக்கு விடுதலை அளித்து விடுகிறேன். இந்த மாதிரி, முடியுமானல் அவள் திரும்பி வரு முன்பே நான் இந்த தேசத்தைவிட்டு வெளியேறி விடுகிறேன். எதற்காகவும், என்ன நல்லது கெட்டது நேர்ந்தபோதிலும் நான் இனிமேல் அவள் முன்பு வருவதில்லை. இந்தத் தீர்மானத்தை நான் சாதிக்க முடியவில்லை என் ருலும், இந்த மாதிரி யோசனை செய்தேன்.

முன்பொருநாள் பாட்னவில் பியாரியிடமிருந்து நான் விடை பெற்றுக் கொண்டபொழுது அவள் தன்னுடையமேல் மாடியின் வராந்தாவில் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தை கூடக் கிளம்பவில்லை. ஆனலும் அந்த அடைபட்ட உள்ளத்து கண்ணீர்ப்பெருக்கு வழி பூராவும் என் காதில் ஒலித்துக்கொண்டே என்னைத் திரும்பி அழைக்கவில்லையா? ஆனல் நான் திரும்பவில்லை. நாட்டையே விட்டு விட்டு எங்கோ வெளி தேசத்துக்குப் போய்விட்டேன். அனல் அந்த உருவமற்ற, பாஷையற்ற தவிர்க்கமுடியாத ஆகர்ஷணம் என்னை இரவு பகலாக இழுக்க ஆரம்பித்தது. தேசம் விதேசம் என்றதெல்லாம் அதனிடத்தில் செல்லவில்லை. மறுபடியும் திரும்பி வந்தேன். வெளியுலகத்துக்கு நான் தோற்றுப் போனது போலத் தோற்றும்; மலினமடையாத காந்தியுடன் என் கழுத்தில் விளங்கும வெற்றி மாலை அவர்கள் கண்ணில் படாது படவில்லை.

அப்படித்தான் ஆகவேண்டும். வெகு சீக்கிரத்தில் மறுபடியும் ஒரு நாள் அவளிடமிருந்து பிரியும் கணம் வந்து தீரும். அன்றும் ஒரு வேளை அவள் முன்போலவே மௌனமாக இருக்கலாம், ஆனல் இந்தத்தடவை நான் கடைசியாக அவளிடம் விடை பெற்றுக்கொண்டு போகும் வழியில் அந்தக் கண்ணீர் அடைப்பு ஒரு வேளை என்னைக் கூப்பிடாமல் இருக்கலாம்.

மழை ஜலம் போவதற்கான குழாய்கள் & பிட்டிங்குகள்



எல்லா நிலைகளுக்கும், அழுத்தம், நீடித்த உழைப்பு, நம்பிக்கையான உழைப்பிற்கு வார்பட இரும்பு குழாய்களுக்கு இணையொன்றுமகிடையாது.

இந்தியாவிலேயே நவீன இயந்திர தளவாடங்களை அமைத்துள்ள ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங்ஸ் கம்பெனியார்கள் பல வருஷங்களாக வார்பட இரும்பு தண்ணீர் குழாய்கள், இதர வகை குழாய்கள், பிட்டிங்குகள் முதலியவற்றைப் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிகேஷனுக்குத் தயாரிக்கின்றனர்.

காட்லாகும், விலை விவரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.
தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :.
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.



இத்தாலியக் கைதிகள் வருகை.

கோண்டார் வீழ்ச்சிக்கப்புறம் அங்கிருந்த 10000 பேர்கொண்ட இத்தாலியப் படை சரண் புகுந்தது. இத்தாலி கிழக்காப்ரிகாவில் ஸ்தாபித்த சாம்ராஜ்யமும் இதற்கப்புறம் சிதறுண்டது. இப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பல பாகங்களிலும் ஆயிரக்கணக்கான இத்தாலியக் கைதிகள் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

மாக எவ்வளவு புராணங்கள் எவ்வளவு கதைகள், எவ்வளவு காவியங்களின் வானை எட்டும் வனப்பு மாளிகைகள் கட்டப்பட்டிருக்கின்றன!

ஆனல் இது இன்று அடங்கி விடுமா? வேண்டும் என்று மனதிற்குள்ளே தீர்மானம் செய்து கொண்டேன். ராஜலக்ஷ்மிக்கு தர்மகாரியத்தில் மனது செல்லட்டும், வக்கிரேஸ்வரரை நோக்கி அவள் செல்லும் பாதை சுலபமாக இருக்கட்டும், அவள் மந்திர உச்சரிப்பு நன்ருகத் திருந்தட்டும், அவள் புண்ணியம் சம்பாதிக்கும் முயற்சி தடையின்றி நிறைவேறட்டும் என்று ஆசீர்வாதம் செய்கிறேன். என்னுடைய துக்கத்தின் சுமையை நானே தனியாகத் தாங்கிச் செல்கிறேன்.

மறு நாள் காலையில் தூக்கம் கலைந்தவுடனேயே அந்த வீடு, வாசல், முதலிய எல்லா பாசங்களும் அறுந்து விட்டன போல எனக்குத் தோன்றிற்று. ராஜலக்ஷ்மி எப்பொழுது திரும்பி வருவாள் என்பது நிச்சயமில்லை. ஆனல் மேலும் ஒரு நிமிஷம்கூட அங்கே தாமதம் செய்ய மனது இடங் கொடுக்க வில்லை. ரதன் ஸ்நானத்திற்காக துரிதப்படுத்த ஆரம்பித்தான், ஏனென்ருல் போகும்போது ராஜலக்ஷ்மி என் விஷயமாக யாதொரு அசிரத்தையும் தாமதமும் ஏற்படக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு போட்டுவிட்டுப் போயிருந்தாள். தினமும் சாப்பிட்ட மணியைக் கவனித்து ரதன் குறித்து வைத்திருக்க வேண்டும். திரும்பி வந்ததும் எல்லோருக்கும் ஒரு மாதச சம்பளம இனமாகக் கொடுப்பதாகச் சொல்லி யிருந்தாள்.

முதல் நாள் இரவு தூக்கம் மிகவும் கெட்டுப் போய் விட்டதால் குறித்த நேரத்திற்கு முன்பே ஸ்னன ஆகாராதிகளை முடித்துக் கொண்டு படுத்தது தான் தாமதம். தூங்கிப் போய் விட்டேன்.

தூங்கி எழுந்த பொழுது மணி கிட்டத்தட்ட நாலாகி விட்டது. சில தினங்களாகத் தவருமல் வெளியே உலாவப் போய்க் கொண்டிருந்தேன். இன்றும் முகம் கழுவிக்கொண்டு டீ குடித்து விட்டு வெளியே கிளம்பினேன்.

வீட்டுக்கு வெளியே ஓர் ஆள் நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் கடிதம ஒன்று இருந்தது. சதீச பரத்வாஜன் எழுதியனுப்பின கடிதம். அவன் மிகவும் உடம்பு அசௌகரியமாகக் கிடக்கிருன் என்று யாரோ எழுதியிருந்தார்கள். நான் வராவிட்டால் அவன் இறந்துபோய் விடுவான்என்றும் எழுதியிருந்தது.

"அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது?" என்று வந்தவனை நான் கேட்டேன்.

"காலரா!" என்ருன் அவன்.

நான் வெகு சந்தோஷத்துடன் "சரி, கிளம்பு!" என்றேன்.

அவனுக்குக் காலரா கண்டதற்காக சந்தோஷம் அல்ல. வீட்டிலிருந்து நழுவி சிறிதாவது தூரப் போகும் சந்தர்ப்பம் நேர்ந்ததே என்பதைக் குறித்துத்தான்.

ரதனைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப்போவோமா என்று ஒரு நிமிஷம் யோசித்தேன். ஆனல் நேரமில்லை. நான் இருந்த நிலைமையிலேயே அப்படியே புறப்பட்டு விட்டேன், வீட்டில் யாருக்குமே தகவல் தெரியாது.

12

பிறகு நான் சதீச பரத்வாஜனுக்கு சிகிச்சை செய்தது, அவன் இறந்து போனது அப்புறம் நான் இங்குமங்குமாகத் திரிந்தது—இதெல்லாம் தனிக் கதை. அந்த நீண்ட யாத்திரையின் இறுதியில் மறுபடி கங்காமாடிக்கே திரும்பி வந்து சேர்ந்தேன் என்று நான் சொன்னல் நீங்கள் ஆச்சரியப்படவேண்டியதில்லை.

கங்காமாடி வீட்டுக்கு நான் வந்து சேர்ந்த பொழுது பிற்பகல் வேளையிருக்கும வாசல் படியின் இருபுறங்களிலும் வாழை மரங்கள் கட்டியிருந்தன. மேலே மாவிலைத். தோரணம். வெளியே பலர் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார்கள். மாட்டு வண்டி சத்தம் கேட்டு அவர்கள் தலை நிமிர்ந்து பார்த்தார்கள். அந்த சத்தத்தைக் கேட்டு இன்றுமொரு பேர்வழி எதிரே வந்து நின்ருன். அவன் வஜ்ரானந்தன் அவன் என்னுடன் பேசின பேச்சைக் கேட்டுச் சிலர் அந்த விசேஷத் தகவலைச் சொல்ல உள்ளே எழுந்து போனர்கள். ஸ்வாமிஜீ உடனே மளமளவென்று ஏதேதோ பேச ஆரம்பித்தார்.

(தொடரும்.)

சுலபமான ஸன்லைட் வழியின் பயனக ஆடைகள் புதிய தோற்றமளிக்கின்றன. வெகு காலத்திற்கு நீடித்து உதவவும் செய்கிறது. ஸன்லைட் ஸோப் பரிசுத்தமானது. ஸன்லைட் ஸோப்பை உபயோகித்த ஆடைகளும், சருமமும் நறு மணத்துடன் கமழுகின்றன.

கடையில் சன்லைட் சோப் வாங்கும்பொழுது போலியால் ஏமாறுமல் பார்த்து வாங்குங்கள்

S. 45—460 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

ஒரு நீதிக்கதை

ஸ்ரீ எ. எஸ். பி. அய்யர்

ஐ. ஸி. எஸ். எழுதியது

கடவுளினுல் பொருக்கி எடுக்கப்பட்ட வர்க்கம்

ஆங்கிலேய இந்தியர்கள் கடவுளினுல் தெரிந்தெடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்றும், கடவுளின் அன்பிற்குப் பாத்திரமான வர்களென்றும் ஒருவன் மூட நம்பிக்கை கொண்டிருந்தான்: மானிட சம்ஸர்க்க விவகரண நூல் வல்லோர்கள் அவ்வாறு எண்ணுதல் தவறென்று சொல்வதைக் கேட்டு அவன் சஞ்சலமடைந்தான். தன்னுடைய அபிப்பிராயம் உண்மையா, தவரு என்று அறிந்துகொள்ள, அவன் மானிட சம்ஸர்க்க விவகரண நூலில் திறமை வாய்ந்த ஒருவரிடம் சென்று, 'ஐயா, கடவுளினுல் பொருக்கி எடுக்கப்பட்ட வர்க்கம் என்று ஒரு வர்க்கம் இருக்கிறதா?' என்று கேட்டான். 'ஆம். அத்தகைய வர்க்கம் ஒன்று இருக்கத்தான்வேண்டும்' என்று நூல் வல்லார் பதிலளித்தார், 'ஆகவே, ஆங்கிலேய-இந்தியர்கள்தான் அந்த வர்க்கம் என்று நீர் கருதுகிறீரல்லவா?' என்று ஆங்கிலேய-இந்தியப் பிரியன் கேட்டான். 'கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல வர்க்கங்களுக்குள் அவர்களுடைய வர்க்கமும் ஒன்ருயிருக்கக் கூடும்' என்று அந்த அறிவாளர் கூறினர். 'பல வர்க்கங்கள் இருப்பதற்கு நியாயமுண்டா?' என்று அவன் கேட்க, 'பார்லிமெண்டு என்னும் சட்ட பரிபாலன சபையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பல அங்கத்தினர்கள் இருப்பதற்கு நியாயமுண்டா?'' என்று அவர் பதிலளித்தார். பார்லிமெண்டில் பல அங்கத்தினர்கள் இருப்பதற்கு நியாயமுண்டானுல், கடவுளினுல் ஏன் பல வர்க்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கப்படாது என்று அவர் சொல்வதைக் கேட்டு, 'அப்படியானுல் தாங்கள் எந்த வர்க்கங்களைத் தெரிந்தெடுக்கப்பட்ட வர்க்கங்களென்று கருதுகிறீர்?'' என்று ஆங்கிலேய—இந்தியரின் சிநேகிதன் கேட்டான். அவர் பின்வருமாறு பதிலளித்தார். 'அந்த வர்க்கங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சிருஷ்டிப்பதற்கும், காப்பதற்கும் அழிப்பதற்கும் ஆக மூன்றுவிதமாக நாம் பிரித்துக்கொள்ளலாம். பண்டைக்காலத்தவர்களாகிய எகிப்து தேசத்தவர்கள், ஹிந்து மதஸ்தர்கள், சீன தேசத்தவர்கள், கிரேக்கர்கள் என்பவர்களையும், தற்காலத்தவர்களாகிய ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், ஜெர்மனி தேசத்தவர் முதலியவர்களையும் சிருஷ்டித் தொழிலைச் செய்யும்படிக்கு கடவுள் பொருக்கியெடுத்திருக்க வேண்டும். ருமானியர்கள் அரேபியர்கள், பாரசீக தேசத்தவர்கள் முதலிய பண்டைக்காலத்தவர்களையும், நார்வே தேசத்தவர்கள் ஸ்வீடன் தேசத்தவர்கள் ஹாலண்டு தேசத்தவர்கள் முதலிய தற்காலத்தவர்களையும் கடவுள் காப்பதற்காகத்தேர்ந்து வைத்திருக்க வேண்டும். பண்டைக்காலத்தில் ஹூணர்களையும் தற்காலத்தில் துருக்கி தேசத்தவர்களையும் கடவுள் அழிக்கும் தொழிலைச் செய்வதற்காக நியமித்து வைத்திருக்க வேண்டும். காலஞ் செல்லச் செல்ல மேற்கூறிய வர்க்கத்தினர் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்து வராமற் போனுல், அவர்கள் தங்கள் அதிகாரத்தை இழந்து விடுவார்கள். அப்போது அந்த அதிகாரம் வேறு வர்க்கத்தினரைச் சேர்ந்துவிடும். பண்டைக் காலத்து வர்க்கத்தினர் மேற்கூறிய காரணத்தினுல், தங்களுடைய உரிமையை இழந்திருக்கின்றனர். அவ்வாறு தள்ளப்பட்ட ஒரு வர்க்கம் மறுபடியும் கடவுளினுல் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் தேர்ந்தெடுக்கப்படலாம்' இயற்கைக்கும் நியாயத்திற்கும் விரோதமான இந்தக்கொள்கை தங்களுக்குஎப்படித்தெரிந்தது?'' என்று அவர் கேட்டார். 'இதை நான் சரித்திர மூலமாகவே அறிந்துகொண்டேன்' என்று அவர் சொன்னுர். 'கொள்கைகளுக்கு எப்போதும் சரித்திரத்தை ஆதாரமாகக் கொள்ளக் கூடாது. சரித்திரம் என்னும் அஸ்திவாரம் பலமற்றதாதலால் சீக்கிரம் உடைந்துபோய்விடும்' என்ருன் அந்த ஆங்கிலேய-இந்தியர்களின் சிநேகிதன். இருப்பினும் கண்மூடித்தன்மாக் நம்புவதைவிட, சரித்திரத்தை ஆதாரமாகக் கொள்வது மேலல்லவா? என்று நூல் வல்லார் எடுத்துக் காட்டினுர், கடவுளினுல் தெரிந்தெடுக்கப்பட்ட வர்க்கத்திலிருந்து தள்ளப்பட்ட வர்க்கம் இப்போது ஏதாவது இருக்கின்றதா என்று அவன் கேட்டான். 'அழித்தல் தொழிலைச் செய்யும் வர்க்கத்தினராகிய துருக்கி தேசத்தவர்கள், இப்போது, அத்தொழிலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர்' என்று அப்பெரியவர் சொல்ல, 'ஆம், அது மிகக் கொடிய தொழில். 'அதிலிருந்து நீக்கப்பட்டதே மேல்' என்று அவன் ஊகித்துச் சொன்னுன். பெரியவர் பின்வருமாறு சொன்னுர்: 'மனித வர்க்கம் அபிவிருத்தி யடைதற்கு, அழித்தல் தொழில் மிகவும் முக்கியமென்பதை நீ அறிந்துகொள். பல வருஷங்களாகச் சேர்ந்து, குவிந்து கிடக்கும் குப்பை கூளங்களையெல்லாம் திரட்டி எறிந்து, இவ்வுலகத்தையே அவ்வப்போது சுத்தம் செய்துகொண்டிருக்க வேண்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் சகஜம். புதிய பழக்க வழக்கங்கள், புதிய ஆசாரங்கள் புதிய சீர்திருத்தங்கள் முதலியன காலத்திற்குத் தகுந்தவாறு அவ்வப்போது தோன்றிக் கொண்டிருந்தால் தான் இவ்வுலகம் முன்னேற்றமடையும், மரங்கள் பெரிதாக வளர்ந்துவிட்டால், அவைகளை வெட்டி எறியவேண்டியமுதான். பிறகு அவைகளுக்கு 'அருகிலிருக்கும் சிறிய செடிகள் நன்ருக வளர்ந்து தழைத்தோங்கும்.' 'அதாவது, உலகத்தோர் நினைப்பது போல், ஓரே ஒரு வர்க்கம் கடவுளினுல் தெரிந்தெடுக்கப்படவில்லை. அவ்வளவுதானே நீங்கள் இவ்வளவு நேரம் சொல்லிக்கொண்டிருந்ததிலிருந்து அறிந்துகொள்ள வேண்டிய விஷயம்' என்று அவன் சொன்னுன். ''ஆம். நான் சொல்கிறபடி இருந்தால்தான் உலக அமைதியும் மனித வர்க்கத்திற்கு சந்தோஷ வாழ்க்கையும் ஏற்படும். நான் சொல்கிறதே உண்மையென்று நாம் நம்புவோமாக' என்று அப்பெரியார் சொல்லி முடித்தார்.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr S. H. KHAN, (S. M) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

பிரிட்டிஷ் நாசக்காரிங் கப்பல்

ஒரு பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பல் துறைமுகத்தை விட்டுக் கிளம்பும்போது அதற்கு மரியாதை செய்யப்படுகிறது: கப்பல் படையில் ஒரு சமபிரதாயப நிலவி வருகிறது; அதன் பிறகு பழைய கப்பலைப் புதிய கப்பல் சந்தித்தால் புதியது அதற்கு மரியாதை செய்வதன் அறிகுறியாக சப்தமிடும். பிறகு பழையதும் அதே மாதிரி செய்து முடிந்ததும், இரண்டு கப்பல்களில் இருக்கும அதிகாரிகளும் மேல் தளத்தில் அணிவகுத்து நிற்பார்கள்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

நம் ஸர்க்கார் பதவி வகித்தால்

நாடு முழுதும் புத்துணர்ச்சி பரவி யிருக்கும்

ஸ்ரீ ஸி. ஆர். கருத்து



ஸர் மாக்ஸ்வெல்—ராஜாஜி சம்பாஷணை

புதுடில்லியில் நடந்த விருந்தொன்றில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் இந்திய ஸர்க்கார் ஹோம் மெம்பரான ஸர் ரெஜினுல்ட் மாக்ஸ்வெல்லுடன் சம்பாஷிக்கிருர்.

ராஜாஜி வார்தாவிலிருந்து இவ்வாரம் சென்னை வந்து சேர்ந்ததும் அவரைப் பத்திரிகை நிருபர் கண்டு பேசினர். அச்சமயம் அவர் குறிப்பிட்டதாவது:—

இந்நாட்டுப் பாதுகாப்பில் விசேஷ சிரத்தையுடையவர்கள் இறுதியில் எனது கருத்தை அங்கீகரித்தேயாகவேண்டும். இப்போது விஷயத்தை உணராமல், எவ்விதக் குழப்பமிருந்தாலும் சரியே; தேசீய முன்னணியொன்று ஏற்பட வேண்டியது அத்யாவசியம். அதைக்கொண்டு தேசீய சர்க்காரைக் கைப்பற்ற வேண்டும். லக்ஷக்கணக்கான பேரைத் திரட்டித் தேசாபிமானத்துடன் நாட்டைக் காக்க வழி தேடவேண்டும்.

டில்லியில் பத்திரிகை நிருபர்களிடம் நான் எனது கொள்கையைத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். சென்னைக்கு வந்ததும் புதிதாக வேறு ஒன்றும் நான் சொல்வதற்கில்லை. நமது ராஜீய நோக்கம் நிறைவேறவும், இப்போது அச்சு நாட்டினரால் நேர்ந்துள்ள துன்பத்திலின்றும் நமது நாட்டைக் காக்கவும் காங்கிரஸ் லீகுடன் சமரஸம் செய்து கொள்ள வேண்டியது இன்றியமையாத கடமை என்ற என் கருத்தை இப்போதும் நான் வற்புறுத்துகிறேன். லீகோடு சமரஸ ஒப்பந்தம் செய்து கொள்ளாத வரையில் எந்த வேலைத் திட்டமும் நிறைவேருது. காங்கிரஸ் காரியக் கமிட்டி வேறு எந்த வழியிலாவது ஒரு சமரஸத்துக்கு ஏற்பாடு செய்யுமானுல், நாம் அபிவிருத்தியடையலாம். நான் ஒரு வழி காட்டினேன். அந்தக் காரியக் கமிட்டி ஏற்றுக் கொள்ளவில்லை. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் அதை நிராகரித்து விட்டது. நான் காட்டிய வழி சரியல்லவென்ருல்வேறு வழியை யாவது காட்டட்டும்.

இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டாமென்ற கருத்துடையவர்கள் இப்போது கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. ஆனுல் இந்நாட்டுப் பாதுகாப்பில் விசேஷ சிரத்தை யுடையவர்கள் இறுதியில் என் கருத்தை அங்கீகரித்தே யாகவேண்டும். இப்போதே நாம் தேசீய முன்னணி ஒன்றை ஏற்படுத்தி தேசீய சர்க்காரைக் கைப்பற்ருவிட்டால் விதி விடும்வழியில் நம்பிக்கை வைத்து வாளா விருக்கவேண்டியதுதான்.

நெருக்கடி நேரத்தில் நியாயத்தைக் கவனிக்காமல் வெறும் சம்பிரதாயத்தை மட்டும் வற்புறுத்திக்கொண்டிருப்பது மிக்கஅபாயமாகும். காங்கிரஸ்காரர்கள் ஸ்தாபனத்தை மட்டும் இந்தக் காலத்தில் கவனிக்காமல் நாட்டையும் கவனிக்க வேண்டும்.

மற்றுமொரு அலுவல்

புதுடில்லியில் இருக்கும் இம்பீரியல் ஜனர் புத்தகாலயத்திற்கு ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் விஜயம் செய்தபோது அதன் நிர்வாகிகள் அவரை வரவேற்று கௌரவித்தனர்.

என் விருப்பம்

"அபாயத்தை சமாளிப்பதே"

புதிய டில்லியில் 5-ந் தேதி நடந்த தென்னிந்தியர் சங்கக் கூட்டத்தில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அவர் தாம் எடுத்துக்கொண்ட நிலைமையை விவரித்தார்.

பர்மா நிலைமையைப்பற்றி பிரஸ்தாபிக்கையில் ராஜாஜி கூறியதாவது:—

ஜப்பானின் நாட்டம் இலங்கைமீது திரும்பும். ஆகவே இலங்கை தாக்கப்பட்டால், அது கண்டு நீங்கள் யாரும் ஆச்சர்யப்படக்கூடாது. ஜப்பானியர் செம்மையாகத் தாக்கப்பட்டது வாஸ்தவமாயினும் மறுபடியும் அவர்கள் இலங்கையைத் தாக்கத்தான் தாக்குவர். இலங்கை இந்தியாவிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி தாக்குதலில் தென்னிந்தியாவிலுள்ள நமக்குச் சிரத்தை உண்டு. தென்னிந்தியாவின் சில பகுதிகளைப் பிடித்துக்கொள்ள ஜப்பான் முயலலாம். எனவே, தென்னிந்தியா பூராவுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஜப்பானியர் தென்னிந்தியாவைத் தாக்கினுல் என்ன ஆகும்? அபாயம் ஓங்கும்; அபாயத்தை எதிர்த்துச் சமாளிக்க வேண்டுமென்பதே என் விருப்பம். அபாயம் மிகுந்த இச்சமயத்தில் நாம் பதவியில் இருக்க வேண்டும். என்னுல் ஜனங்களுக்கு அதிக நன்மை செய்ய முடியாமல் போகலாம்; குண்டுகளிலிருந்து அவர்களை நான் காக்க முடியாமலும் போகலாம். இருந்தாலும் பொறுப்

புது டில்லியில் அகில இந்தியப்பத்திரிகாசிரியர்கள் நடத்திய விருந்தொன்றுக்கு ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாரும் இந்திய ஸர்க்கார் கல்விமெம்பர் ஸ்ரீ நளின ரஞ்சன ஸர்க்காரும் வந்திருந்தனர். இவ்விருவரும் அச்சமயம் ஸம்பாஷித்துக்கொண்டுருந்தபோது மேற்படி படம் பிடிக்கப்பட்டது.

பில் எனக்குப் பங்கிருந்தால் ஜனங்களுக்கு நிவர்த்தி ஏற்படுவது நிச்சயம். கஷ்டத்திலிருந்தும், அபாயத்திலிருந்தும் ஜனங்களைக் காக்க, சரியோ, தவருே ஏதாவது செய்ய வேண்டுமென்று நான் ஆவலுறுகிறேன்.

நாம் கட்டுப்பாட்டுடனும் பலமாகவும் இருப்பதையும், ஆகவே இந் நாட்டைப் பிடிக்க அவர்களால் முடியாதென்பதையும் எதிரி உணர வேண்டும். தென்னிந்திய நிலைமையை, துணிச்சலைக் கொண்டுதான் சமாளிக்க வேண்டும். ஆகவே, துணிந்து பொறுப்பேற்க நான் விழைகிறேன். எனவே, தென்னிந்தியாவில் நம்முடைய சொந்த சர்க்காரை அமைக்க நமக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கை நியாயமானதே. நம்மை நாம் பாது காத்துக்கொள்வதுதான் இப்போதைய பிரச்னை. ஆதலால் நமக்குச் சில கடமைகள் இருக்கின்றன. இவற்றை நிறைவேற்றப் பதவியில் இருக்க வேண்டியது அவசியம்.

நம் முன்னுள்ள கஷ்டங்களைச் சமாளிக்கவும், நமது கடமையைப் பூர்த்தி செய்யவும், இந்தியா பூராவும் ஒற்றுமையை உண்டு பண்ணவும் கூட்டுச் சர்க்கார் அவசியம். பதவி ஏற்பது எந்த விதத்தில் நியாயம் என்று பலர் கேட்கிருர்கள். நம்முடைய சர்க்கார் பதவியிலிருந்தால் எல்லா இடங்களிலும் புதிய உணர்ச்சி பரவி நிற்கும். பிரதி க்ராமமும் பாது காப்பு உணர்ச்சியுடன் துடிக்கும். அப்பொழுது நாடு பூராவும் பொதுஜனப் படைஒன்றைத் திரட்டலாம். ஜப்பானியருடன் ஸாத்வீக ஒத்துழையாமையை அனுஷ்டிப்பதில் பிரயோஜனமில்லை. தீரர்களாக நின்று ஜப்பானியரை நாம் எதிர்ப்போமாக; இல்லாவிட்டால் உலகம் நம்மைக் கண்டு சிரிக்கும். நாம் சண்டை போடத்தான் வேண்டும்; நம்முடைய சொந்த சர்க்கார் இல்லாவிட்டால் அது ரொம்பக் கஷ்டமாகும்.

* * * *

தேசிய முன்னணி

ராஜப்பிரதிநிதி பிரசங்கம்

"தேசிய முன்னணி" பற்றி ரேடியோவில் வைஸ்ராய் பேசினுர்: அப்போது அவர் கூறியதாவது:—

யுத்தம் இந்தியாவின் வாசலுக்கு வந்துவிட்டது. யுத்தம் இப்பொழுது நம் ஒவ்வொருவருடைய விவகாரமாக ஆகிவிட்டது. இந்தியாவின் கரையோரமே தாக்கப்பட்டது. நமக்குச் சோதனையும் பிறந்தது. இலங்கையும் தாக்குண்டது.

வங்கக்கடலில் ஜப்பானியக் கடற்படை ஒன்று சஞ்சரித்துக் கொண்டிருந்தது. இது நமது கப்பல்களையும், மாலுமிகளையும் மூழ்கடித்துவந்தது. தற்போதைக்கு இது மேற்படி கடலிலிருந்து வாபீஸாகியிருப்பது வாஸ்தவமே. ஆனல் மறுபடியும் அது வரும். அது நிச்சயம். நம்புங்கள்.

இந்தியாவின் ராணுவ பலமும் விமானப் பலமும் தினந்தோறும் பெருகி வருகிறது. நம்முடைய ஒப்பற்ற ஸேனதிபதியின் தலைமையில் நமது ஸைன்யங்கள் இணையற்ற முறையில் எதிரியைத் தாக்கும்.

நவீன யுத்தத்துக்கு வெற்றியளிப்பதும் மிகவும் முக்கியமானதும் ஜனங்களின் உறுதியும் கட்டுப்பாடுமே. இது எங்களுடைய பொறுப்பு; உங்களுடைய பொறுப்பு ஆதலால் தான் தேசிய முன்னணியில் சேரும்படி அழைக்கின்றேன்.

தேசிய முன்னணி வெற்றி பெறுவதற்கு இரண்டு காரியங்கள் தேவை, ஒன்று ஒன்றுபடும் மனேபாவம்; இன்னென்று செயல் புரியும் எண்ணம். ஒற்றுமை ஏற்படுவதில் எவ்விதக் கஷ்டமுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பொது ஜனங்களிடையே கட்டுப்பாட்டை வளர்த்தல், யுத்த எதிர்ப்புச் சக்தியை வளர்த்தல் எல்லா வகை ஐந்தாம் படைகளையும் ஒழித்தல், ஜனங்களிடையே நம்பிக்கையையும் தைர்யத்தையும் வளர்த்தல் இவையே நம்முடைய வேலைகள்.

ராணுவத்தில் சேர வேண்டுவோர் உடனே சேர்ந்துவிடுங்கள். மற்றவர்களுக்கு இதர துறைகளில் ஊழியம் புரியச் சந்தர்ப்பமிருக்கிறது. பிரஜா பாதுகாப்புப் படைகள், வார்டன்கள், டாக்டர்கள், நர்ஸுகள், உதவிப்படைகள், போன்ற பலரை வேண்டுகின்றன. ஆஸ்பத்திரிகளில் ஸ்திரீகள் தேவை தப்பிப் பிழைப்பவர்களுக்கு உதவி புரிய வேண்டியிருக்கிறது. நம்முடைய அன்ருட வாழ்க்கையைக் கவனிப்போம். நாம் பணத்தை விரயம் செய்கிருேமா? உணவுப் பொருள்கள், துணி மணிகள், மின்சாரம், பெட்ரோல், நிலக்கரி இவற்றை வீணுக்குகிருேமா? செய்தால் வெற்றியை நாம் தடைப்படுத்துகிருேம். குடியானவர்கள் அதிகப்படி தானியங்களை உற்பத்தி செய்யமுடியாதா? தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் அதிக உற்பத்தியில் நாட்டம் செலுத்துகிருர்களா? வெற்றியைத் துரிதப்படுத்த நாம் ஒவ்வொருவரும் ஏதாவது செய்யலாம். செய்ய வேண்டும். இதற்கு மனதில் உறுதிவேண்டும். தற்காப்பு, சமத்காரமாக வாபஸ் பெறுவது இவை நிர்ப்பந்தத்தால் ஏற்படுகின்றனவாயினும் இவற்ருல் யுத்தங்களை ஜெயிக்க முடியாது. முன்னேறித் தாக்குவதிலேயே நாம் சதா சிந்தனை செலுத்த வேண்டும்.

* * * *

இதர இந்தியர் செய்திகள்

இந்தியாவில் பர்மா சர்க்கார்

புதிய டில்லியிலிருந்து பின்வரும் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது;—

பர்மாவில் ராணுவ நடவடிக்கைக்குட்பட்டிருக்கும் பிராந்தியங்களுக்கு வெளியேயுள்ள கட்டுப்பாடுகள் காரணமாகவும், அங்கு ஸிவில் நிர்வாகம் நடைபெறுவது சாத்தியமில்லை யாதலாலும் பர்மா கவர்னர் (பிரிட்டிஷ் சர்க்கார் உத்தரவுப்படி) இந்தியாவுக்கு வந்துவிட்டார். அவருக்கு முன்னரே அவரது மந்திரிகள் இங்கு வந்துவிட்டனர்.

சிட்டகாங்கில் குண்டு வீச்சு

இம்மாதம் 8-ந்தேதி பிற்பகல் ஜப்பானிய விமானங்கள் சிட்டகாங் பிரதேசத்தில் வெகுஉயரத்தில் பறந்து குண்டுகளை வீசின; தவிர யந்திர பீரங்கிப் பிரயோகமும் நடந்தது. சொற்ப சொத்துச் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. அதே பிரதேசத்தில் மறுநாள் காலையும் குண்டுகள் வீசப்பட்டன.

சிட்டகாங் வங்க மாகாணத்தைச் சேர்ந்த ஒரு துறைமுகம். பர்மா எல்லையை ஒட்டினுற்போலுள்ள ஜில்லா இது அக்யாபிலிருந்து 190 மைல் தூரத்திலிருக்கிறது. சிட்டகாங்கிலிருந்து கல்கத்தா 370 மைல்.

இந்தியாவில் ஜப்பானியர் குண்டு வீசிய நகரங்களில் இது மூன்ருவதாகும்.

விசாகப்பட்டணம், காக்கிஞடாமீது போன மாதம் 6-ந் தேதி ஜப்பானியர் குண்டு வீசியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

சென்னை கவர்னர் கருத்து

"ஒரு மாதத்திற்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது இந்தத் தேசத்தின் மீது எதிரி படையெடுக்கும்அபாயம் குறைந்திருக்கிறது. ஆனல் ஆகாய விமானங்கள் மூலம் கடற்கரை நகரங்கள் மட்டும் தாக்கப்படலாம். அதற்கு நாம் தயாராக விருக்கவேண்டும்" என்று நீலகிரி யுத்தக் கமிட்டின் ஆதரவில் சென்னை கவர்னர் ஸர் ஆர்தர் ஹோப் உதகமண்டலம் அசெம்பிளி ஹாலில் சமீபத்தில் செய்த பிரசங்கமொன்றில் குறிப்பிட்டார்.

உண்மை அறிந்த வழி

★

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

★

கடைசியில் உண்மை வெளிப்பட்டது! உயர்ந்த வீரன் என்று தன்னைக் கருதி வந்த டர்னர், அவர்களால் தான் தூக்கிலிடப்பட விருப்பதைக்கண்டு நடுங்கினுன். அது உயிர் இழப்பதற்கல்ல:. தூக்குப் போட்டு இறக்க விரும்பவில்லை: தன்னைச் சுட்டுக் கொன்று விடுமாறு வேண்டிக்கொண்டான். அப்போது அவன் தன்னைப் பற்றி சில விஷயங்களை வெளியிட்டான். அதைக் கேட்டு ஹைதரின் கீழ் இருந்த அதிகாரிகள் மலைத்துப் போயினர். அவன் கூறியது என்ன? உண்மை தெரிந்த வழி எவ்விதம்?— இந்த சரித்திரக்கதை இவற்றிற்கு சமாதானம் அளிக்கும்.

★

சூரியன் அஸ்தமித்து நாலைந்து நாழிகைப் பொழுதிருக்கும். அஷ்டமி சந்திரன் வானத்தில் நன்ருகப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். உச்சியைத் தாண்டி மேற்கு சாய்ந்துவிட்டாலும் நிலாபால் போலக் காய்ந்து கொண்டிருந்தது.

நல்ல கோடைகாலம். பகலில் வெயிலின் கொடுமை அதிகம். அதைத் தாங்க முடியாமல் அவதிப்பட்டவர்களுக்கு நிலாக் காயும் இந்த இரவு நேரத்தில் ஏற்படும் ஆனந்தத்தை விவரித்துக் கூற முடியாது. பொழுது போய் வெப்பம் தணிந்த பிறகு உடல் குளித்து உல்லாசமாகக் காற்று வாங்கி வர வெளியில் உலவச் செல்வது யாவருக்கும் சகஜம்.

அவ்விதமே காணப்பட்டனர் சாலையில் சென்றுகொண்டிருந்த இருவரும். அவர்கள் நம் நாட்டவர் அல்லர்: வெள்ளைக்காரர்கள்.

பிறந்தது முதல் இறக்கும் வரையில்இந்த வெயிலிலும்கானலிலும் அடிபடும் நமக்கே கோடையின் உக்ரத்தைத் தாங்க முடியாமல் இருக்க, குளிர்ந்த பிரதேசத்தை விட்டு ஐயாயிரம் மைல் வந்து இங்கே தங்கி இருந்த வெள்ளைக்காரர்கள் அதை எப்படித் தாங்குவர்!

அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இந்த நாட்டுக்கு வந்தவர்களே, வியாபாரம் செய்து பொருள் ஈட்டும் நோக்கத்துடனே தான் முதலில் வந்தார்கள். ஆயினும் பின்னல் சமய சந்தர்ப்பம் ஒத்துக்கொண்டது. போர்க்களங்களில் புகுந்து சண்டையிட்டு வெற்றி கொண்டார்கள். பணத்துடன் பேரும் புகழும் கிட்டின. அதனல் வெள்ளைக்காரர்கள் யாராக இருந்தாலும், எந்த நாட்டினராக இருந்தாலும் அவர்கள் யாவரும் போர் வீரர்கள் என்ற பெயரை அடைந்தனர்.

அந்நாளிலே நம் நாட்டிலே இருந்த பலவேறு சிற்றரசர்களும் அவர்களுடைய ஊழியத்தை விரும்பி ஏற்றுக்கொண்டனர். சாதாரணப் போர் வீரர்கள் என்ற நிலைக்கு மேலாக அவர்கள் அதிகாரம் செலுத்தி ஆடம்பர வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

நல்ல கோஷ்டி

உச்சி வெயிலை அவர்கள் தாங்க முடியாது. காலையில் நடத்த வேண்டிய காரியங்களை வெயில் ஏறுவதற்கு முன்னரே செய்து முடித்துக்கொள்வார். மத்தியானம் சாப்பிட்டுவிட்டு, வெப்பம் நீங்க உள்ளே குளிர்ச்சியான இடத்தில் படுத்துத் தூங்குவர். சாயந்திரம் தான் மறுபடியும் வெளிக் கிளம்புவர்.

பகலிலோ தூங்கியாகிவிட்டது. இரவிலோ இயற்கைக் காட்சி நிலாவிலே மனேரம்மியமாக விளங்கியது. எங்கே பார்த்தாலும் பசுமை தளிர்த்து விளங்கியது. அதனல் அவர்கள் இரவின் முற்பகுதியை விளையாட்டிலேயே கழித்துவிடுவார்கள். நடுநிசிக்குப் பிறகுதான் படுக்கை.

இவ்விருவரும் அவ்விதமே இரவுப் பொழுதைச் சந்தோஷமாகப் போக்குவதற்கு வெளிக் கிளம்பினர்கள். அதற்கு ஒன்றிரண்டு பேர்கள் போதுமா? தக்க 'ஜமா'—கூட்டாளிகள்—வேண்டாமா? பட்டாளத்து அதிகாரிகளுக்கு வேறு யார் அகப்படுவார்கள்? மற்ருெரு பட்டாளத்தான் தானே கிடைப்பான். அப்பொழுதன்ருே அவர்கள் ஒத்த கோஷ்டியாக முடியும்?

அவர்கள் சாலையிலே அதிக் தூரம் செல்லவில்லை. அதினின்றும் கிளைப்பாதை ஒன்று பிரிந்து பக்கத்திலிருந்த மைதானத்துக்குச் சென்றது.

மைதானத்தின் நடுவே ஆங்காங்கே சிறு சிறு கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. அவற்றின் மத்தியில் பெரிய கூடாரம் ஒன்று இருந்தது. சாலை வழியே வந்த அவ்விருவரும் சிறு கூடாரங்களைத் தாண்டிக் கொண்டு மத்தியில் இருந்ததற்குச் சென்ருர்கள்.

இருவர் சம்பாஷணை

எங்கே பார்த்தாலும் நிசப்தமாக இருந்தது. போர்வீரர்களில் ஒருவரும் அங்கே இல்லை. எல்லோரும் வெளியில் போனவர்கள் திரும்பிவரவில்லை. வேலைக்காரர்கள்—கறுப்பர்கள்—மட்டும் அமைதியாக, மௌனமாகத் தங்கள் காரியங்களைக் கவனித்து வந்தனர்.

டேரா வாசலுக்கு வந்ததும் அவ்விருவருள் ஒருவன்—மினர்வா என்பவன்—உள்ளே தலையை நுழைத்து எட்டிப்பார்த்தான், அங்கே ஒருவரையும் காணவில்லை. "டர்னர்" (Turner) என்று கூப்பிட்டான்.

அந்தக்குரல் கேட்டு டேராவின் பின்புறத்திலிருந்து வேலைக்காரன் ஒருவன் விழுந்தடித்து ஓடிவந்தான்.

"ஸலாம், எஜமான். துரை வெளியில் போயிருக்கிருர்" என்று மரியாதையாகத்தாழ்ந்து பதிலளித்தார்.

"எங்கே?"

"கோயம்பத்தூருக்குப் போயிருக்கிருர்."

"என்ன? எப்போது?"

"இப்பொழுது தான். அஸ்தமிக்கும் சமயம் புறப்பட்டுப் போனுர்."

"இப்பொழுது வந்து விடுவார் அல்லவா?" என்று மறுபடியும் கேட்டான் அந்த வெள்ளைக்காரன். டர்னர் கோயம்புத்தூருக்குப் போயிருந்தான் என்ற செய்தி அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சாயங்காலம் அவனைப்பார்த்திருக்கிருன் மினர்வா. அப்பொழுது வெளியில் போகப்போவதைப்பற்றி அவன் தன்னிடம் சொல்லவில்லையே என்று எண்ணினுன்.

வேலைக்காரனுக்கோ அது அதிசயமாகத் தோன்றவில்லை. "இல்லை. அவருக்குத் தீனி அங்கேயே. அது கழிந்துதான் திரும்பிவருவார்" என்று பதில் சொல்லிவிட்டான். துரை ராத்திரி சாப்பிடாவிட்டால்அவனுக்குக்கொஞ்சம் வேலை குறைவு.

மினர்வாவும் அவன் கூட்டாளியும் திரும்பி விட்டார்கள். அவர்கள் தேடிவந்த நபர் கிடைக்கவில்லை. பொழுதைப் போக்க வேண்டுமே. என்ன செய்வது என்று வகையறியாது விழித்தனர்.

கிளம்பி விட்டான்

'டர்னர் வேட்டையாடுவதிலும் குறி பார்த்துச் சுடுவதிலும் சமர்த்தன். திடீரென்று அவன் கோயமுத்தூருக்குப் போகவேண்டிய காரணம் என்னவாக இருக்கும்? ஒரு கால் வேட்டைக்காக இருக்குமா? அப்படியானுல் அவன் தீனிக்கு உட்கார இன்னும் அதிக நேரம் பிடிக்கும். வேட்டையாடி விட்டு வந்து தானே மேஜையடியில் உட்காரவேண்டும். அதற்குள் நாமே அவ்விடம் போய்ச் சேர்ந்தால் என்ன?

இவ்விதம் யோஜித்தார்கள் அவர்கள். ஆனல் மினர்வாவின் கூட்டாளிக்குக் கோயம்புத்தூருக்குப் போகச் சம்மதமில்லை. "அங்கே தான் கம்மந்தான் இருக்கிருன். டர்னர் அநேகமாக அங்கே தான் போயிருப்பான். கோயம்புத்தூரில் அதை விட்டால் வேறு இடம் ஏது? ஆனல் நம்மைக் கூப்பிடவில்லையே?" என்று தயங்கினுன்.

மினர்வா அதைப்பொருட்படுத்தவில்லை. அவன் தினுசே அலாதி. சாப்பாட்டுக்குக் கூப்பிடவும் வேண்டுமா என்று எண்ணுபவன். அந்தக் காலத்தில் இந்நாட்டில் இருந்த கொஞ்சம் பேர்களான வெள்ளைக்காரர்களிடையே அந்தச் சம்பிரதாயம் அதிகமாகக் கிடையாது. சாப்பாட்டுக்கென்று தாராளமாக வெளியே போவார்கள்.

"அதைப்பற்றி என்ன யோசனை. நான் இருக்கிறேன். கிடையாதுஎன்று யார் சொல்லுகிருர்கள், பார்க்கலாம். வா போகலாம்" என்று தன் கூட்டாளியையும் கட்டி இழுத்துக் கொண்டுகிளம்பி விட்டான்.

* * * *

கம்மந்தான் கூடாரம்

அவர்கள் கோயம்புத்தூரை யடைந்த பொழுது இரவு பத்து நாழிகைப் பொழுது ஆகி விட்டது. கம்மந்தான் கூடாரத்தைஅணுகினர். ஆனல் அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்தது.

ஓர் இடத்திலும் வெளிச்சம் இல்லை. ஒரே நிசப்தம். யாவரும் படுத்துக்கொண்டு விட்டார்கள்.

அதற்குள்ளாகவா டர்னர் வேட்டையாடிச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தன் கூடாரத்துக்குத் திரும்பி விட்டான். மேலே செய்வது என்ன? அவர்களுக்கோ நல்ல பசி, ஊருக்குத் திரும்பிப் போவதற்கு நடு நிசியாகிவிடும். அப்படித் திரும்பிச் சென்ருலும் சாப்பிட ஒன்றும் கிடைக்காது என்பது நிச்சயம். நாக்கைத் தீட்டிக் கொண்டு எட்டு மைல் தூர வழி நடந்து வந்த அவர்கள் கதி இப்படியா முடிய வேண்டும்?

வெட்கத்தைவிட்டு அவர்கள் கம்மந்தான் கூடாரத்தை அணுகினர்கள்; அவனைப் படுக்கையி

னின்றும் எழுப்பி டர்னரைப் பற்றி விசாரித்தார்கள்.

"டர்ணர் இங்கே வரவே இல்லையே? வருவதற்கு அவசியமும் இல்லையே!" என்றுபதில் சொன்னான் கம்மந்தான்:

அவர்கள் வந்த விஷயம் அவனுக்குச் சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது. கொஞ்ச காலம் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டான் போல, "டர்னர் இன்றைய தினம் இங்கே எப்படி வந்திருக்க முடியும்? அவன் கீழ் உள்ளவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய நாள் அன்றோ இது? அதைக் கொடுத்து முடிவதற்கே நாழிகையாகி விடுமே?" என்று சொன்னான்.

"இல்லை. சம்பளம் இன்றைக்குக் கொடுக்கவில்லை. நாளைக்குக் கொடுப்பதாகச் சொன்னாராம்"

"என்ன?"

இந்தக் கேள்வியில் சிறிது ஆத்திரமும் கலந்து ஒலித்தது. அதைக் கேட்ட பிறகு தான் மினர்வாவுக்கும் ஏதோ போல மனதில் ஒன்று உறுத்தலாயிற்று.

"அவருடைய குமாஸ்தா இன்றைக்கு வரவில்லையாம். அதனால் நாளைக்கே கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டார். பட்டாளத்தாரும் சரியென்று போய்விட்டார்கள்" என்று பதிலளித்தான் மினர்வா.

மெல்ல மெல்ல அவன் உள்ளத்திலும் போய்ப் புகுந்து கொண்டது. சந்தேகம் பிறந்தது.

பலவித எண்ணங்கள்

ஒரு கால் அவ்விதம் நடந்திருக்கக்கூடுமா? ஒரு காசா, இரண்டு காசா? ஒரு பட்டாளத்தின் சம்பளம் முழுவதையும் அவன் எடுத்துக் கொண்டு ஓடி இருப்பானா? அப்படியே பணத்தை எடுத்துச் சென்றாலும் எங்கே போக முடியும்? அவனுக்கு யார் தஞ்சம் அளிப்பார்?

பணப்பேச்சு எழுந்தவுடன் அவர்கள் தங்கள் பசியை மறந்துவிட்டார்கள்: எப்படியாவது அவனைக்கண்டு பிடித்து விஷயத்தை நிச்சயம் செய்து கொள்ள எண்ணினார்கள்.

கம்மந்தானுக்கோ அவ்வளவு தூரம் இடம் கொடுத்துவிட இஷ்டமில்லை. அது பட்டாளத்தின் கட்டுப்பாட்டை-அமைதியை-ஏன் ஒழுங்கையே-குலைத்துவிடும். டர்னர் அவ்விதம் செய்திருப்பான் என்பதை அவன் நம்பவும் இல்லை. ஆகவே அவன் பேச்சை வேறு விதமாக மாற்றினான்.

"அது கிடக்கட்டும். நீங்கள் இன்னும் சாப்பிடவில்லைபோல் இருக்கிறதே!" என்று கேட்டான் கம்மந்தான் அவர்களைப் பார்த்து.

"இல்லை......சாயங்காலம் கிளம்பினேும்" என்று மினர்வா மெதுவாக இழுத்தான். எல்லோரும் படுத்துக்கொண்ட பிறகு வேலைக்காரனை எழுப்பிச் சாப்பாடு தயார் செய்யச் சொல்லவிரும்பவில்லை; எனினும் பசி வயிற்றைக் கிள்ளியது.

"சரி, சாப்பிட்டுவிட்டு மற்றக் காரியங்களைப் பார்க்கலாம்" என்று கூறிவிட்டுத் தன் வேலையாளை எழுப்பி அவர்களுக்குச் சாப்பாடு போட்ச் செய்தான்.

* * * *

டர்னரின் வரலாறு

கம்மந்தான் மினர்வாவிடம் ஏதோ ஒரு விதமாகச் சொல்லி விட்டானேயன்றி. அவன் மனத்திலும் சந்தேகம் வலுத்துக் கொண்டே வந்தது. 'டர்ணர் எங்கே போயிருக்கக் கூடும்? அவனுடைய குமாஸ்தா அங்கே தான் இருந்திருக்கிறான். எங்கேயும் போய்விடவில்லை. அவ்விதமிருக்க அவன் ஏன் சம்பளப் பட்டுவாடா செய்யவில்லை? இதில் ஏதோ மர்மம் இருத்தல் வேண்டும்' என்று பலவிதமாக யோசித்தான்.

கம்மந்தான் ஒரு பிரெஞ்சுக்காரன். டர்னரோ அயர்லந்து தேசத்தைச் சேர்ந்தவன், ஐரிஷ்காரன். அதனால் அவன் ஸ்பாவமாகவே டர்னரிடம் நேசப்பான்மை கொண்டிருக்கவில்லை. தவிர டர்னர் வேலைக்கு வந்து சேரும்போது ஆங்கிலேயக் கும்பினியின் சென்னைக் கவர்னர் போஷேரிடமிருந்து நவாபு ஹைதர்அலிக்குச் சிபார்சுக் கடிதம் வேறு வாங்கிக் கொண்டு வந்திருந்தான்:

ஆங்கிலேயரிடமிருந்து சிபார்சுக் கடிதம் வாங்கி வந்தவனை ஹைதர் சந்தேகத்துடனேயே நடத்தியிருக்க வேண்டும். அதற்கு மாறாக ஹைதர் அவனிடம் சிறிதும் சந்தேகப்படவில்லை. அவனிடம் பூர்ண நம்பிக்கை கொண்டிருந்தான்.

டர்னரும் அதற்கு எவ்விதத்திலும் தகுதியுள்ளவனே போல நடந்து வந்தான். தன் மீது யாரும் குறைகூற இடங் கொடுக்க வில்லை. போர்க் களங்களில் சாமர்த்தியமாகச் சாகஸங்களை செய்து முடித்துப் புகழ் அடைந்தான்.

ரகசியமாய் போன ஆள்

சாதாரணப் போர் வீரனாக வந்து சேர்ந்த அவன் வெகு சீக்கிரத்தில் பட்டாளத்தின் தலைவனாக உயர்ந்து 'விட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அவன் தொப்பாசிகளின்—தொப்பிக்காரர்கள் என்று வழங்கி வந்த சட்டைக்காரர்களின்—பட்டாளத்தில் முதல் பகுதிக்குத் தலைவனானன்.

முதலில் அவனைப் பொறாமையுடன் கவனித்து வந்த சிலருக்கு அதுவே விரோதமாக மாறியது. அவர்கள் டர்னரைத் தங்கள் ஜன்ம சத்ருவாக எண்ணலாயினர். எப்படியாவது அவனை அவமானப் படுத்துவதற்குச் சமயம் பார்த்திருந்தனர்.

டர்னர் போயிருக்கும் இடத்தைத்தான் தேடுவதைப் பிறர் அறிவதைக் கம்மந்தான் விரும்பவில்லை. அதனால் அவன் மினர்வாவும் அவன் கூட்டாளியும் சாப்பிட்டுக் கொண்டு இருக்கையிலேயே ரகசியமாக ஓர் ஆளைப் பிடித்து அனுப்பினான்.

டர்னரின் நிலையில் உள்ளவன் பணத்துடன் கோயம்புத்தூரிலிருந்து தப்பி ஓடுவதற்கு அந்தக் காலத்தில் பாலக்காட்டுச் சாலையே மிகவும் ஸௌகரியம் வாய்ந்தது. சமவெளியிலிருந்துகொச்சிசமஸ்தானத்துக்கோ, வேறு மலையாள சிற்றரசாங்கத்துக்கோ போவதற்கு பாலைக்காட்டுக் கனவாய் வழியாகத் தான் செல்ல வேண்டும். அங்கே சாலையில் போவோர் வருவோரைக் கவனிப்பதற்குச் சிறிய கொட்டடி ஒன்று இருந்தது. அதில் காவல் புரிவோர்களுக்குத் தெரியாமல் யாரும் அந்த வழியாகச் செல்ல முடியாது.

ஜாமப்பொழுதுக்கு முன்னல் இரண்டு வெள்ளைக்காரர்கள் குதிரையேறி அந்தவழியாகக் கொச்சி நோக்கிச் சென்றதைக் காவல்காரன் அறிவான். கம்மந்தானுடைய ஆள் வந்து கேட்டபோது அதை அவன் அப்படியே சொல்லி விட்டான். அவனுக்கு அதைப்பற்றிக் கவலை ஏது?

பின்தொடர்ந்தனர்

மினர்வாவும் அவன் கூட்டாளியும் டர்னரைக் கண்டு பிடித்து இழுத்து வருவற்குத் துடித்தனர். டர்னர் பாலைக்காட்டைத் தாண்டி கொச்சிக்குள் நுழைந்து விட்டான். என்றதைக் கேட்டதும் அவர்களுக்குக் கோயம்புத்தூரில் இருக்கையே கொள்ளவில்லை. உடனே இருவரும் குதிரையேறி டர்னரைத்துரத்திச்சென்றனர்.

சந்திரன் அஸ்தமித்து விட்டான்: உலகத்தை இருள் சூழ்ந்து கொண்டது. வானமும் இருண்டது. அதைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யவில்லை மினர்வா. தன் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாகச் கொச்சிக்குள் நுழைந்து சென்றான்.

சூரியன் உதயமாகி ஐந்து நாழிகைப் பொழுதும் ஆகிவிட்டது. அப்போதும் மினர்வா தான் தேடுவதை நிறுத்தவில்லை. வெகுதூரம் உள்ளே சென்றுவிட்டான்.

களைப்பு மேலிட்டுவிட்டது. எங்கேயாவது தங்கிச் சிறிது இளைப்பாற விரும்பினான்: குதிரையினின்றும் கீழே இறங்கிக் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டுச் சாலைக்குப் பக்கத்தில் இருந்த புல் தரையில் போய்ப் படுத்தான்.

அவன் கவனம் முழுவதும் டர்னரைக்கண்டு பிடிப்பதிலேயே லயித்திருந்தது. அவனுக்கு வேறு எண்ணம் ஒன்றும் உண்டாகவில்லை. கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டு எங்கேயும் தங்காமல் சவாரி செய்பவர்கள் அந்த இடத்துக்குச் 'சமீபத்தில் சிறிது இளைப்பாறியே செல்வார்கள். இதையே எண்ணியிருந்த மினர்வாவுக்கும் திடீரென்று ஒரு யோசனை உண்டாயிற்று. 'டர்னரும் சமீபத்தில் தங்கி இளைப்பாறி இருத்தல் வேண்டும்.' இந்த எண்ணம் ஏற்பட்டபிறகு மினர்வாவுக்குப் படுக்க முடியவில்லை. எழுந்து உட்கார்ந்து நான்கு புறங்களிலும் பார்த்தான்.

இருவரும் தூங்கினர்

அவன் தேடியது வீண் போகவில்லை. சாலையை விட்டு ஒதுங்கிக் கொஞ்ச தூரத்தில் ஒரு குடிசை தென்பட்டது.

இனம் வைத்திய விந்தை
பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வழி.
மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைனு பஜார், மதருஸ்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட
I. D. L. 71. மாதர்களுக்குகந்த டானிக்
I. D. L. 81. சூதக கஷ்டங்களுக்கு டானிக்
I. D. L. 91. பிரசவத்திற்குப்பிறகு உதவும் டானிக்
I. D. L. 96. கர்ப்பிணிகளுக்கு டானிக்
(வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடேட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதருஸ்.

கே. சுவாமிநாதன் & கோ.
24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.
பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

சமரஸம்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

பார்தோலி தீர்மானம் வார்தாவில் ஊர்ஜிதமாகி இரண்டு வாரங்களாகின்றன. கவர்ன்மெண்டார் கவனித்ததாகக் காணவில்லை. சமரஸத்திற்கு உண்மையில் ஏதாவது வழி யுண்டா என்று எங்கும் கேட்கிறார்கள். சமரஸத்திலுள்ள சிரத்தையை கேள்வி குறிப்பிடுகிறது. மக்களுக்கு மாத்திரம் சிரத்தையிருந்தால் போதாது சமரஸத்தில் கருத்தும் கவலையும் இருதரப்பினருக்கும் இருக்க வேண்டும் இன்னொரு தரப்பினருக்கு இருப்பதாகக் காணவில்லை சமரஸத்திற்கு வழியொன்றுதான் உண்டு. அதிகாரம் மாறவேண்டும். அதிகாரம் மாற காரணங்கள் அடுக்கடுக்காக கூறி வந்திருக்கின்றனர். அதிகாரம் தாங்குவோர் அசைந்து கொடுக்கவில்லை. அலக்ஷியமும் ஆலஸ்யமும் கிளர்ச்சிக்கு கூர் தீட்டி வருகின்றன.

காலம் சாதாரண காலமல்ல. நிர்ப்பந்தமும் நெருக்கடியும் முற்றி வருகின்றன. பயப் பிரபாவம் எங்கும் காணக்கிடக்கிறது. அபயம் அளிப்பது கவர்ன்மெண்டின் கடமை. அமைப்பு இடம் தரவில்லை. நம்பிக்கை கொள்ளவில்லை. அமைப்பு திருந்த அதிகாரம மாறவேண்டும். விட்டுக்கொடுக்க மனமில்லை உண்மை அதுதான். மறைப்பதில் காரியமில்லை. பானமில்லாதது மனித இயல்பு. உயிரை விட உடமை பெரிது. இந்த உலகத்தில். உடமைக்கு உயிராயுள்ளது உரிமை. உரிமைக்கு ஆணி வேர் ஆளும் உரிமை. உரிமை கொண்டவர் சுலபமாய் விட்டுக் கொடுப்பாரோ? வீண் சபலம்! விடமாட்டார்கள். விட நிர்ப்பந்தம் பிறந்தால் நயமாக விலகலாம். கெட்டிக்காரத்தனத்தின் அளவு அவ்வளவு தான.

நிர்ப்பந்தம் இன்றளவும் உறைக்கவில்லை. சர்ச்சில் பேச்சே அதற்கு போகிய சான்று. பத்தி பத்தியாகப் பிரசங்கம் வெளியாயிருக்கிறது. இந்தியாவைப்பற்றி ஒரு வார்த்தையுண்டா? கிடையாது. காரணமென்ன? சொல்ல வெட்கப்படுகிறார்கள் போலும்! இந்தியாவில் ஆள் பலத்திற்குக் குறைவில்லை. தளவாட பலம் பெருகி வருகிறது. இந்தியாவைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியர் துடிக்கின்றனர். நம்பினால் நிலைமை நிமிர்ந்து விடும். நம்ப மனம் துணியவில்லை. நாளைக்கு என்ன ஆகுமோ என்ற கவலை. பத்தில் ஒருவர் பிழைப்பில் மண் விழுந்து விடுமோ என்ற ஏக்கம். விடாப்பிடியாய் இருப்பதற்கு காரணம் அது தான்.

உண்மை மக்கள் மனதில் உறைக்க வேண்டும். யுத்த நெருக்கடியில் கண்ட அநுகூலம் ஒன்றுதான். வேஷம் கலைந்து விட்டது. மந்திரத்தில மாங்காய் விழாது.

உண்மை உறைத்தால் உணர்ச்சி பெருகும். பெருகும் உணர்ச்சி உருவாக வேண்டும். பேசிப் பேசி லாபம் காணவில்லை. நேற்று வரையில் மிதவாதிகள் கவர்ன்மெண்டிடம் மன்றாடினர். பலிக்கவில்லை. இன்றளவும் மக்களிடம் காங்கிரஸ் வாதிகள் மன்றாடி வருகின்றனர். உருக்காணவில்லை. சமுதாய வாழ்வு சீர்குலைந்து கிடக்கிறது. நகரங்களில் நெரிசலும் கிராமங்களில் க்ஷாமமும் கண்கூடு. இவை மாற வேண்டும்.

கிராமங்களே இந்தியாவின் அரண். கிராமங்களுக்கு உயிர் ஊட்ட வேண்டும். திட்டம் வகுத்து பல வருஷங்களாகிறது; சோபிக்கவில்லை. சிரத்தைக் குறைவு. இந்தக் குறையை இன்று யுத்தம் வலியுறுத்துகிறது. உறங்கிய மக்கள் விழித்துக்கொண்டனர். தைரியம் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை துலங்க வேண்டும். கட்டு இறுக வேண்டும். காங்கிரஸ் வாதிகள் இன்று செய்ய வேண்டிய வேலை இது. பிரசங்கம் செய்தது போதும். காரியத்தில் இறங்க வேண்டும். நாட்டிலே நட்பு பெருக வேண்டும். சமூக மாதசர்யங்கள் மறைய வேண்டும். காங்கிரஸ் ஊழியர்கள் பிரதி மாகாணத்திலும் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர் சேவைக்குப் பக்குவம் பெற்றவர். தியாகத்திற்கு அஞ்சாதவர். அவர்கள் வேலையில் முனைய வேண்டும்.

சில நாட்களாக ராஜாஜி இதையே வற்புறுத்தி வருகிறார் பெருங்கூட்டங்களில் பேசி வருகிறார். சிலராவது காது கொடுத்தால் நிலைமை வெகு தூரம் திருந்தும். கவர்ன்மெண்டுக்கும் யோசனை சொல்ல அவர் தயங்கவில்லை. கவர்ன்மெண்டார் கேட்காமலிருக்கலாம். மக்கள் கேட்க வேண்டும. மக்களிடையே சிரத்தை கண்டால் கவர்ன்மெண்டிடமும் சிரத்தை காணும். கவர்ன்மெண்டார் இறங்கி வருவார்களா என்று கேட்டுக்கொண்டிருந்தால் காரியம் கூடாது. இறங்கி வரச் செய்ய இதுவே வழி.

பிரிட்டிஷாருக்கு ஒரு வார்த்தை. பெரிய நாட்டை ஆளுவோர் பெரிய புத்தி காட்ட வேண்டும். காட்டியிருந்தால் யுத்தத்தையே தவிர்த்திருக்கலாம். தவிர்க்க முடியாவிட்டாலும் எதிரி தலைகாட்ட முடியாமல் தாக்கியிருக்கலாம். காட்டவில்லை. அதை அறிவுறுத்திப் பயனில்லை. போனது போகட்டும். இன்றாவது நம்புங்கள் பொறுப்பை. மாற்றுங்கள். நாட்டுக்கு நன்மையுண்டு. உங்களுக்கும் பெருமையுண்டு. பெருமையுடன் நிற்காது: நேர்மையான உறவும் நிலைக்கும்.



1. வர்தாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு மஹாத்மா காந்தியுடன் சம்பாஷிக்கிறார். 2. கூட்டத்தின் மற்றொரு காட்சி. ஸ்ரீ புலாபாய் தேசாய், பண்டித நேரு, டாக்டர் மாமூத், ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஜனப் அஸப் அலி முதலியவர்கள் ஒன்றுகூடியிருக்கின்றனர். (ஜி. எஸ். எ.)

அதற்குப் பக்கத்தில் இரண்டு குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றின் மீது இடப்பட்டிருந்த சேணங்கள் அப்படியே இருந்தன. ஆம். அவற்றை ஏறிச் சவாரி செய்து வந்தவர்கள் பக்கத்திலேயே இருக்க வேண்டும். அதிக நேரம் தங்காமல் உடனே மறுபடியும் சவாரியைத் துவக்குவதற்காகவே சேணத்தை எடுக்காமல் விட்டு வைத்திருந்தனர். அவர்கள் டர்னரும் அவன் கூட்டாளியுமாக இருக்கலாகாதா?

அவர்கள் தாம் அங்கே இருந்தனர். டர்னரும் அவன் கூட்டாளியும் குடிசைக்குள்ளே அலுப்புத் தீரப்படுத்து தூங்கிக் கொண்டிருந்தனர். அவ்வளவு சீக்கிரம் தங்களைத் தேடிக்கொண்டு யாரும் வருவார் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

* * * *

டர்னரும் அவன் கூட்டாளியும் பிடிபட்டுவிட்டார்கள். டர்னருடைய கூட்டாளி ஒரு ஸ்விஸ்காரன்- ஸ்விட்ஜர்லந்து தேசத்தவன். அவன் ஓர் அப்பாவி. அவனுக்கு ஒன்றும் தெரியாது. டர்னரே அவனுக்கு ஆசை வார்த்தை காண்பித்துக் கூட அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

ஹைதர் விரும்பியது

டர்னருடைய நடத்தை ஹைதருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. அவன் இதை எதிர்பார்த்தே இருந்தான். நல்ல சாமர்த்தியம் வாய்ந்த அந்த ஆங்கிலேயன் தன்னிடம் எதற்காக வேலைக்கு வர வேண்டும்? இவ்வளவு கெட்டிக்காரனைத் தங்களிடம் நிறுத்திக்கொள்ளாமல் கும்பினியின் கவர்னர் எதற்காகச் சிபார்சுக் கடிதம் கொடுத்து தன்னிடம் அனுப்ப வேண்டும்? இதில் ஏதோ சூது இருக்கிறது. நாம் அவனிடம் சந்தேகப்பட்டால், காரியம் கெட்டுவிடும்; உண்மை வெளிப்படாமல் போய்விடும். அதற்குமாறாக அவனிடம் பூர்ண நம்பிக்கையை வைத்து அவனைச் சுயேச்சையாக விட்டுவிட்டால் என்றைக்காவது அது வெளிப்பட்டுவிடும் என்று எண்ணிச் சும்மா இருந்தான் ஹைதர்.

டர்னர் பட்டாளத்து ஒழுங்கு முறைக்கு விரோதமாக நடந்ததோ அல்லது அவன் பணத்தை அபகரித்து ஓடியதோ ஹைதருக்குப் பெரியதாகத் தோன்றவில்லை. அவனுடைய அந்தரங்கத்தையே அறிய விரும்பினான்.

விசாரணையைத் தானே நடத்தினால் உண்மை வெளிப்படாது என்பதை நவாப் நன்கு அறிவான். அன்றி, இத்தகைய குற்றங்களை இழைத்தவர்கள் அவர்களுடைய சொந்த நாட்டிலே எவ்விதம் விசாரிக்கப்படுவார்களோ, அதேபோல இங்கேயும் அவர்களை நடத்த விரும்பினான் ஹைதர். அதனால் அவர்களுடைய விசாரணை, பட்டாளத்தில் இருந்த ஐரோப்பிய அதிகாரிகள் வசமே விடப்பட்டது.

பிரதம மந்திரியின் மகிழ்ச்சி

பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்காவுக்குப் போயிருந்தார். வாஷிங்டனிலிருந்து ஒட்டாவாவுக்கு ரயிலில் புறப்படும் சமயம். அநேகர் வந்திருந்து அவரை வழியனுப்பினர். அச்சமயம் தமது இரு விரல்களினால் "வி" என்ற சின்னத்தை அவர் காட்டுகிறார்.

டர்னர் மீது துராக்கிருதமாகப் பணத்தை அபகரித்து ஓடிய குற்றம் சுமத்தப்பட்டது. அவன் கூட்டாளியாகிய ஸ்விஸ்காரன் ஒன்றையும் எடுத்துச் செல்லவில்லை. பட்டாளத்தினின்றும் ஓடிச்சென்ற குற்றமே அவன் மீது சுமத்தப்பட்டது. விசாரணையில் அவர்கள் ஒன்றும் வாதாடவில்லை. குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். டர்னருக்குத் தூக்குத் தண்டனையும் அவன் கூட்டாளிக்குச் சிறைவாசமும் விதிக்கப்பட்டன.

அவன் தெரிவித்தவை

அதற்குப் பிறகே உண்மை வெளிப்பட்டது. உயர்ந்த வீரன் என்று தன்னைக் கருதி வந்த டர்னர் தான் அவர்களால் தூக்குப் போட விருப்பதைக் கண்டு நடுங்கினான். உயிர் இழப்பதற்கல்ல; தூக்குப் போட்டு இறக்க விரும்பவில்லை. தன்னைச் சுட்டுச் கொன்று விடுமாறு வேண்டிக் கொண்டான். அப்போதுதான் அவன் தன்னைப்பற்றிக் கூறினான்.

"நான் உண்மையில் ஆங்கிலேயப் பட்டாளத்தைச் சேர்ந்தவனே, அங்கே படைத் தலைமை வகித்துவந்தேன். ஹைதருடைய சேனையின் நிலைமையையும் அதன் தகுதியையும் அறிந்து வரவே என்னை அவர்கள் அனுப்பிவைத்தனர். இங்கே உத்தியோகம் கிடைப்பதற்காகச் சிபார்சுக் கடிதத்தையும் கவர்னர் எனக்கு அளித்தார். இங்கே நான் வேலை பார்த்த காலத்தில் என்னை அன்புடன் நடத்திய நவாபுக்கு விரோதமாக ஏதாவது நான் செய்திருந்தால் அதற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வளவு சீக்கிரமாக நான் புறப்பட்டிருக்கமாட்டேன். ஆனால் சமீபத்தில் என்னைக் கும்பினியார் பெரிய உத்தியோகத்துக்கு உயர்த்தினர். என்னைப் பம்பாய் பட்டாளத்தின் மேஜராக நியமித்தனர். பெரிய உத்தியோகத்தின் பதவிமோகம் என்னைப்பற்றிக்கொண்டது. அதற்காகவே ஓடிப்போனேன்."

இதனைக் கேட்ட ஹைதர் அதிகாரிகள் மலைத்துப் போய்விட்டார்கள்: போர் வீரர்களுக்குக் காட்டவேண்டிய மரியாதைகளை அவர்கள் விட்டுக்கொடுக்க இஷ்டப்படவில்லை. அதனால் அவன் வேண்டுகோளின்படி அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டனர். விசாரணை முடிவில் அளித்த தீர்ப்பை பின்பற்ற அவன் பிரேதத்தை தூக்கிலிட்டு நிறைவேற்றினார்கள்.

உலகப் பிரசித்தி பெற்ற நிவாரணி

ஒவ்வோரு வீட்டிலும் அவசியமிருக்க வேண்டும்.

சரும தொந்திரவுகள், உபத்திரவங்களை ஜாம்-பெக் குணப்படுத்தும்.

வெட்டுக்காயம், சிராய்ப்பு, மற்றும் இதர கோளாறுகளுக்கு ஜாம்-பெக் அவசியம் வைத்திருக்கவேண்டும். புண்பட்ட இடத்தில் தடவினவுடன் அதன் அற்புத மூலிகை எண்ணெய் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்லைதப்போக்கி, சருமத்திற்கு போஷாக்களித்து, தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1, பவுடர் ரூ. 1.

ஏஜண்டுகள்:- மேஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

சிறுவர் பகுதி

★

சாந்தையின் சமர்த்து

★

எம். எஸ். கமலா

தக்ஷசீலத்தில் முன்பொரு காலத்தில் தயானந்தன் ஆண்டு வந்தான். அவனுக்கு புத்திசாகரன் என்ற ஓர் மந்திரி இருந்தான். புத்திசாகரன் எது செய்தாலும் ஆக்ஷேபனையே கிடையாது. அவன் செய்வது எதுவாயினும் போற்றக் கூடியதாயிருக்கும். ஆதலால் தக்ஷசிலத்தின் பிரஜைகள் தயானந்தனைவிட புத்திசாகரனை அதிகமாய் விரும்பினார்கள்.

ஒருநாள் தயானந்தனுக்கு ஓர் சந்தேகம் ஜனித்தது. அதைப் பற்றி தன்னுள், தானே சிந்தனை செய்தான். சமாதானம் தோன்றவில்லை, மறுநாள் சபையில் வீற்று தன் சந்தேஹத்தை வெளியிட்டு "அதைத் தீர்ப்பவர்களுக்கு தன் ராஜ்யத்தில் பாதி கொடுத்து சன்மானிப்பதாக சொன்னான். தயானந்தனால் கேட்கப்பட்ட கேள்வி அவனுக்குத் தோன்றிய சந்தேகம் "உலகில் விச்வாசி யார்? அவிச்வாசி யார்?" என்பதே. இக்கேள்வியை முதலில் கேட்டவர்கள் சர்வ சாதாரணம் என்று நினைத்து அதற்குரிய விடை யோசிக்கும் கால் திணறினார்கள். உண்மையில் "விச்வாசி யார்?" என்று சொல்ல இயலவில்லை "அவிச்வாசி..."

திருடன் கூட சிலவற்றின் மேல் விச்வாசமுள்ளவன். மிருகங்கள் சில ஜந்துக்களின் மேல், ஏன் மனிதன் மேல் கூட அவிச்வாசமாயிருக்கிறது. ஆதலால் இச் சிக்கலான சந்தேகத்தை தீர்க்க யாரும் வெளிவரவில்லை. தயானந்தன் கேள்வி கேட்டு வருஷக் கணக்கிலாகிவிட்டது. தயானந்தனுக்கு தன்னை மீறி கோபம் வந்தது. சபையைக் கூட்டினான். புத்தி சாகரனைப் பார்த்து "நான் கேட்ட கேள்விக்கு வருஷக் கணக்காயும் விடை சொல்ல யாருக்கும் சக்தியில்லை. புத்திசாகரா! சாமர்த்திய சமுத்திரமே!) இக் கேள்விக்கு மூன்று நாளில் நீ விடை கொடாவிடில் உன்னை சிரச்சேதம் செய்துவிடுவேன்" என்று உத்திரவிட்டு எழுந்து சென்றான். புத்திசாகரன் தர்மசங்கடத்திலாழ்ந்து சோக சாகரனாய் வீடு சேர்ந்தான்.

வீடு சேர்ந்த புத்திசாகரன் ஒருவருடனும் பேசாமல் துக்கத்துடன் தன்னறையில் படுத்திருந்தான். புத்திசாகரனின் ஒரே பெண்ணான சாந்தை தன் தந்தை அழுவதைப் பார்த்து காரணம் கேட்டாள். புத்திசாகரன் சொல்லவில்லை: வேதனையுடன் மூன்று நாள் படுக்கையிலேயே புரண்டு புரண்டு அழுதான்.

மூன்றாம் நாள் விடிந்ததும், ராஜ சபைக்கு போகவேண்டி இருப்பதால் எழுந்து தன் காலைக் கடனை முடித்துக்கொண்டு பூஜா கிருஹத்தில் சென்று கடவுளின் முன் மண்டியிட்டு துக்கத்துடன் "ஏ! தெய்வமே! என்னுடைய ஆயுள் முடிந்தால் எல்லோரையும் போல் என்னை உன்னிடம் சேர்த்துக்கொள்ளக் கூடாதா? ஓர் சிறிய வினாவிற்கு விடைபகர சக்தியற்று புத்திசாகரன் என்று பெயரெடுத்த நான், மிருகத்தை விட கேவலமாய் வதைக்கப்படவேண்டும்?" என்று புலம்பி எழுந்து வெளியில் வந்தான். அன்று அவன் இறக்கவேண்டியது தான்!

சாந்தை தன் தந்தை சோக காரணத்தை தன்னிடம் சொல்லாமலிருந்தாலும், மனம் பொறாமல் தந்தையின் ஒவ்வொரு செய்கையையும் மூன்று நாளாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். தந்தை பூஜாகிருகத்தைவிட்டு வெளிவந்ததும் "அப்பா! ஓர் சிறிய வினாவிற்கு விடை பகர சக்தியற்று நீங்கள் வதைக்கப்படப் போகிறீர்? அந்த பிரச்னை என்னவென்று சொல்லுங்கள்" என்று காலை கட்டிக்கொண்டு கேட்டாள். மந்திரி சொல்ல மறுத்தார். மகள் கெஞ்சினாள்: மன்றாடினாள்! உடல் குலுங்க அழுதாள். மகளின் துக்கத்தைக் கண்டு சகியாமல் அரசசபையில் நடந்ததைச் சொன்னான்.

சாந்தை சற்று யோசித்து நின்றாள். பிறகு முகத்தெளிவுடன் ஒரு குதித்துக்கொண்டு "அப்பா! இந்த வினாவிற்கு விடை நான் சொல்லுகிறேன். என்னை அரச சபைக்கு அழைத்து செல்லுங்கள்" என்றாள். புத்திசாகரன் தன் புத்திரிக்கு புத்தி கலங்கி விட்டதென்று நினைத்துதிகைத்தான். அரச சபைக்கு நேரமாகிவிட்டதால் முன் நோக்கி நடந்தான்: அவளும் கூட நடந்தாள். கன்னிமாடத்திலிருப்பவள் அரசசபைக்கு வரக் கூடாதென்று தந்தை கடினமாய்ச் சொன்னார். மகள் தந்தையை மீட்பதற்காக தான் அரச சபைக்கு வருவேன் என்று கண்டிப்பாய் சொன்னாள். தந்தையும் மகளும் சபைக்குச் சென்றனர். புத்திசாகரன் சோகரூபனாய் உத்சாகமற்று அமர்ந்தான். அவன் மகள் முகமூடியணிந்து அவனருகில் வீற்றிருந்தாள். அரச சபை நிறைந்திருந்தது புத்திசாகரனின் சாமார்த்தியத்தை பார்க்க.

மந்திரியை நோக்கி "என் சந்தேகத்தை தீர்க்கக்கூடுமோ? அல்லது..." என்று அரசன் பேசும்போதே. "அல்லது ஒன்றும்வேண்டாம். இச்சாதாரண சந்தேகத்தை தீர்க்க நான் தயாராய் வந்துள்ளேன். உத்திரவானால் சொல்கிறேன். ஆனால் இந்த விடை சரியாயிருக்குமாகில் எனக்கு வேண்டிய பரிசு பாதி ராஜ்யமல்ல. புத்தி சாகரர் தான் வேண்டும். இதற்கொப்பினால் சொல்கிறேன்" என்றாள்.

தயானந்தன் ஸ்திரீ கண்டத்வனியை கேட்டு அதிர்ந்து அப்பெண் ஒருக்கால் புத்திசாகரனின் காதலியோ என்று நினைத்து "மங்காய்! இச் சந்தேகத்தை யாராகிலும் தீர்க்கலாம். சந்தேகம் நிவர்த்தியானால் ஒருவருக்கும் தண்டனையில்லை. நான் சொன்னவாறு பாதி ராஜ்யம் உனக்கு வேண்டாவிடினும் நீ விரும்புவர்களுக்கு கொடுக்கத் தயங்கேன்" என்று சற்று ஹாஸ்யமாகச்சொன்னான்.

சாந்தை சொல்லலானாள். "மஹாராஜா! விச்வாசி சுணகம் (நாய்)! அவிச்வாசி ஜாமாதா (மாப்பிள்ளை) 'நம் வீட்டு வாயிலில் போடும் எச்சிற் பண்டங்களை ஓர் நாயை கூப்பிட்டுபோட்டால் அது இறக்கும்வரை நம் க்ஷேமத்தை நாடி பாடுபடுகிறது. மாப்பிள்ளையோ மாமனாரானவர் என்ன செய்தாலும்' என்ன இவர் மிக மிக செய்துவிட்டது. அது செய்யவில்லை. இதுசெய்யவில்லை. என்று குறைகூறுகிறார். ஆதிமூலக்கடவுளாகிய ஏழுமலையான்கூட, தம் மனைவி அலமேலு மங்கை தாயார் தம் மாமனாரிடமிருந்து எல்லாம் சரிவர வாங்கி வரவில்லை என்று கூறி தம் அவிச்வாசத்தைத் தெரியப்படுத்தினார். உலகில் ஒவ்வொருவரும் மாப்பிள்ளைகள் தான். என் தந்தையும் மாப்பிள்ளை. நாளை அவருக்கும் ஒரு மாப்பிள்ளை வருவார். நீங்களும் ஒருவர் மாப்பிள்ளை தான். அவிச்வாசி மாப்பிள்ளை. விச்வாசி நாய்" என்றாள்.

தயானந்தன் அப்பெண்ணின் விடையைக் கேட்டு சந்தோஷ சித்தனாய் அவள் முகமூடியை விலக்கும்படி செய்தான். சாந்தையைக் கண்டதும் ஜனங்கள் "மந்திரியின் பெண்" என்று கூச்சலிட்டனர். தயானந்தன் சாந்தையின் சமர்த்துக்கு வியந்து, தன் வாக்பிரகாரம் பாதி ராஜ்யம் புத்திசாகரனுக்குக் கொடுத்து சாந்தையைத் தான் மணந்து கொண்டான்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

டாக்டரின் பெண்

★

சிறு கதை - "கிச்சு"

சுலோசனுவும் பங்கஜமும் சகோதரர் புத்ரிகள். சுந்தரம் சுலோசனுவை மணக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது: அவன் மனதில் பங்கஜத்தைத்தான் வரித்தான். இந்த மனோ பாவத்தை சுலோசனு கண்டுகொண்டிருந்தாள்: அவள் அதை எப்போது வெளியே காட்டினுள்? அவள் இவ் விஷயத்தில் நடந்து கொண்ட விதம் எம்மாதிரி? இந்தக் கேள்விகளுக்குரிய பதிலே இக் கதையில் படித்தறியலாம். ஒரு ஹிந்து ஸ்திரீ விவாகமான பின் தன் கணவனிடம் எத்தகைய ப்ரீதியைக் காட்டுகிருள் என்பதையும் இதில் காணலாம்.

I

சுந்தரம் டாக்டர் மிருதங்கமய்யர் பெண் சுலோசனுவையும் வக்கீல் குமாஸ்தா மார்ஜாலமய்யரின் பெண் பங்கஜத்தையும் பார்க்கப்போயிருந்தான். மிருதங்கமய்யரும் மார்ஜாலமய்யரும் அண்ணன் தம்பிகள். இரண்டு பேருக்கும் இன்னும் பாகப் பிரிவினையாகவில்லை. இரண்டு பேரும் சேர்ந்து ஒரே குடித்தனமாய் இருந்தார்கள். சுலோசனுவிற்கு வயது பதினைந்து, பங்கஜத்திற்கு வயது பதினுன்கு. இரண்டு பேருக்கும் சேர்ந்து, ஒரே சமயத்தில் கல்யாணம் செய்துவிட்டால் செலவு குறைச்சல் என்று டாக்டர் வரன் தேடினுர். சுந்தரத்திற்கு சுலோசனுவை பிடிக்கவில்லை. அம்மை வடு மூஞ்சி; 'குள்ள பாஸ்கர்;' தலையில் எலி வால் மாதிரி ஒரு பின்னல். அப்பேர்பட்ட பெண் அவனுக்கு பிடிக்காததில் என்ன ஆச்சரியமிருக்கிறது? ஆனல் அவன் நோட்டமெல்லாம் பங்கஜத்தின் மீது சென்றது. சந்திர பிம்பம்போன்ற வதனம்; நல்ல வாட்டை சாட்டை; தலையில் குதிகால் வரையில் தொங்கும் பின்னல், இனிமையான சாரீரம். இதெல்லாம் சேர்ந்து எப்படியாவது தகப்பனுரை சம்மதிக்க செய்து பங்கஜத்தைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது.

2

"பதினையிரம் ரூபாய் கொடுத்தால் கூட அந்த பெண் எனக்கு வேண்டாம். அப்பா! அந்தப் பெண்ணை நான் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன்" என்ருன் சுந்தரம்.

"உனக்கு டாக்டருடைய பெண்ணு பிடிக்கவில்லை! கேட்டால் கூட யாராவது சிரிக்கப் போகிருர்கள். பின் எந்த பெண்தான் உனக்கு பிடித்திருக்கிறது?" என்று கோபத்துடன் கேட்டார் சுந்தரத்தின் தகப்பனுர் ராஜமய்யர்.

"இன்னொரு பெண் இருக்கிறதே, அந்த பெண் தான்" என்று ஹீனஸ்வரத்துடன் இழுத்தான் சுந்தரம்.

"உனக்கு ஏதாவது புத்தி கித்தி இருக்கிறதா? டாக்டருடைய பெண் உனக்கு பிடிக்கவில்லை! வக்கீல் குமாஸ்தாவின் பெண் தான் உனக்கு பிடித்ததாக்கும். உன் சமத்தை என்னவென்று சொல்லுவது? யாரிடமாவது போய் என் மாமனுர் வக்கீல் குமாஸ்தாஎன்று சொன்னுயானுல் உன்னை ரொம்ப லக்ஷியம் பண்ணுவார்கள்" என்ருர்.

"லக்ஷியம் பண்ணினுல் பண்ணட்டும்; பண்ணுவிட்டால் போகட்டும். அதனுல் என்ன அப்பா?" என்ருன் சுந்தரம்.

"அதனுல் என்னவா? டாக்டருக்கு நல்ல செல்வாக்கு. சிபார்சு பண்ணிஞரானுல் உடனே உனக்கு வேலை கிடைத்து விடும். வக்கீல் குமாஸ்தா சிபார்சு பண்ணினுல் உனக்கு வேலை கிடைத்தாப்பலே தான்" என்ருர்.

"இப்ப மட்டும் டாக்டர் சிபார்சு பண்ணமாட்டாரோ, தம்பி பெண் தன் பெண் என்ற வித்தியாசமே அவருக்கு கிடையாதாம். இரண்டு பேரும் சேர்ந்து தானே இருக்கிருர்கள்" என்ருன் சுந்தரம்.

"எல்லாம் இப்ப அப்படித்தான் இருக்கும். நாளைக்கு இரண்டு பேரும் இப்படியே அன்னியோன்னியமாய் இருப்பார்கள் என்று யார் கண்டார்கள்? நீ கண்டிப்பாய்ச் சொல்லிவிடு. உனக்கு டாக்டருடைய பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமா இல்லையா என்று. அவ்வளவு தான் எனக்கு வேண்டியது. நீ ஊரைச் சுற்ற வேண்டாம்" என்ருர் ராஜமய்யர்.

ராஜமய்யர் கண்டிப்பான பேர் வழி. முதலிலேயே டாக்டருடைய பெண்ணையே கல்யாணம் செய்து விடுகிறது என்று முடிச்சு போட்டுவிட்டார். அவர் ஒரு பொழுதும் தன் தீர்மானத்தை நிறைவேற்ருமல் இருந்ததில்லை. வாசல் பக்கம் வித்தால் அப்பாவின் இரைச்சல் உள்ளே போனுல் அம்மா "ஒன்று மில்லாததெற்கெல்லாம் இராக்குடிக்க கஞ்சியில்லாததற்கெல்லாம் நல்ல இடமாய் வாய்த்து விடுகிறது; நீ போய் வக்கீல் குமாஸ்தாவின்பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளுகிறேன் என்று சொல்லுகிருயே; உனக்கு வெட்கமாயில்லையா?" என்று அவள் பாராயணத்தை ஆரம்பித்து விடுவாள். இதெல்லாம் சேர்ந்து அவன் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் செய்தது. ஆனி மாதம் 31-ந் தேதி சுலோசனுவின் கழுத்தில் தாலி ஏறியது.

3

இன்டர்மீடியட் பாஸான வுடன் பீ. ஏ. படிக்க பட்டணத்திற்கு வந்து விட்டான் சுந்தரம். ராஜமய்யர் சுந்தரம் ஹாஸ்டலில் இருந்து கொண்டு படிக்கட்டும் என்று நினைத்தார். ஆனல் அது மாதிரி செய்தால் தன்னை அவமானப்படுத்துவது போலாகும் என்று டாக்டர் எழுதினதின் பேரில் சுந்தரம் பட்டணத்தில் மாமனுராத்திலேயே தங்கும்படி நேரிட்டது. அவன் மாமனுராத்துக்கு வந்தது முதலே அவன் மனசு ஒரு தினுசாக மாறிவிட்டது: பங்கஜத்தை பார்க்கும்பொழுதெல்லாம் இந்த அழகு சுந்தரியை கல்யாணம் செய்துகொள்ளாமல் இந்த கரிக்கட்டையை கல்யாணம் செய்து கொண்டோமே என்று அவனுக்கு ஆத்திரம் வரும். அச்சமயங்களில் அவன் தகப்பனுர் மட்டும் இருந்திருந்தால் அவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை கிடைத்திருக்கும்.

பங்கஜத்தை காணும்பொழுதெல்லாம் அவன் மனம் மான்போல் துள்ளிக் குதிக்கும். காலை ஐந்தரை மணிக்கே எழுந்து விடுவாள்; எழுந்து பல்லை தேய்த்துவிட்டு மூஞ்சியை அலம்பி, தலையை பின்னிட்டுக் கொண்டு நீட்டாக டிரஸ் பண்ணிக்கொண்டு வருவாள். இவன் பல்லை தேய்த்துவிட்டு வரவேண்டியதுதான் தாமதம் 'அத்திம்பேருக்கு காப்பி, என்று உள்ளே போய் தானே கலந்து அவனுக்கு கொண்டு வந்து கொடுப்பாள். அந்த தூங்குமூஞ்சி சுலோசனு அப்பொதுதான் எழுந்திருப்பாள் "பங்கஜத்தைவிட நீ ஒரு வயசு ஜாஸ்தியாச்சே. நீ ஏன் பங்கஜம் மாதிரி காலையில் எழுந்திருக்க கூடாது?" என்று அவன் அடிக்கடி கேட்டிருக்கிருன். அவன் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டியது தான். அவன் வார்த்தைகளை அவள் லக்ஷியம் பண்ணுவதே யில்லை.

வெள்ளிக்கிழமையன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தபிறகு ஒரு வித நகையும் சுலோசனு அணிந்திருக்கமாட்டாள், அவளைப் பார்த்தால் அவனுக்குக் கோபம் வரும். அதே சமயத்தில் பங்கஜத்தை பார்க்கும் பொழுது அவன் மனம் பக்கு பக்கு என்றடிக்கும், அவள் நகை அணிந்தாலும் சரி. அணியாவிட்டாலும் சரி. அழகு அழகு தான் என்று எண்ணுவான்.

கல்யாணமான பிறகு சுலோசனுவின் படிப்பைப்பற்றி பிரச்னைகிளம்பியது. சுந்தரம் அவள் படிக்கட்டும் என்று உத்தரவு கொடுத்துவிட்டான். சுந்தரம் பட்டணத்திற்கு வந்தபொழுது சுலோசனுவும் பங்கஜமும் நாலாம் பாரத்தில் சேர்ந்தாற்போல் படித்துக் கொண்டிருந்தார்கள். ராத்திரியிலே சுந்தரம் அவர்கள் இரண்டு பேருக்கும் கணக்கு சொல்லிக்கொடுப்பான். அவன் என்ன சொல்லிக் கொடுத்தாலும் சரி, சுலோசனுவின் மூளையில் ஏறவே ஏருது. பங்கஜம் ஒரே நிமிஷத்தில் எல்லாவற்றையும் கிரஹித்துக் கொண்டு விடுவாள். அவளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கும் பொழுது அவன் மனம் அடைந்த ஆனந்தத்தை என்னவென்று சொல்லுவது? அவளை மணந்து கொள்ளாவிட்டாலும் அந்த அழகு சுந்தரியுடன் தான் பழகவாவது கொடுத்துவைத்திருக்கிருேமே என்று அவன் அடிக்கடி சந்தோஷப்பட்டதுண்டு.

4

"அடாடா, மணிபர்ஸை காரில் வைத்து வந்து விட்டேனே யாராவது தூக்கிக் கொண்டு போய் விடுவார்களே" என்று அவசரம் அவசரமாக கிளம்பினுள் சுலோசனு: சுந்தரமும் சுலோசனுவும் பங்கஜமும் சமுத்திரக் கரையோரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது இரவு ஏழு மணியிருக்கும். பௌர்ணமாவாசை. சந்திரன் அப்பொழுது தான் முழு காந்தியுடன் கிளம்பிக் கொண்டிருந்தான்.

"நானும் உனக்கு துணை வரட்டுமா?" என்ருள் பங்கஜம்.

"என்ன பயம், நான் என்ன சின்ன குழந்தையா?" என்று சுலோசனு ஓடினுள், காரிலிருந்து பர்ஸை எடுத்துக் கொண்டு வரும்பொழுது யாரோ ஒரு சிநேகிதி இவளை பிடித்துக் கொண்டுவிட்டாள். அவளோடு பத்து நிமிஷம் பேசிக் கொண்டிருந்து விட்டு சுந்தரமும் பங்கஜமும் இருந்த இடத்திற்கு போவதற்குள் பதினைந்து நிமிஷம் ஆகிவிட்டது அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிருர்கள். பார்ப்போம் என்று மெதுவாக ஓசைப்படாமல் போனுள். அவர்கள் இரண்டு பேரும் ரொம்ப குதூகலமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு அழகான யுவதியும் யுவனும் தனித்திருக்கும் பொழுது என்ன பேசிக்கொண்டிருப்பார்கள்? காதல்வார்த்தைகள் தான்! அந்த வார்த்தைகள் கணீர் கணீரென்று சுலோசனுவின் காதில் விழுந்தன. அவள் தலை சுழன்றது.

5

அன்றைய இரவு [டாக்டர் மட்டும் தனியாக தன் ரூமில் இருக்கும்பொழுது "அப்பா! அவருக்கு ஏதாவது வேலை கிலை பண்ணி வைத்துவிடேன்" என்ருள் சுலோசனு.

"சுந்தரத்திற்கா நீ சிபார்சு பண்ணுகிருய்?" என்று அவர் சிரித்துக்கொண்டு கேட்டார்.

"இல்லை அப்பா! நீங்கள் பண்ணிவைத்து விடுங்களேன்" என்று கெஞ்சினுள்.

"இப்பதானே அவன் பீ. ஏ. படிக்கிருன். பி. ஏ. பாஸா கட்டும். அதற்குள் என்ன வேலை கிடைக்கும்?" என்ருர் அவர் சிரித்துக்கொண்டே. அப்பொழுது சுலோசனுவின் தாயார் வந்தாள்.

"ஏண்டீ! உன்பெண் சொல்லறதைக் கேட்டயோன்னே?" என்ருர்.

"என்ன?

"ஆத்துக்காரருக்கு வேலை பண்ணிக் கொடுப்பதற்கு சிபார்சு பண்ண வந்துவிட்டாள்" என்ருர்.

"உங்களுக்கு அந்த விஷயம் புரியவில்லையா? சின்னஞ் சிறு சோன்னே, தனிக் குடித்தனம் பண்ண ஆசைப்படுகிருப்பலே யிருக்கு. அது வேலையானுல் தானே முடியும்" என்ருள்.

6

பங்கஜத்தின் கல்யாண விஷயத்தில் சுலோசனுவிற்கு இருந்த கவலையைப்போல் ஒருவருக்குமில்லை என்று சொல்லலாம். யாராவது ஐ. ஸி, எஸ். பண்ணினவன் பதினையிரம் இருபதினையிரம் கொடுத்தால் பங்கஜத்தை கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறேன் என்று சொன்னுல் சுலோசனு எப்படியாவது தன் தகப்பனுரிடம் மன்ருடி அவ்வளவு ரூபாய் கொடுக்கச் சொல்லுவாள். ஏனென்ருல் ஐ. ஸி. எஸ். பாஸ் பண்ணிவிட்டு கலெக்டராக வருகிறவன் கல்யாணத்தன்றைக்கே பங்கஜத்தை அழைத்துக்கொண்டுபோய் விடுவான். அப்புறம் இந்த பக்கம் பங்கஜத்தை விடவே மாட்டான்,

ஆனுல் அவள் நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை. டாக்டர் பங்கஜத்திற்காக ரொம்ப அலைந்தார். நாற்பது ஐம்பது பையன்கள் வந்து பார்த்தார்கள். பார்த்து என்ன பிரயோஜனம்? ஒவ்வொரு வீரனிலேயும் ஏதாவது தோஷம் இருந்தது; சில பையன்கள் பெண்பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள். என்ன விந்தை! ஒருவன் அழகு என்று நினைக்கிற பெண்ணை இன்னொருவன் அழகில்லை என்று சொல்லி விடுகிருன்! இதுவே உலகவழக்கம்.

ஒரு நாள் இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது டாக்டர், "பங்கஜம்! ஒரு வரனும் சரியாக ஸெட்டில் ஆக்மாட்டேன் என்கிறதே. உனக்காக இனி மேல் பிரம்மா பையனை சிருஷ்டிக்கவேண்டியதுதான்" என்ருர் மனம் சலித்துப்போய்.

"எனக்குத்தான் கல்யாணம் வேண்டாம் என்கிறேனே. நீங்கள் எதற்காக வீணுக சிரமப் படுகிறீர்கள்!" என்ருள் பங்கஜம்.

"ஏன் கல்யாணம் வேண்டாம் என்கிருய்!" என்று கேட்டார். பங்கஜம் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"ஏன் அவளை கேட்கிறேள்! எனக்கு காரணம் தெரியும்" என்ருள் சுலோசனு.

"என்ன?" என்று கேட்டார்.

"பிறர் ஒத்தாசையில்லாமலேயே தானே கல்யாணம் செய்து கொள்ள அவளுக்கு தெரியுமே". என்று சொல்லிவிட்டு பங்கஜத்தைக் கூர்ந்துபார்த்தாள். ஆனுல் அவள் கூர்ந்து பார்ப்பதை. பங்கஜம் கவனிக்கவில்லை.

7

மேற்படி சம்பவம் நடந்து ஒரு மாதமிருக்கும் சுலோசனு கடும்ஜுரமாய் கிடந்தாள். தான் பிழைப்பது அரிது என்று கண்டு கொண்டாள். ஒரு நாள் அவள் தூங்கி எழுந்திருக்கும்பொழுது தன்னருகில் சுந்தரம் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்,

"நீங்களா?" என்ருள்.

"ஆமாம்"

"இனிமேல் உங்கள் பாடு வேட்டை தான்" என்ருள்.

"சுலோசனு! நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே" என்ருன் சுந்தரம்.

"உங்களுக்கா புரிய வில்லை" என்று கேட்டு விட்டு ஒரே பார்வையாக அவனைப்பார்த்தாள். அவள் பார்வை அவனை எரித்து விடும் போலிருந்தது.

"உங்களுக்கு பங்கஜத்தைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டம். அவளுக்கும் உங்களை கல்யாணம் செய்து கொள்ள இஷ்டம். ஆனுல் நான் ஒருத்தி தான் நடுவில் குறுக்கே நின்றேன். சீக்கிரத்தில் நான் தொலைந்து போய்விடுவேன். அப்புறம் நீங்கள் இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொண்டு கொம்மாளம் அடிக்கலாம்" என்ருள்.

அந்திய காலத்தில் என்ன கர்ண கடூரமான வார்த்தைகள்! அவள் பேரில் ஒருவித பிசகும் இல்லை. இத்தனை நாள்வரையில் இவ்விஷயத்தை ஒருவரிடமும் அவள் பிரஸ்தாபிக்கவில்லை. அப்படியே தன் மனத்தில் அடக்கி வைத்துக்கொண்டிருந்தாள். கடைசியில் குபீரென்று அவளை பீறிட்டுக்கொண்டு எரிமலைபோல் அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வந்துவிட்டன. சுலோசனு இம்மாதிரி பேசியவுடன் சுந்தரத்திற்கு தூக்கி வாரிப்போட்டது. தன் மனைவியை சரியாக நடத்தவில்லையே என்ற வருத்தம் அவன் தொண்டையைஅடைத்துக் கொண்டது. கண்களிலிருந்து ஜலம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

"எனக்கு நீங்கள் ஒரு வரன் தர வேண்டும்" என்ருள்.

"நீ ஏது கேட்டாலும், என் உயிரைக் கேட்டாலும் நான் தரத் தயார்தான்" என்ருன் சுந்தரம். தன் மனைவி மனமுடைந்து அதினுல் ஜுரத்தினுல் பீடிக்கப்பட்டு கடைசியில் பரமபதமடைவதற்கு. தான் தான் மூலகாரணம் என்று அறியும் பொழுது எவன் எதைத்தான் தியாகம் செய்ய முன் வரமாட்டான்?

தனக்கு பிறகு கல்யாணம் செய்து கொண்டால் பங்கஜத்தை தான் கல்யாணம் செய்து கொள்ளுவான். வேருெருவரையும் அவன் கல்யாணம் செய்து கொள்ளமாட்டான். ஆகையினுல் கல்யாணம் செய்து கொண்டால் பங்கஜத்தை அவன் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்று வரன் கேட்டு அவன் வாழ்க்கையை பாழாக்கி விடலாமா என்றுஅவளுக்குத்தோன்றியது. ஆனுல் அப்படி செய்வதினுல் என்ன பிரயோஜனம்? தான் இறப்பதோ நிச்சயம். தன் கணவனுடைய க்ஷேமத்தைக் கோருவதே உத்தம மனைவியின் கடமை யல்லவா? அவன் முகத்தைப் பார்த்தவுடன் அவளுக்கு பச்சாத்தாபம் ஏற்பட்டது.

"என்ன வரன் வேண்டும், கேள்" என்ருன்.

"அப்புறம் யோசித்து சொல்லுகிறேன்." என்று கூறிவிட்டாள்.

அவன் போன பிறகு அவள் சிற்றப்பா வந்து பேசிக்கொண்டிருந்தார்.

"சித்தப்பா! எனக்காக நீங்கள் ஒன்று செய்ய வேண்டும்." என்ருள்.

"என்ன செய்ய வேண்டும், சொல்" என்ருர்.

"சொன்னுல் வார்த்தையை தவறமாட்டீர்களே?" என்ருள்.

"ஒருக்காலும் தவறமாட்டேன்" என்ருர்.

"நீங்கள் பங்கஜத்தின் கல்யாணத்திற்காக வீணுக வரன்தேடி அலைய வேண்டாம். மாப்பிள்ளை ஆத்திலேயே இருக்கிருர். நான் போன பிறகு பங்கஜம் என் ஸ்தானத்தை வகிக்கட்டும்" என்ருள். அப்படியே அவள் பிராணன் நின்று விட்டது.

இரண்டு மன்னர்கள் சந்திப்பு

யுகோஸ்லேவிய அரசரும் க்ரீஸ் அரசரும் லண்டனில் சந்தித்துப் பேசினர்.



அதிவேகமாக ஓடும் எலக்ட்ரிக் ரயில் வண்டி. இங்கிலாந்தில் இந்த வண்டி இருக்கிறது.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஸ்ரீ ராம! ஸ்ரீ ராம! ஜித ராம! கத காம!

சரணம்

1. தேவ! யேமீ தோவ நன்னு ப்ரோவ வேக ராவா
2. பால பக்த பால! ஸுகுணசீல! தாள ஜால
3. தீர! ஸுசரீர! நிர்விகார! யேலுகோரா
4. ஆதரிம்ப ராதா நம்மலேதா மரியாதா
5. ஆரு ரிபுல போரு தீர்சுவாரு எவருன்னாரு
6. ராய! மனஸுராயா முனிகேய! தாளதாயெ
7. வாது காராது யிகமீத கதிலேது
8. சிந்த தீர்ச்சுட கெந்த ஸேவின்த்ஸ ஸ்ரீகாந்த!
9. ஸ்ரீ நாதாவனிலோன யிட்லு கான நிஜமேனா?
10. பத்து தப்பவத்து யேப்ரொத்து மரவ வத்து
11. வின்னன் ப்ரோத்ஸு நன்னு ப்ரோவகுன்ன விடனன்ன!
12. ஸ்ரீ ஜானகி ராஜ! த்யாகராஜ க்ருத பூஜ!

II

ஸ்ரீ ராம! ஸ்ரீ ராம!	—ஸ்ரீ ராமனே!
ஜித ராம!	—பரசுராமனை ஜயித்தவனே!
கத காம!	—காமக்ரோதாதி குணங்கள் அற்றவனே!
தேவ!	—என் தெய்வமே!
யேமி தோவ	—நான் எவ்வழி செல்வேன்
நன்னுப்ரோவ	—என்னை ரக்ஷித்தருள
வேக ராவா?	—விரைவில் வரமாட்டாயா?
பால பக்த பால!	—பால பக்தனை துருவனை ரக்ஷித்தருளியவனே!
ஸுகுண!	—உயர்ந்த நற்குணங்கள் நிரம்பப் பெற்றவனே!
சீல!	—நல்லொழுக்க முள்ளவனே!
தாள ஜால	—என்னால் உன் பிரிவைத் தாள முடியாது
தீர!	—பராக்கிரமமுள்ளவனே!
ஸுசரீர!	—அழகிய திருமேனி கொண்டவனே!
நிர் விகார!	—எங்கும் நிறைந்த பொருளே!
யேலு கோரா	—என்னை ஏற்று ரக்ஷித்தருள்
ஆதரிம்பராதா?	—என்னை ஆதரித்து ரக்ஷித்தருளக் கூடாதா?
நம்ம லேதா?	—நான் உன்னையே உறுதியாக நம்பவில்லையா?
மரியாதா?	—இது உனக்கு முறையா?
ஆரு ரிபுல போரு	—காமக்ரோதி சத்ருக்களால் ஏற்படும் கஷ்டங்களை
தீர்சுவாரு	—தீர்க்கக்கூடியவர்கள்
எவருன்னாரு	—உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்
ராய!	—அரசனே!
மனஸு ராயா?	—என்னைக் காத்தருள மனது வரவில்லையா?
முனிகேய!	—வால்மீகி மகரிஷியால் கானம் பண்ணப்பட்டவனே!
தாளது ஆயே	—உன் பிரிவை என்னால் தள்ள முடியவில்லை
வாது காராது	—வாது செய்வதனால் பலனில்லை,
யிக மீத கதிலேது	—இனி உன்னைத் தவிர கதி ஒருவருமில்லை.
ஸ்ரீ காந்த!	—லக்ஷ்மீ நாயகனே!
சிந்த தீர்ச்சுடகு	—என் மனக் கவலையைத் தீர்க்க
எந்த ஸேவின்த்ஸ	—எவ்வளவென்று உன்னைத் தொழுவேன்
ஸ்ரீ நாத!	—லக்ஷ்மீ தேவியின் மணாளனே
வனிலோன	—கானகத்தில்
யிட்லு கான	—இவ்விதந்தான் முனிவர்களை ரக்ஷித்தருளினையா?
நிஜமேனா	—உண்மையாக இவ்விதம்தானா?
பத்து	—பக்தர்களைக் காப்பாற்றி வந்த உன் நியமத்தை
தப்ப வத்து	—நீ தவறக்கூடாது

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்தர நாயகர்,
P. 3094, 341. எஸ்பிளனேட், மதராஸ்

யேப்ரொத்து	—எப்பொழுதும்
மரவ வத்து	—நீ என்னை மறக்கக் கூடாது
வின்னன்	—பக்தர்களின் முறையீட்டைக் கேட்டால்
ப்ரோத்ஸு	—அவர்களை உடனே ரக்ஷித்தருளும் நீ
நன்னுப்ரோவ குன்ன	—என்னை மட்டும் ரக்ஷித்தருளாது விட்டால்
விடனன்ன!	—உன்னை விடமாட்டேன் அண்ணா!
ஸ்ரீ ஜானகி ராஜ!	—ஸீதா நாயகனே!
த்யாகராஜ க்ருத பூஜ!	—த்யாகராஜனால் பூஜிக்கப்பட்டவனே!

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களிலொன்ருகும். இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் ஸ்ரீராமனுடைய குணாதிசயங்களை வர்ணித்துத் துதிக்கிருர்.

தேவயேமிதோவ:—'தரிதாபுலேக' என்ற கீர்த்தனத்திலும் இது போன்றே முறையிட்டுள்ளார்.

ஆதரிம்பராதா:—'நின்னே நெர நம்மினனு' என்ற கீர்த்தனத்தில் தான் ஸ்ரீ ராமனையே உறுதியாக நம்பியுள்ளதை குறிப்பிட்டுள்ளார். அவ்விதம் நம்பிய தன்னை ஆதரித்தருளலாகாதாவெனப் பிரார்த்திக்கிருர்.

ஸ்ரீ நாதாவனிலோன;—ராவணாதி துஷ்டர்களை வதைத்து தண்டகாரண்ய வாஸிகளான மஹரிஷிகளின் கஷ்டங்களைத் தீர்த்து வைத்தது போன்று, தன்னைத் துன்புறச் செய்யும் காமக்ரோதாதி சத்ருக்களை வென்று ரக்ஷித்தருளப் பிரார்த்திக்கிருர்,

வின்னன்:—'மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜாமி கதாசன' என்று சொல்லப்படும் வால்மீகி வாக்யத்தின்படியுள்ள தன் நியமத்தை ஸ்ரீராமன் மீருது தன்னை ரக்ஷித்தருளவேண்டும் என ஸ்வாமிகள் வேண்டிக் கொள்கிருர். ஸ்ரீராமன் தன்னை ரக்ஷித்தருளாவிடில் தான் அவரை விடப்போவதில்லை என்ற தன் மனோ உறுதியையும், தெரிவித்துக் கொள்கிருர்.

IV

ராகம் வராளி ஆதி தாளம்

39-வது மேள ஜன்யம். ஆ. ஸகரிகம பதநிஸ்
அவ. ஸம்பூர்ணம்.

பல்லவி

ஸா பம பா பா	தபமப மா மா	மதபம	காரீ	ஸரீ	ஸா, ஸா
ஸ்ரீ ரா . . ம	ஸ்ரீ . . ரா . ம	ஜிதரா .	. ம	கத	கா ம

சரணம்

மகா மா பாத	நி தா நீ ஸ்ாரி	க்ா, ரீ	ஸ்நிரி	ஸ்நிதப	மகரிஸ
தே . வ ஏ மி	தோ . வ நன்னு	ப்ரோவ	வே . க	ரா . . .	வா . . .

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

இந்தியா கவர்ன்மேண்டில் வைத்திய பட்டமும் ஸன்னதும் பெற்ற வைத்தியரத்ன பண்டிட்
யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical Dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, கீல்பிடிப்பு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஸித்த மகரத்வஜம்

தங்கம் சேர்ந்த தாதுபுஷ்டி நர்வைன் டானிக். 30 மாத்திரைகள் சீசா 1-க்கு ரூ. 5. வி. பி. வேறு.

ஆனந்த படை நிவாரணி

இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பிவாராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணா 12. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

அழகு, ஆரோக்யம், ருசி, ஸுவாஸனை இவைகளை அளிக்கும், உயர்ந்த பற்பொடி இது ஒன்றுதான். எங்கும்கிடைக்கும், கேட்லாக் இனாம்.

வைத்திய ஸித்தாச்ரமம்,
25-B. யதோத்காரி கீழ மாடவீதி,
சின்ன காஞ்சீவரம்.

ஜோதிர் மண்டலம்

(பின்பக்கத் தொடர்ச்சி)

புதன் வக்கரிக்க ஆரம்பிக்கிறது. அப்பொழுது அது மிதுனக் கூட்ட நக்ஷத்திரங்களுக்கருகே சென்று விட்டிருப்பதைக் காணலாம். அதற்குப் பிறகு, புதனுக்கும், சூரியனுக்கும் இடையேயுள்ள தூரம், குறைந்து கொண்டே வரும். இம்மாதம் 31-ம் தேதியன்று (13-6-42) புதன் சூரியனுடனேயே அஸ்தமித்துவிடும். அதற்குப் பிறகு, சில நாட்கள் கழித்து கீழ்வானில் சூரிய உதயத்திற்கு முன் புதனைக் காணலாம்.

சுக்கிரன்:—இம்மாதமும் விடியற்காலையில் வெகு உன்னத ஒளியுடன் சுக்கிரன் பிரகாசித்துக்கொண்டிருக்கும். மாத முதலிலிருந்த ஒளியைவிட மாதக் கடைசியில் இதன் ஒளி சிறிது குறைந்திருந்தபோதிலும் மற்ற எல்லா நக்ஷத்திரங்களையும்விட, வெகு பிரகாசமாகவே சுக்கிரன் விளங்கும். மாதமுதலில் மீனக் கூட்டத்திலும் 18-ம் தேதிக் கப்புறம் (31-5-42) மேஷத்திலும் சுக்கிரன் ஊர்ந்துவரும்.

குஜன்:—இம்மாதம் 25-ம் தேதிவரை (7-6-42) குஜன், மிதுனத்திலும், அதன் பிறகு கடகத்திலும் ஊர்ந்துவரும் மேல் வானில். சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு சுலபமாக, குஜனைக் காணலாம். இதன் பிரகாசம் அதிகமில்லாவிட்டாலும், இதன் சிவந்த நிறமே, இதை மிகவும் சுலபமாகக் கண்டு பிடிக்க உதவும்.

குரு:—சென்ற பல மாதங்களாக ரிஷபக் கூட்டத்தில் ஊர்ந்து வந்த குரு, இம்மாதம் 23-ம்தேதிவரை ரிஷபத்திலும், அதற்குப் பிறகு மிதுனத்திலும் நகர்ந்துவரும். இதன் உன்னத ஒளி மேல்வானை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அழகு படுத்துகிறது. ரிஷப-மிதுனத்தின் முக்கிய ஒளி மிக்க நக்ஷத்திரங்களினிடையே குரு, ஒரு அரசன்போல் வீற்றிருக்கிறது.

சனி:—இம்மாதமெல்லாம் ரிஷபத்திலேயே யிருக்கிறது. இம்மாதம் 10-ம்தேதியன்று (23-5-42) சூரியனுடனேயே சனி உதயமாகி அஸ்தமிக்கிறது. மாதக் கடைசியில் சூரிய உதயத்திற்குமுன் கீழ்வானில் சனியைக் காணலாம்.

ஊரானஸும், நெப்டியூனும், முறையே ரிஷபத்திலும், கன்னியிலும் இருக்கின்றன. உரானஸ் 9-ம்தேதியன்று (22-5-42) சூரியனுடனேயே உதயமாகி, மறைகிறது.

சந்திரன் ஆகாயத்தில் சஞ்சரிக்கையில் கீழ்க்கண்ட தேதிகளில் கிரஹங்களின் அருகே காணப்படும்.

மே மீ
17உ—புதனருகில்
18உ—குருவினருகில்
19உ—குஜனருகில்
25உ—நெப்டியூனருகில்

ஜூன் மீ
10உ—சுக்கிரனருகில்
12உ—உரானஸருகில்
12உ—சனியருகில்

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை
"சுதேஹமித்திரன்"
எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.
அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஸ் வைகாசிமீ

★

விசாகம்

இப்பக்கத்திலுள்ள படம், சென்னையில் இம்மாதம் முன்னிரவில் நமக்குப் புலப்படும் நக்ஷத்திரக்களைக் காட்டுகின்றன. படத்திலுள்ளபடியே முதல் தேதி இரவு 10-30 மணிக்கும், 15-ம் தேதி யன்று 9-34 மணிக்கும், 32-ம் தேதி யன்று 8-27 மணிக்கும் காணப்படும். சென்னைக்கு வடக்கே தெற்கேயுள்ள இடங்களுக்கும் இப் படத்தை உபயோகிக்கலாம்,

படத்தை உபயோகிக்க:—எந்த திசையைநோக்கி நிற்கிறோமோ அத்திசை படத்தின் அடிப்பாகமாக வரும்படி படத்தைத் திருப்பி வைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது நமக்கு எதிரிலுள்ள நக்ஷத்திரங்கள் படத்தில் அடிப்பாகம் முதல் நடு வரையில் காணலாம்.

நக்ஷத்திரக்கூட்டங்கள்

ராசிக் கூட்டங்களில் கடகம், சிம்மம், கன்னி, துலாம் விருச்சிகம், தனுசு, முதலியவை மேற்கு முதல் தென்கிழக்குவரை வியாபித்திருக்கின்றன. மேற்கு வானில் காணப்படும், சிம்மமும், கன்னியும் மிக அழகிய கூட்டங்கள் அவைகளின். முக்கிய நக்ஷத்திரங்களாகிய மகம், சித்திரை, நக்ஷத்திரங்கள் முதல்தர ஒளியுடன் பிரகாசிக்கின்றன. தென் மேற்கே வெளிவந்துள்ள விருச்சிகத்தின் கூட்டம் ஒரு தேளின் உருவை அழகுடன் சித்தரிக்கிறது. அதன் தலையிலும், உடலிலும், வளைந்த கொடுக்கிலும், பல அழகிய ஒளி பொருந்திய நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றன.

வடக்கே துருவ மண்டலமும், சப்தரிஷி மண்டலமும் வடவானின் பெரும் பாகத்தை அடைந்திருக்கின்றன. வடகிழக்கே, அம்சம் உதயமாகியிருக்கிறது. அதற்குச் சிறிது உயரத்தில் வீகா நக்ஷத்திரம் பிரகாசிக்கின்றது. இதுவே வடவானின் மிக உன்னத நக்ஷத்திரம். வடகிழக்கு வானில் பூட்ஸ், ஹெர்குலீஸ் கூட்டங்களும் காணப்படுகின்றன. ராஜாளியும் கிழக்கே உதயமாகிறது.

தென்மேற்கே வானின் பெரும்பாகத்தை அடைப்பது கடற்பாம்பின் கூட்டம் தான். (Hydra) இந்த பாம்பின் தலைப் பாகம் கடகத்திற்குச் சிறிது தெற்கு பாகத்தில் இருக்கிறது. இதனுடைய வால் துலாக் கூட்டத்தின் தெற்கு வரையில் வியாபித்திருக்கிறது. இக்கூட்டத்தின் தலை பாகத்தில் 5 நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. இந் நக்ஷத்திரங்களை ஆயில்யம் என ஹிந்துக்கள் கொள்கிறார்கள்.

இக் கூட்டம் வானில் வெகு தூரத்தை அடைத்த போதிலும் முக்கியமான, பிரகாசமான நக்ஷத்திரங்கள் ஒன்றும் இதற்கருகே கிடையாது, இப்பாம்பின் உடலில் (Alfard) 'ஆல்-பார்டு' என்று வழங்கும் நக்ஷத்திரம், இக்கூட்டத்தின் முக்கிய நக்ஷத்திரம். 'ஆல்-பார்டு' என்றால் 'ஏகாங்கி' என்று அர்த்தம். பெயருக்குத் தகுந்தாற்போலவே இக்கூட்டத்தினருகே பிரகாசமான நக்ஷத்திரங்கள் ஒன்றும் கிடையாது. இந்த நக்ஷத்திரத்திலிருந்து நமக்கு ஒளி வந்து சேர சுமார் 800 வருஷங்கள் ஆகின்றன. இது நேர் வழியாகப் போவதாகத் தெரியவில்லை. ஆதலால் இதைச் சுற்றி ஒரு ஒளியிழந்த உப-கிரஹம் சுற்றி வருவதாக நிபுணர்கள் ஊகிக்கிறார்கள்.



ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

வைகாசிமீ 1உ

சுக்கிரன்		சூரியன் புதன் சனி	குஜன் குரு
கேது	10உ—மிதுன-புதன் 14உ—மேஷ-சுக்கிரன் 21உ—கடக-குஜன் 28உ—ரிஷப-புதன்		
			ராகு

புராதனக் கொள்கை

இக்கூட்டம் ஒரு பாம்பைக் குறிக்கிறது. கிரேக்கர்கள் புராதனக் கொள்கைப்படி, இப்பாம்பு லேர்மா ஏரிக்குப் பக்கத்தில் வசித்து வந்ததாம். ஹெர்குலீஸ் எனும் வீரன் இதை எதிர்த்து சண்டையிட்டான். இப்பாம்பிற்குப் பலதலைகள் உண்டு. ஹெர்குலீஸ் ஒரு தலையை வெட்டி வீழ்த்தினால், இரண்டு தலைகள் அவ்விடத்தில் முளைக்கும், ஹெர்குலீஸினால் இதைக் கொல்ல முடியாமல் சோர்வடைந்தான். அப்பொழுது அவன் சிநேகிதன், இப்பாம்பின் தலைகள் வெட்டியதும் கொளுத்தினால், மறுபடியும் தலைகள் முளைக்காது எனச் சொன்னான். அதேமாதிரியாக ஹெர்குலீஸ் செய்து இப்பாம்பைக் கொன்றான். அதன்பிறகு, ஹெர்குலீஷ், இக்கடற் பாம்பு, இரண்டும் ஆகாயத்தில் நக்ஷத்திர மண்டலங்களாக நவிளங்கும்படி கிரேக்கக் கடவுள் செய்ததாக கிரேக்கர்கள் கொள்கை.

தெற்கே அடிவானத்தருகே சென்டராஸ் கூட்டமும், 'தென் சிலுவை'க் கூட்டமும் அழகாக பிரகாசிக்கின்றன.

கிரஹங்களின் நிலை

புதன்:—சென்ற மாத நடுவில் ரிஷபத்திற்கு மாறிய இக்கிரஹம், இம்மாதமெல்லாம் ரிஷபத்திலேயே ஊர்ந்து வருகிறது. இம்மாதம் 6-ம் தேதியன்று (19-5-42) புதன். சூரியனுக்குக் கிழக்கே வெகு தூரத்திலிருக்கிறது. அப்பொழுது அதை மேல் வானில் காணலாம். 17-ம் தேதியன்று (1-6-42)

(முன்பக்கம் பார்க்க)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு

அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

திருவெண்காடு வரலாறு

ஸ்வேதகேதுவின் விருத்தாந்தம்

★

சிவபக்தியின் சிறப்பு

★

முன்னொரு சமயம் உத்தாலகர் என்ற பிராமணரொருவர் இருந்தார். அவர் ஸகல வேதங்களிலும் தேர்ச்சியடைந்தவர். அவைகளின் அர்த்தங்களையும் நன்கு அறிந்தவர். இந்திரியங்களை அதன் வழி விடாது அடக்கியவர். மிகவும் பரிசுத்தர். எப்பொழுதும் சிவபெருமானின் பாதகமலங்களையே இடைவிடாது நினைத்து ஆனந்தம் கொள்வார். சிவபிரானைத் தவிர வேறெதுவும் அவரது கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஈசன் லீலாவினோதங்களே அவரது செவிகளைப் பயன்படுத்தின. கைகால் முதலிய எல்லா அவயவங்களும் ஈசனது திருப்பணியிலேயே ஈடுபட்டன. இப்படி இருந்து வரும் நாளில்,

உத்தாலகரின் தவம்

தமக்கு புத்திரபாக்கியம் இல்லாதது கண்டு வருந்தினார், சிவபிரானைக் குறித்து கடுந் தவம் புரிந்தார். சிவபிரானும் அவர் தவத்திற்கிசைந்து அவர் முன் தோன்றினார்: வேதியரும் சிவனைக் கண்டு ஆனந்தம் கொண்டார். அவரைச் சுற்றி வந்து நமஸ்கரித்தார். வேத மந்திரங்களினால் துதித்தார். எனக்கு ஓர் புதல்வனைக் கொடுக்க வேண்டுமென வேண்டினார். இதைக் கேட்ட ஸர்வேசுவரன் 'உத்தாலகி' என்று அன்புடனழைத்தார். 'உனக்கு நீண்ட ஆயுளை உடைய மந்தனாகிய ஓர் பிள்ளை வேண்டுமா. அல்லது மஹாபுத்திமானாகிய அல்ப ஆயுளை உடைய ஓர் பிள்ளை வேண்டுமா' என்று கேட்டார். அதைக் கேட்ட வேதியர் 'புத்தியில்லாத பிள்ளையை அடைவதைக் காட்டிலும் பிள்ளையில்லாமல் இருப்பதே நலம்' எனக் கருதினார். சிவபிரானது வாக்கியத்தை நினைத்து உருகினார். பிறந்த பிள்ளை சிறிது நாளில் இறப்பதும் துயரமேயாகும். நாம் என்ன செய்வது, இதுவும் உனது திருவிளையாடல் என நினைத்து வேறு வழியில்லாமை கண்டு ஓர் முடிவுக்கு வந்தார். 'ஹே ஈசனே! மிகவும்புத்திசாலியான பிள்ளையே வேண்டும். அருள வேண்டும்' என்றார். ஈசனும் அவ்விதமே மிகுந்த அறிவுள்ள எட்டு வயது கொண்ட ஓர் புத்திரன் பிறப்பான் என்று வரம் கொடுத்து மறைந்தார்.

ஸ்வேதகேதுவின் ஜனனம்

சில காலம் கழிந்தது. உத்தாலகரின் மனைவி ஓர் ஆண் மகவைப் பெற்றாள். உத்தாலகரும் அக்குழந்தைக்கு ஸ்வேதகேது" எனப் பெயர் வைத்தார். தம்பதிகள் அதிக அன்புடன் அக்குழந்தையை வளர்த்து வந்தார்கள். நான்கு வருஷங்கள் கழிந்தன. ஸ்வேதகேதுவிற்கு ஐந்தாவது பிராயத்திலே வித்தியாப்பியாஸம் செய்து வைத்தார். ஐந்தாம் வயதிலேயே முறைப்படி உபநயனம் செய்தார். ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வ என்ற நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்து வைத்தார். அதன் அங்கங்களையும் நன்கு உணரும்படிச் செய்தார். உபநிஷத்துகளையும் உபதேசித்தார். ஸ்வேதகேதுவும் அவை யாவையும் நன்கு கற்றுணர்ந்தான்.

"தகரோபாஸனை"

ஸ்வேதகேதுவிற்கு தகரோபாஸனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. தந்தையை வணங்கினான். தனக்கு தகர வித்தையை உபதேசிக்க வேண்டும் என வேண்டினான், உத்தாலகரும் அதை அங்கீகரித்தார். "குழந்தாய்? உபாஸனைகள் பல்வேறு உள்ளன. அவைகளில் தகரோபாஸனையே மிகவும் சிறந்தது. இந்த மானிட சரீரத்தை பிரும்மபுரம் எனச் சொல்லுவதுண்டு, ஒரு பட்டிணத்திற்கு காவலர்கள் முதலியன உள்ளனவோ, அவ்விதமே இச்சரீரத்திலும் பிராணன் முதலியன அமைந்துள்ளன. பட்டிணத்தில் அரசனுக்கு ஓர் இருப்பிடம் உண்டு. அதுவே மனையாகும். அதுபோல் சரீரமாகிய பட்டணத்தில் ஈசனுக்கோர் இடமுண்டு. அதுவே நமது ஹிருதயகமலம். இதை வடமொழியில் தகரம் புண்டரீகம் எனச் சொல்வதுண்டு. தகரம் என்றால் மிகச் சிறியது என்று அர்த்தம். மனிதனுடைய மனது மிகச்சிறியதாகையால் தகரம் எனப்படும். அதன் உருவம் தாமரைப் பூவை ஒத்திருத்தலால் கமலம் என்று சொல்லப்படுகிறது. ஹிருதய கமலத்தின் மத்தியவர்த்தியான ஆகாசத்தையே தகரம் எனக் கூறுகிறோம். அதில் ஈசனை உபாஸிப்பது தகரோபாஸனை. ஆதலால் நமது ஹிருதய கமலமே ஈசனது ஆலயமாகும். கடவுள் எங்கும் நிறைந்தவர். ஆயினும் மனதால் அறியப்படுவதால் மனதையே அப்பரம் பொருளின் வீடு என்கிறோம். 'இந்தச் சிறிய ஹிருதய கமலத்தில் ஓர் ஆகாசமிருக்கிறது. அது மிகவும் சிறியது, அவ்வாகாசத்தைத்தான் பிரும்மம் எனச் சொல்லுவது. உருவமில்லாமை, சூக்ஷ்மமாயிருத்தல், எங்கும் நிறைந்தது ஆகிய காரணங்களினால் அப்பரம்பொருள் ஆகாசத்தோடு ஒத்திருப்பதால் அதையும் ஆகாசம் எனக் கூறுகிறோம். பரம் பொருள் வேதங்களாலும், ஆகாசம் என்றே கூறப்படுகிறது. அந்த ஆகாசமென்று பெயருள்ள பரம்பொருள் தான் தகரோபாஸனையில், தியானம் செய்யத்தகுந்தது. அப்பரம்பொருள் ஹிருதய கமலத்தின் மத்தியிலுள்ள ஆகாசத்தில் அமையப்பெற்றிருக்கிறது. ஜோதி வடிவாகிய சிவபிரானை அவர்க்கிருப்பிடமான ஹிருதய கமலத்திலுள்ள ஆகாசத்தோடு கூட தியானம் செய்ய வேண்டியது. இதுவே தகரோபாஸனையாகும். இந்த தகரோபாஸனை இரண்டுவிதம். ஒன்று ஆத்தியாத்மிகம், மற்றொன்று ஆதிபௌதிகம், ஆத்தியாத்மிகம் என்பது நம்முடைய ஹிருதயாகாசத்தில் ஈசுவரனைத் தியானம் செய்வது. மற்றொன்று விராட் புருஷனது ஹிருதயாகாசத்தில் ஈசுவரனை உபாஸிப்பது. இதில் ஆத்தியாத்மிகம் என்பது மிகவும் கஷ்டம். ஆதலால் ஆதிபௌதிகத்தை நானுனக்குக்கூறுகிறேன். இதுவே உனக்கு ஸாத்தியமாகும், இப்பூவுலகில் சிதம்பரம் என்ற புண்ணியஸ்தலமிருக்கிறது. அதுவேவிராட்புருஷனின் ஹிருதயாகாசம். சித் என்பதற்கு ஞானம் எனப்பொருள். அம்பரம் என்பதற்கு ஆகாசம் எனப் பொருள். ஆகவே சிதம்பரம் என்பதற்கு ஞானாகாசம் எனப் பொருள். இதையே வியாக்கிரபுரமென்றும், புண்டரீகபுரமென்றும் சொல்லுவதுண்டு. அதில் சிவகங்கை என்றொரு புண்ணிய தீர்த்தமுண்டு. அதில் ஸ்நானம் செய்த மாத்திரத்திலேயே ஐந்து மஹாபாதங்களிலிருந்தும் விடுபடுகிறான். ஆதலால் விராட் புருஷனது ஹிருதயாகாசமாகிய சிதம்பரத்தில் ஞானவடிவாகிய சிவபிரான் ஆனந்தத் தாண்டவமாடுகிறார். நீ அங்கு சென்று அவரை உபாஸிக்கவேண்டும்.

ஸ்வேதனின் கதை

துவாபரயுகத்தில் ஸ்வேதன் என்னும் ஓர் அரசனிருந்தான். அவன் வயது முதிர்ந்ததும் பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தான். தன் மனைவியுடன் காடு புகுந்தான். வானப்பிரஸ்தாஸ்ரமம் கொண்டான், சிறிது நாளில் அவன் மனைவி மரணமடைந்தாள். அதுகண்டு விசனித்தான் அவ்விதம் தனக்கு மரணம் வரும் எனப் பயந்தான். பெரியோர்களிடமிருந்து தெரிந்து கொண்டு வெண்காடு வந்தான். முக்குளங்களில் மூழ்கினான். ஈசனுக்குத் தொண்டு புரிந்தான். சில நாளில் அவனுயிரைக் கொண்டு போக யமன் வந்தான், ஸ்வேதனைக் கூப்பிட்டான். அவன் இணங்காது சிவனைத் துதித்தான். உடன் பக்தனுக்கிணங்கி சிவன் பிரஸன்னமானார். யமனை வதம் செய்தார், ஸ்வேதனை ரக்ஷித்தார். பிறகு தேவர்களுக்கிணங்கி யமனை உயிர்ப்பித்தார், ஆகவே நீ சிதம்பரத்தில் சிலகாலம் தங்கிவிட்டு திருவெண்காட்டிற்குச் செல்ல வேண்டும். நீயும் யமனை ஜயிப்பாய்' என்று உபதேசித்தார்.

ஸ்வேதகேது சிதம்பரம் அடைதல்

ஸ்வேதகேதுதுவும் தந்தையிடமிருந்து உபதேசம் பெற்று ஆனந்தம் கொண்டார். தந்தையைப் பிரதக்ஷிணம் செய்து சிதம்பரம் புறப்பட்டார். இதற்குள்ளாக ஸ்வேதகேதுவிற்கு ஏழு வருஷங்கள் சென்றன. தாய் தந்தையர்களுக்கு புத்திரனை அனுப்ப மனம் வரவில்லை. மிகவும் வருந்தினார்கள். சுவேதகேதுவோ உத்திரவு கொடுங்கள் என்றான். அவர்கள் அழ வாரம்பித்தார்கள். அது கண்ட சுவேதகேது அவர்களை மறுபடியும் வணங்கினான் "நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?' என வினவினான். உத்தாலகர் ஸ்வேதகேதுவைக் கட்டித் தழுவி உச்சிமுகர்ந்து கீழ்கண்டவாறு கூறினார்.

"குழந்தாய்? நாங்கள் உன்னைப் பெறவேண்டி, ஈசனைக் குறித்து கடும் தவம் புரிந்தோம். அதன் பயனாக உன்னை அடைந்தோம். ஆனால் உனக்கு எட்டு வயதுதான் எனக் கடவுள் கூறியிருக்கிறார். அவருடைய வாக்கியம் பொய்க்காது. ஆகவே அதை நினைத்து வருந்துகிறோம்." இதைக் கேட்ட ஸ்வேதகேது; "இதற்காகவா நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்? சிவபெருமான் தன் பக்தனது துயரத்தை தனது துயரம் என்று நினைப்பவரல்லவா. ஆகவே நான் அவரைத் துதித்து மரணத்தினின்றும் விடுபடுவேன். இது திண்ணம். பிள்ளைகளினால் தாய் தந்தைகள் ஸந்தோஷப்படுவதல்லவோ உலக வழக்கம். இனி நீங்கள் வருந்த வேண்டாம். நீங்களும் தவத்தினால் தானே என்னை அடைந்தேன் என்கிறீர்கள். அத்தவம்

இப்பொழுது எங்கு போயிற்று" என்று பலவாறு தேற்றினன். அவர்களும் ஒருவாறு ஆறுதலடைந்தார்கள். நான் உன்னை எங்ஙனம் விட்டுப் பிரிவதென்ருர் உத்தாலகர். ஸ்வேதகேது தந்தையை வணங்கி "நீங்கள் கஷ்டப்பட வேண்டாம். இல்லத்திலேயே இருங்கள், ஆசீர்வதியுங்கள். நான் போய் வருகிறேன்" என்ருன்.

பிதாவின் ஆசீர்வாதம்

உத்தாலகர் பிள்ளையை ஆசீர்வதித்தார். 'நீ சிதம்பரம் சென்று ஆனந்த நடேசனை தரிசித்து நான் சொல்லியவாறு தகரோபாஸனம் செய்வாயாக. அங்குகொஞ்ச நாள் தங்கிய பிறகு மிருத்யுஞ்ஜய க்ஷேத்திரமாகிய திருவெண்காடு செல்ல வேண்டும். அங்கு சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும். அவ்வாலயத்தில் ஸரஸ்வதீ ஸரசின் கரையில் ஓர் வடவிருக்ஷமிருக்கிறது. அவ்விடத்திலேயே அமர்ந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஆறு ஆயிரம் ஜபிப்பாயாக. சிவன் அருள் புரிவார்" என மொழிந்தார். ஸ்வேதகேது தகப்பனிடம் விடைபெற்று சிதம்பரம் வந்து சேர்ந்தான். சிவகங்கையில் ஸ்நானம் செய்தான். நடேசனை மனமாறத் துதித்தான். திருமூலநாதனையும் தரிசித்தான். பிறகு அவ்வாலயத்திலேயே ஓரிடத்திலமர்ந்தான். தகரோபாஸனையில் ஈடுபட்டான். சில காலம் கழிந்தன. தீர்த்தயாத்திரை செய்ய வேண்டும் என எண்ணமுண்டாயிற்று. சிதம்பரத்திலிருந்து புறப்பட்டான். பல க்ஷேத்திரங்கள் சென்ருன். ஆங்காங்கு புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தான். கடவுளைத் தரிசித்தான். மரண காலம் ஸமீபித்து விட்டதென அறிந்தான்.

வெண்காடடைதல்

உடனடியாக வெண்காடு வந்து சேர்ந்தான். விநாயகரைத் தரிசித்து மணிகர்ணிகையிலும் முக்குளங்களிலும் முறைப்படி மூழ்கினன். ஸ்வேதவனப்பெருமானையும் பெரியநாயகி அம்மையையும் கண்டு உள்ளம் மகிழ்ந்தான். சுவேதவனேசனது ஈசான்யத்தில் ஓர் லிங்கத்தை ஸ்தாபித்து ருத்திர மந்திரங்களினல் முறைப்படிப் பூஜித்தான். பிரும்மவித்தையின் எதிரிலுள்ள ஆலமரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டு பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்தான். இவ்விதம் சில நாட்கள் சென்றன.

யமனைக் கண்டான்

சுவேதகேது எப்பொழுதும் போல் பத்திர குடலையை எடுத்துக்கொண்டு மணிகர்ணிகை நதிக்குச் சென்ருன். முறைப்படி ஸ்நானம் செய்தான். நறுமணம்வீசும் புஷ்பங்களை பரித்து குடலையில் வைத்துக்கொண்டான். பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக்கொண்டே கோவிலுக்குப் புறப்பட யத்தனித்தான். திடீரென்று ஸ்வேதகேதுவின் இடது கண் துடித்தது. "இடது கண் ஏன் நமக்குத் துடிக்க வேண்டும்? நமக்கு ஏதோ கஷ்டம் வரபோகிறது. ஆம் நினைவு வந்து விட்டது. நமக்கு இன்றுடன் ஈசுவரனுல் அளிக்கப்பட்ட வயது முடிவடைகிறது, யமன் வந்து விடுவான். இதையே கண் துடிப்பு தெரிவிக்கிறது" என அறிந்து கொண்டான். அப்படி இருந்தும் தைரியத்தை இழக்கவில்லை: கோவிலைக் குறித்துப் புறப்பட்டான், கொஞ்ச தூரம் நடந்துசென்ருன், இதற்குள் யமனும் வந்து விட்டான். ஸ்வேதகேதுவின் முன் தோன்றினன், மிகுந்த வணக்கத்துடன் ஸ்வேதகேதுவைக் குறித்து பின் வருமாறு சொல்லத் தொடங்கினன்.

யமனுடன் சம்பாஷணை

முனிகுமாரா? நான் தர்மராஜன், உனக்கிறைவனுல் அளிக்கப்பட்ட ஆயுள் முடிவடைந்து விட்டது. ஆதலால் உன்னை அழைக்க வந்தேன். என்னுடன் வருவாயாக" என யமன் வினயமாக வேண்டினன். "இது ஈசனது ஆணை. இதைத் தடுக்க உன்னுலும் என்னுலுமியலாது. இதுவே ஸனுதன தர்மம். எந்த மனிதர்கள் பாபகாரியங்களில் ஈடுபடாதவர்களோ, எப்பொழுதும் புண்ணிய காரியங்களிலேயே மனதைச் செலுத்துகிருர்களோ அப்படிப்பட்ட மகான்களை நானே நேரில் வந்து பக்தியுடன் என்னூர் அழைத்துச் செல்வேன். எந்த மனிதர்கள் புண்ணிய காரியத்தை மனதினுலும் நினைப்பதில்லையோ அவர்களை என்னுடைய பயங்கரார்களான தூதவர்களைக் கொண்டு என்னுலகை அடையச் செய்வேன், இவ்வுலகில் நீர் புண்ணியசாலி. இந்த பால்ய வயதிலேயே விஷயங்களினின்றும் விரக்தியடைந்தவர். சிவ பக்தர், பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபிப்பவர், ஆகவே உம்மை அழைப்பதற்கு நேரிலேயே வந்தேன். பிரம்மதேவனுல் கொடுக்கப்பட்ட எட்டாவது வயது இப்பொழுது முடிவடைந்துவிட்டது. தபோதனரே? உம்மை வேண்டுகிறேன். நீர் என்னுடன் வர வேண்டும். விதியை யார் வெல்ல முடியும்? என்ருன்.



அதிக வலுவு, நீடித்துழைக்கும் குணங்களுக்கு பர்ன் வெண்ணிறமான பேஸின்கள் புகழ்பெற்று விட்டன.

சுலபமான அமைப்பு முறை, அழகிய தோற்றம். உடையாது. விரிசல் காணுது என்பதற்கு உத்திரவாதம். சுத்தம் செய்யவும், சுத்தமாகவைத்திருக்கவும் சுலபமானது.

இந்தியாவில் இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தால் தயாரிக்கப்படுகின்றது. பர்ன் கை அலம்பும் பேஸின்கள் மிதமான விலையுள்ளவை. இறக்குமதி செய்யப்படும் சிறந்தவற்றின் ரகத்திற்கு இணையானது.

— விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசம். —

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE
BP-B(A)

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,
ஸ்தாபிதம் : 1781
12, மிஷன்ரோ, கல்கத்தா.
தொழிற்சாலை : - ராணிகஞ்சு & ஜபல்பூர்.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—
பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

இனிமையாகப் பாடினர்.

சென்ற மாதம் 17-ம் தேதி திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து சங்கீதக் கச்சேரி நடத்திய ஸ்ரீமதி கே. கோமதி அம்மாள்.

யமனுக்குத் தந்த பதில்

இதைக் கேட்ட முனிகுமாரர் தரும்ராஜனை வணங்கினர். "இன்று இன்னும் சிவனைப் பூஜிக்கவில்லை, சிவனது பூஜை முடிந்ததும் நான்உன்னுடன்வருகிறேன். சிறிது நேரம் பொறுப்பாயாக" என வேண்டினர். இதற்கு யமன் இணங்கவில்லை. ஸ்வேதகேது முனிவர் "நான் சிவ பூஜைக்காக ஸங்கல்பித்துவிட்டேன். இனி சிவ பூஜை முடிக்காது என்னுல் வர இயலாது" என்ருர். இவ்விதம் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்துகொண்டனர். இப்படியாக முடிவில் சிவனது ஆலயத்தையும் அடைந்தனர். மமனும் தன்னுலியன்ற வரை நயமாகச் சொன்னுன். யாதும் பயன்படவில்லை, முனிவனும் காலனை மதித்தானில்லை.

யமனை எரித்தார்

யமனுக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. "அடே மூர்கா? எனது பலம் நீ அறியாய், இப்பொழுது வருவாயானுல் பொருப்பேன். இல்லையேல் ஒரு கணமும் பொருக்கமாட்டேன்" என்ருன் யமன், இதற்கும் ஸ்வேதகேது இசைந்தானில்லை. காலனின் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. அதிகார கர்வம் மனதைக் கவர்ந்தது. பலாத்காரம் செய்ய யத்தனித்தான். "ஹே மூடா? இப்பொழுதாகிலும் சொல்கிறேன் கேள். அல்லேல் கெடுவாய். இதோ இருக்கிறது பாசம். இதனுல் உன்னைக் கட்டுவேன். கரடுமுரடான வழிகளுண்டு. அவ்வழியே உன்னை அழைத்துச் செல்வேன்" என்று அதட்டினுன்; ஸ்வேதகேது அஞ்சாது லிங்கவடிவாகிய ஸ்வேதவனப் பெருமானை இறுகக்கட்டிக்கொண்டான். "சம்போ சங்கரா மஹாதேவா கருணையில்லா இக்காலனிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என வாய் விட்டலறினன். யமனும் யாது செய்வது என அறியாதவனுய் மதிமயங்கினன். ஸ்வேதகேதுவையும் லிங்கத்தையும் சேர்த்து தன் பாசத்தினுல் கட்டினுன். பலமாக இழுத்தான். திடீரென ஓர் சப்தமுண்டாயிற்று. லிங்கத்தினின்றும் ஸர்வேசுவரனுகிய காலகாலன் தோன்றினர். அவருடைய நெற்றிக் கண்ணுக்கு யமன் இலக்கானுன். அக்கணமே அவன் சாம்பலாருன். சிவபிரான் பக்தனது பாசத்தை அகற்றினர். இதைக் கண்ட ஸ்வேதகேது மிக்க ஆச்சரியமடைந்தான். ஈசனடிகளில் விழுந்தான். பலவாருகத் துதித்தான். சந்திரசேகரன் சுவேதகேதுவை தன் கரங்களினுல் வாரி எடுத்தார். "குழந்தாய்! இனி பயம் வேண்டாம். இதோ பார், யமன் சாம்பலாகி விட்டான். இனி என்றும் நீ எட்டு வயதுள்ளவனுக இருப்பாயாக" எனத்தேற்றி ஆசீர்வதித்தார். ஸ்வேதகேதுவும் பல மஹரிஷிகளும் தேவர்களும் விஜயீபவ விஜயீபவ என ஆரவாரம் செய்து பலவிதமாகத் துதித்தார்கள்.

பூதேவியின் பிரார்த்தனை

இதற்குள் பூமிதேவியும் காலனிறந்ததையறிந்தாள். மிகவும் வருந்தினுள். பெரியநாயகியுடன் கூடிய ஸ்வேதவனப்பெருமானை வணங்கிருள். இங்கு வந்தகாரணம் யாது என வினவினர் சிவபெருமான். "தங்கள் பக்தனுக்கு அபராதம் விளைவித்ததின் பயனுக யமனிறந்தான். அவனில்லாது நான் என்ன செய்வேன். என்னுல் பூபாரம் தாங்க இயலாது. ஆகவே காலனைப் பிழைப்பிக்க வேண்டும்" என வேண்டினுள் பூதேவி.

இது கேட்ட சிவன் காலனைப் பிழைப்பிப்பதாகவாக்களித்தார், காலனையும்பிழைப்பித்தார். காலனும் எழுந்து சிவனை வணங்கினன். "எனது அறியாமையை மன்னிக்கவேண்டும்" என வேண்டினன். "எனக்கு விளைவித்த குற்றத்தைப் பொறுப்பேன். என் பக்தனுக்குச் செய்த குற்றத்தை ஒரு பொழுதும் மன்னிக்கமாட்டேன். ஆயினும் பூதேவிக்காக உன்னை மன்னித்தேன். இது முதற்கொண்டு இந்த க்ஷேத்திரத்தில் நீ பிரவேசிக்காதே. இவ்வூரில் மனிதர்களாயிருந்தாலும் பிராணிகளாயிருந்தாலும் அவர்களின் மரணத்தின் பொழுது வலது செவியில் தாரகமந்திரத்தை உபதேசிப்பேன். அதன் பயனுக அவர்கள் என் பதத்தை அடைவார்கள்" என ஆஞ்ஞாபித்தார். பிறகு தேவர்களும் முனிவர்களும் துதிக்க சிவபிரான் லிங்கத்திலேயே மறைந்தார்.

சுவேத கேதுவும் யமபயம நீங்கி பரமானந்தங்கொண்டு உள்ளங்களித்தான் சிவபிரானையும் மஹாதேவியையும் வணங்கி ஆலமரத்கடியிலமர்ந்தான். தகப்பனுலுபதேசிக்கப்பட்ட ஆத்தியாத்மிக ஆதிபௌதிக தகரோபாஸனை என்ற இரண்டில் சிதம்பரத்தில் ஆதி பௌதிக தகரோபாஸனை செய்தோம். இவ்விடம் ஆதிபௌதிக தகரோபாஸனை செய்ய வேண்டுமென கருதினன். அப்படியே செய்ய ஆரம்பித்தான். சில நாட்கள் சென்றன. ஊருக்குப் போக யத்தனித்தான். புறப்படும் தருணத்தில் அவன் முன் மஹாவிஷ்ணு தோன்றினர்.

விஷ்ணுவின் உபதேசம்

குழந்தாய் என அழைத்தார். நீ ஊருக்குச் செல்ல வேண்டாம். உனது எல்ல விருத்தாந்தங்களையும் உத்தாலகர் தனது தபோபலத்தினுல் அறிவார். நான் சொல்வதைக் கேள். இது மிகவும் புனிதமான க்ஷேத்திரம். சிவக்ஷேத்திரங்கள் பல உள்ளன. சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களில் தர்சனம் முதலியவற்ருல் மட்டும் முக்தி கிடைக்கிறது. இவ்விடத்தில்அவைகளுள்ஏதாவதொன்றினுலேயே முக்திகிடைத்துவிடும்.

வடாரண்யம், கைலாஸம், ஸ்வேதாரண்யம், சிதம்பரம், மதுரை, கும்பகோணம். தேவதாருவனம், அவந்திகாபுரம், ஸத்தியாஷாடாசிரமம் இவைகளில் முறையே ஆனந்தத் தாண்டவம், காளிநிருத்தம், கௌரிதாண்டவம், முனிநிருத்தம், ஸந்தியாதாண்டவம், ஸம்ஹாரதாண்டவம், திரிபுரதாண்டவம், புஜங்கலலிதம், பைக்ஷாடனம் இந்த ஒன்பது தாண்டவங்களையும் செய்தார் சிவபிரான். இம் மஹாபிரளயத்திற்குப் பிறகு உலகை சிருஷ்டிக்க வேண்டுமென பார்வதி விரும்பினுள். அதற்கிசைந்து புவனேததாண்டவம் ஆடினுர். இது கௌரீக்காகச் செய்ததால் இதை கௌரீ தாண்டவம் எனச் சொல்வதுண்டு. இதைத்தான் வெண்காட்டில் பிரதானமாகச் செய்தார். இந்த கௌரீ தாண்டவத்தைப் பார்க்கவேண்டி நான் மதங்காஸ்ரமத்தில் கடும் தவம் புரிந்தேன். அதன் பயனுக கௌரீ தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்தேன். நீயும் இவ்விடத்திலேயே இருந்து தவம் புரிந்து கௌரீ தாண்டவத்தையும் இதர தாண்டவங்களையும் தரிசிப்பாயாக எனக் கூறி விஷ்ணு மறைந்தார்.

ஸ்வேதகேதுவும் வெண்காட்டிலேயே தங்கினுன். தவம் புரிந்தான். ஒன்பது தாண்டவங்களையும் கண்டு ஆனந்த பரவசனுனுன். சிவபெருமான் இவ்வெண்காட்டில் காலனைக் கொன்றதால் இதற்கு காலம் ஜரம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

I.D.L.12. டானிகாப் (F) இருமல், க்ஷயம், காசத்திற்கு டானிக்
I.D.L.42. ஊசாசோ ரக்தசுத்தி, ரக்தவிருத்தி, உஷ்ணசமன டானிக்
I.D.L.22. மகரத்வஜம் பலவிருத்திக்கும் ஆரோக்யத்திற்கும்

(வியாதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)
ஏசால் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & Co
39 THAMBU CHETTY ST. MADRAS
RETAIL BRANCH 285 CHINA BAZAAR RD.

அவனுக்கு — ஒரு விளையாட்டுக் கருவி
அவளுக்கு — ஒரு பொம்மை
ஆனல், பாவம்! இந்த பரிதாபகரமான குழந்தைக்கு ஜம்மியின் லிவர் க்யூர் கொடுங்கள்

எந்த வைத்திய முறைகளிலும் குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு தகுந்த வேறு மருந்து இல்லையென பிரபல டாக்டர்களால் கருதப்படுகிறது. அவர்கள் எல்லோரும் ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் லிவர்க்யூர்த்தான் உபயோகிக்க சிபார்சு செய்கிருர்கள்.

மோசமான போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாபூர், மதருஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினுப்பள்ளி.

ஜயவசிகரணி
அத்ருஷ்ட தாயத்து

கிரஹசார தோஷத்தால் ஏற்படும் எல்லா கஷ்டங்களும் நீங்கி, தொழில்விருத்தி குடும்ப சுகம் முதலிய நன்மைகள் ஏற்படும்.
விலை ரூ. 2-8-0 வி. பி. 0-7-0.
காந்தி ஜோசியர், திருத்தணி.

...ந்த ஐம்பது வருஷங்கள்

"என் ஞாபகக் குறிப்புகள்"

மஹாகனம்

★ ★ ஸர் தேஜ்பஹதூர் ஸாப்ரூ

எழுதியது

சென்ற ஐம்பது வருஷகாலத்தில், இந்தியாவின் முற்போக்குக்காகவும், அதிலும் ஐக்கிய மாகாணத்திற்காகவும், சேவை செய்த சில பெரியோர்களைப்பற்றி, என் ஞாபகம் எட்டிய வரையில், நான் இங்கே குறிப்பிடப்போகிறேன்.

சுமார் 1890ல் நான் ஆக்ரா கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது, அப்போதைய பத்திரிகைகளில் 1885-ல் ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரசைத்தவிர வேறு ஒரு ராஜீயக் கட்சியைப் பற்றியும், நாங்கள் படித்ததில்லை. அந்தகாலத்தில் காங்கிரசில் முக்கியத்துவம் வஹித்து, எங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்தவர்கள் நால்வர் தான் அவர்கள் சுரேந்திரநாத் பானர்ஜி, லால் மோஹன் கோஷ் டபிள்யு. ஸி. போனர்ஜி, பண்டித அயோத்யா நாத். சுரேந்திரநாத் பானர்ஜியின் பிரசங்கங்கள் புத்தகமாக பிரசுரிக்கப்பட்டிருந்தன; நான் அவற்றை மிகுந்த ஆவலுடனும் ஆச்சர்யத்துடனும் படித்தேன். இந்திய ஒற்றுமையைப் பற்றியும் மாஜினியைப் பற்றியும், அவர் செய்த இரண்டு பிரசங்கங்களும் இளைஞனை எனது உள்ளத்தை கொள்ளை கொண்டன; லால் மோஹன் கோஷின் பிரசங்கங்கள் யாவும் புத்தக ரூபத்தில் வெளிவரவில்லையாயினும், எப்படியோ அவர் செய்த பிரசங்கங்களை நான் படித்தேன். அவரது பிரசங்கத்தின் காம்பீர்யத்தை நான் கொண்டாடினேன். அந்த சமயத்தில் ராஜீய விஷயங்களைப்பற்றி எனக்கு நிச்சயமான அபிப்பிராயம் இருக்கவில்லை; ஒன்றும் தெளிவாக இல்லை; அற்ற குறை ஞானத்தை வைத்துக்கொண்டு பிடிவாதம் பிடிக்காமல் மேலும் மேலும் அறிவு விருத்தியில் சிரத்தை கொண்டேன்.

பண்டிட் அயோத்யா நாத்

1891-ல் ஒரு சம்பவம் நடந்தது. அது காங்கிரஸிடம் என்னை இழுத்தது. ஆக்ராவுக்கு பண்டித அயோத்யா நாத் விஜயம் செய்தது தான் அந்த சம்பவம். அவர் ஒரு பிரசங்கம் செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது: அதைக் கேட்க நானும் போனேன்: அவருக்கு தேக அசௌகர்யமாதலால் அவர் கூட்டத்திற்கு வரமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டதும், கூட்டத்தில் கலவரம் தலைகாட்டியது; ஆக்ராவில் தாம் தங்கியிருக்கும் வீட்டிலிருந்து அவர் எப்படியாவது கூட்டத்திற்கு வரவேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்தினர். அதற்கிணங்கி அவர் கூட்டத்திற்கு வந்தார். அப்போது தான் நான் அவரைப் பார்த்தேன்: அதற்கப்புறம் பார்க்கவில்லை. அவரது தோற்றம் மிகவும் உன்னதமானது; அதிக உயரமில்லை; இனிய பார்வை; அடர்த்தியான நீண்ட தாடி; அக்காலத்தில் நாங்கள்



ஸர் தேஜ் பகதூர் ஸப்ரூ

"சங்கோஷியா" என்று சொல்லும் ஒரு குல்லாயை அவர் அணிந்திருந்தார்; இக்காலத்தில் இவ்வாறு ஒருவரும் அணிவதில்லை. நான் அவரிடம் ஆகர்ஷிக்கப்பட்டேன். அவரது தேகசுகம் கெட்டிருந்தது பார்த்தவருக்கெல்லாம் அப்போது நன்கு தெரியும்; ஆயினும் அவர் பேசத் தீர்மானித்தார். அவர் செய்த பிரசங்கம் எவ்வளவு ஆச்சர்யகரமாக இருந்தது! அப்போதுதான் உருதுவில் எவ்வளவு சிறப்பாகப் பேசமுடியும் என்பதை முதன் முதலாக கண்டேன். இந்தக் காலத்திய உருதுவுக்கும் அவரது காலத்திய உருதுவுக்கும் எவ்வளவோ வித்யாசம் இருக்கிறது. அக்காலத்திய பாஷை பரிசுத்தமானது; தூய்மையானது; ஹாஸ்யம் நிரம்பியது; பழைய டில்லி உருது அது என்பதில் சந்தேகமில்லை.

டபிள்யு. ஸி. போனர்ஜி

சென்ற ஐம்பது வருஷ காலத்தில் அதற்கு சமமான வேறு ஒரு உருது பிரசங்கத்தை நான் கேட்டேன் என்று கூற முடியாது; 1897-ல் மொரடாபாத்தில் மற்றொரு பிரசங்க நிபுணரான நவாப் முஷின் உல்முல்க் செய்த பிரசங்கத்தை அவசியம் மேற்பட்டால் இதற்கு சமமாகக் கருதலாம். அவரது பிரசங்கம் பண்டித அயோத்யாநாத் செய்ததைவிட லகுவில் புரிந்து கொள்ளக்கூடியது. 1892-ல் பண்டித அயோத்யா நாத் காலமானார். இவ்வருஷ முடிவில் அலஹாபாத்தில் நடந்த காங்கிரஸ் மஹாசபை கூட்டத்திற்கு நானும் போயிருந்தேன். அச்சமயம் நான் நாட்டின் பெரியார்கள் பலரைப் பார்த்தேன் அந்த மஹா சபையில் டபிள்யூ. ஸி. போனர்ஜி அக்ராஸனம் வகித்தார். கண்டவர் பிரமிக்கும்படியான தேக அமைப்புள்ளவர் அவர்; இங்கிலீஷ் உடை அணிந்திருந்தார்; பண்டிட் அயோத்யாநாத் மாதிரியே நீண்ட தாடி வளர்த்திருந்தார்; ஆங்கில பாஷையில் அவருக்கிருந்த பரிசயம் அத்புதமானது, அந்த பாஷை உச்சாரணத்திலும் அவரிடம் குற்றம் காண முடியாது. நான் சுரேந்திரநாத் பானர்ஜியையும் பார்த்தேன். அவரது பிரசங்கத்தின் பிரவாகத்தில் நான் மூழ்கினேன். நம் நாட்டின் ராஜீயத்தில் எனக்கு சிரத்தை ஆரம்பித்தது இவ்விதம்.

இரு புதிய ஜோதிகள்

இதற்கிடையில் ஐக்ய மாகாணத்தின் ராஜீய வானத்தில் இரண்டு புதிய நக்ஷத்திரங்கள் உதயமாயின. ஒன்று காலஞ்சென்ற பண்டித விஷ்ணு நாராயணதார். மற்றொன்று பண்டிட் மதன்மோஹன மாளவியா. பண்டிட் விஷ்ணு நாராயணரைப்பற்றி முன்னமே நான் கேள்விப்பட்டிருந்தேன். என் தாய்வழியில் அவர் எனக்கு பந்து. அவர் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தது, நானும் அவரும் சேர்ந்திருந்த வகுப்பில் பிளவை உண்டுபண்ணியது. அவரைத் தங்களிடை வரவேற்க சிலர் விரும்பினர்; ஹிந்து மதாசாரத்தைத் தாங்கள்தான் காப்பாற்றுவதாகக் கூறிக் கொண்டு வேறு சிலர் கிளம்பினர். என்னுடைய பாட்டனார் அப்போது உயிருடன் இருந்தார்; அவர் பிந்திய கோஷ்டியில் சேர்ந்து கொண்டார்.

காலத்தின் "பழி"

காலம் மட்டும்பழி வாங்காமல் விடுவதில்லை. பின்னர் சில வருஷங்களுக்கெல்லாம், என்க்கு வயது அதிகமாகி நானே சொந்தத்தில் யோசனை பண்ணியதால், விஷ்ணு நாராயணதாரிடம் எனக்கு அபிமானமும் மதிப்பும் மேலிட்டன. இதே சமயம் நான் எதிர் பார்த்ததற்கு மேலாகவே விட்டுக் கொடுக்க முன் வந்த ஆசார சீலரான என் பாட்டனார் மட்டும் கவலை கொள்ளாமல் இல்லை, ஆங்கிலத்தில் பண்டிதர் ஒரு நிபுணர்! எழுதுவதிலும் பேசுவதிலும் சமர்த்தர். ஜான் ஸ்டூவர்ட் மில், ஹெர்பர்ட். ஸ்பென்ஸர் இவர்

நவநாகரீகம்

★

கூரை

★

காசினி எழுதியது

* * * 'எனக்கு இன்ன செய்வது என்று புரியவே இல்லை!' என்று லேடி சின்னையாவின் மகள் கமலம் முறையிட்டாள்.

'எதுக்கு என்பதைச்சொன்னல், எங்களாலான ஒத்தாசையைச் செய்யக் கை கட்டிக் காத்திருக்கிறேம்!' என்ருள் மாலினி.

'உங்கள் ஒத்தாசை இதுக்குப் பிரயோஜனப்படாது போலிருக்கே!' என்ருள் கமலம்.

'விஷயத்தைச்சொன்னல் முடியும், உபயோகமாக இருக்கும், முடியாது என்பதை நிர்ணயிக்கலாம்! மூடு மந்திரமாக வைப்பதாக 'இருந்தால்—!' என்று மாலினி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, நான் ஒன்னும் மூடுமந்திரம் பண்ணவில்லை! அப்படி ஒளிக்கவேண்டிய காரியமும் இல்லை! பார்க்கப்போனல், நாலு பேர் அறியச்சந்தோஷமாகச்சொல்லிக்கொள்ள வேண்டிய காரியமாக்கும்!' என்று கமலம் பட பட வென்று சொன்னாள்.

'அப்படியும் சமாசாரம், என்ன என்பதைச் சொல்லவில்லையே?' என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"ஹிந்து" பத்திரிகை உதவி ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். சாரங்கரத்னத்தின் குமாரி சௌபாக்யவதி கஸ்தூரிக்கும் மைசூர் ஸ்ரீமான் ஆண்டாபுரம் கோபாலரத்னமய்யங்காரின் புத்திரன் சிரஞ்சீவி நரசிம்மனுக்கும் சமீபத்தில் மைசூரில் விவாகம் நடைபெற்றது.

"அதுவா? என் நாத்தனர் பிள்ளைக்குக் கலியாணம் நிச்சயமாகி இருக்காம்! அதுதான்—" என்று அவள் சொல்லுமுன், 'இந்த யுத்த நாளிலா கலியாணம்?' என்று பங்கஜம் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

'யுத்தத்துக்காக வாழ்வும் சாவும் நிற்குமா என்ன? நன்றயிருக்குப்போ, உன் கேள்வி!' என்ருள் என் அத்தை.

'சாவு வேணும்னு நிற்காது? கலியாணம் நாமாகச் செய்து கொள்ளுவதுதானே? அது ஏன் நிற்காது?' என்ருள் பங்கஜம்.

'மூச்சும் நாமாக விடுவது தானே? இஷ்டம்போல் உயிரை விட்டால் போச்சு!' என்று என் அத்தை சற்றே ஏளனமாகச் சொன்னாள்.

'அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?' என்ருள் கமலம்.

'அவனில்லாமல் ஒரு அணுவும் அசையாது? தெரிஞ்சுதா? குரு பலமும், வேளையும்போதும் ஒன்னு சேர்ந்தால், கலியாணம் நடக்கும். யாரு குறுக்கே நின்னலும் நடந்தே தீரும். காலம் வரலை, கஜகர்ணம் போட்டாலும் நடக்காது! இது கூடவா தெரியாது?' என்ருள் என் அத்தை.

'இந்தத் தர்க்கத்துக்கு முடிவேது? ஆமாம், எதுக்காக உனக்கு எதுமே புரியவில்லை என்று சொன்னாய்?' என்று கமலத்தைக் கேட்டேன்.

'நல்ல கூரைப்புடவை பார்த்து வாங்கிக்கொண்டு வா என்று என் நாத்தனர் பாட்டில் எழுதிவிட்டாள். இங்கே கடைகளே கிடையாது என்று எழுதி அலுத்துப் போச்சு. இந்தக் கிராமத்திலே சரியான மண்டி, மளிகைக் கடைகூடக் கிடையாதே. ஏதோ பார்த்து வாங்கிக் கொண்டு வா என்று விடாமல் எழுதுகிருள். என்ன செய்வது?' என்ருள் கமலம்.

"அவள் சொன்னது என்னமோ உண்மைதான். இப்போ பட்டணத்தில் புடவைக் கடைகள் முயல்கொம்பாகி விட்டன. அவர் அவர்கள் தங்கள் சரக்குகளை மூட்டை கட்டி அனுப்பி விட்டார்கள். போய்க் கேட்டால் தங்கள் சொந்த ஊரான காஞ்சீபுரம், அல்லது மதுரை, கொள்ளேகால் முதலிய இடங்களுக்கு அனுப்பி விட்டதாகவும் கட்டாயமாக வாங்கிக் கொள்ளுவதாகச் சொல்லி, முன் பணம் கொஞ்சம் கட்டினல் தேவையான புடவைகளைத் தருவிப்பதாகவும் சொல்லுகிருர்கள். பழகின கடைக்காரர்கள் முன் பணம் கேட்காவிட்டாலும், "வாங்கிக்கொள்ளுகிறேம் அப்புறம் சரக்குப் பிடிக்கவில்லை என்று வாபீஸ் செய்வதில்லை" என்ற வாக்குறுதி என்னமோ கேட்கிருர்கள். சில கடைகளில் நாலு அல்லது ஐந்து சாதாரணப் புடவைகள் மாதிரிக்கு மருந்து போல் வைத்திருக்கிருர்கள் இவ்வளவுதான்.

இந்தக் கூரைப் புடவைக்கு இப்போ என்ன செய்யலாம் என்று எல்லாருமாகக் கொஞ்ச நேரம் யோசித்தோம், ஒரு கடைக்காரன் தன் பீரோவில் இரண்டு விலை பெற்ற புடவைகள் இருப்பதாகச்சொன்னது ஞாபகம் வந்தது. இவைகளை ஈரெட்டாக அனுப்பி இருந்ததாகவும், ஊருக்குச் சாமான் அனுப்பின அவசரத்தில் இவைகளை மறந்துவிட்டதாகவும், கொஞ்ச நாள் கழித்து இந்தப் புடவைகள் திரும்பிவரவே தன் கையில் நின்றுவிட்டதாகவும் சொன்னன். எல்லாருமாக அவன் கடைக்குச் சென்றேம், அவன் மூன்ருவதாக ஒரு புடவை காட்டினன்.

இது ரொம்பவும் அழகாக இருந்தது. இதைத்தான் கூரைப் புடவையாக கமலம் வாங்கினள். புடவை 'டிஷ்யூ' இனத்தைச் சேர்ந்தது; நல்ல உயர்தர டிஷ்யூ ஆனதினல் மிகவும் மிருதுவாகவும் மொரமொரப்பாக இல்லாமல் படிந்தும் இருந்தது. இலேசான சமுத்திரப் பச்சை வர்ணம். இதில் அழகான புதிய தினுசில் கொடிகள், இலைகள் மாதிரியில் சரிகையில் எடுப்பாக வேலை செய்திருந்தது. இடை இடையே வர்ணப் பொட்டுகளும் போட்டிருந்தது. சாண் அகலத்திற்கு சரிகை வேலை செய்த கரை; சரிகை வேலை செய்த தலைப்பு. புடவை மிகவும் மெல்லியதாகவும் நேர்த்தியாகவும் இருந்தது. விலை நூற்றி முப்பத்தி ஐந்து ரூபாய்கள் ஆச்சுது. புடவை இருந்த நாசூக்குக்கு இன்னும் பத்து ரூபாய்க்கூடச் சொன்னல்கூட கொடுக்கலாம். அவ்வளவு நன்ருக இருந்தது.

'உன் மருமான் அகமுடையாள் பாக்யசாலி தான். புடவையே கிடைக்கவில்லை என்று சொன்னீர்கள்! இவ்வளவு அழகான புடவை கடைசியில் கிடைத்து விட்டதே! அவள் அதிருஷ்டசாலிதான்!' என்று என் அத்தை கூடச் சொன்னள் என்ருள் பார்த்துக்கோயேன்! கமலம் வீடு சென்ற பின் எனக்கு மட்டும் ஒரு சந்தேகம் தட்டிற்று. புடவை ஆறு கஜம் கமலத்தின் நாத்தனர் என்ன சொல்லுவாளோ!

பாவர்க்காய் வறுவல்

மிதி பாவக்காயை இரண்டாக நறுக்கிக்கொள்ள வேண்டும். பிஞ்சுக்காயா இருந்தால் தேவலை. நறுக்கின காய்க்குவேண்டிய உப்புப்போட்டு கொஞ்ச நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு வடிந்ததண்ணீரை அப்புறப்படுத்திக் காயைப் பிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு காரம் வேண்டிய அளவுக்கு பட்டு மிளகாய் பொடி, கொஞ்சம் அரிசி மாவு, பெருங்காயம், காரத்துக்கு மட்டும் தேவையான உப்பு இவைகளைக் காயில் போட்டு நன்ருகக் கலக்க வேண்டும். நறுக்கின தானுடன் ஒட்டும்படி ஒரு கை தண்ணீரைத் தெளித்துக் கலந்து வைக்க வேண்டும். கொஞ்சம் எண்ணெயும் நெய்யுமாகக் கலந்துவைத்து வருக்க வேண்டும். இந்த வறுவல் கரகரப்பாகவும் மிகவும் ருசியாகவும் இருக்கும். கசப்பும் அதிகம் தெரியாது. சாதத்துடன் கலந்து கூடச் சாப்பிடலாம்.

அரிசி ஹல்வா

பச்சை அரிசி, அல்லது புழுங்கல் அரிசி, இரண்டிலும் இந்தத் தின்பண்டம் தயாரிக்கலாம். பச்சை அரிசியானல் நன்ருக இடித்துச்சலித்துக்கொள்ள வேண்டும். புழுங்கல் அரிசியினல் வழுமூண உரலில் அரைத்துக்கொள்ள வேண்டும். சர்க்கரை போடுவதானல் சரிக்குச்சரி போடவேண்டும். தித்திப்பு அதிகம் பிடித்தவர்கள் கால்படி மாவுக்கு ஒன்னரைக் கால்படி சக்கரை போடலாம். வெல்லமானல் ஒன்னுக்கு முக்கால் போடலாம். ஒரு பிடி கடலைப்பருப்பை பொன் போல் வருத்து வேக வைக்கவேண்டும். கொஞ்சம் தேங்காயைப் பல்லுப்பல்லாகக் கீறிக்கொள்ள வேண்டும். பருப்பு வெந்ததும் தண்ணீரில் வெல்லம் அல்லது சக்கரை போட்டு மாவையும் கரைத்து விட்டு நன்ருகத் துழவி மொத்தையாக வரும் சமயம் நெய் விட்டு, ஏலப்பொடி தூவி, இறக்க வேண்டும். அச்சில் விட்டால் நன்ருகத் தோய்ந்துவிடும். இட்டிலி அச்சில் விட்டு, இதை இட்டிலி மாதிரியில் தோய வைப்பதும் உண்டு. குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் போடலாம். தேங்காய்ப் பூவுடன், கொஞ்சம் அரிசி சேர்த்து நன்ருக அரைத்துப் பால் எடுத்து வெல்லம் போட்டு மற்றொரு தினுசு ஹல்வா கிளறலாம். ஆனல் இது அவ்வளவு கெட்டியாக இட்டிலி மாதிரியில் உறையாது. சற்றே தளர்த்தியாகவே இருக்கும். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்,

தமிழ் நூல்கள்

குழந்தைககட்டி	1	4
உலகரகசியம்	1	0
நவரத்னலாகெட்	0	12
சரணுகதி சாஸ்திரம்	0	8
ஜெய காந்தன்	0	8
அசலாம்பிகை	2	4
தீனதயாளு	0	10

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps. SANTI ASRAM, Dacca (Bengal)

ஜனாதிபதி ஜன்ம தின விழா

அமெரிக்க ஜனாதிபதி மிஸ்டர் ரூஸ்வெல்டின் 60-வது ஜன்ம தினத்தன்று தயாரிக்கப்பட்ட அப்பத்தை அவரது மனைவி மிஸஸ் ரூஸ்வெல்ட் துண்டிக்கிறார். அதில் ஒரு பகுதியை அவர் பிரபல நடிகையான மிசிலி மார்கவிடம் தருகிறார். மிஸஸ் ரூஸ் வெல்ட்பக்கத்தில் பிரபல நடிகை டராத்தி லாமூர் சிரித்துக் கொண்டும் மற்றொருபிரபல நடிகை ராஸ்லிண்ட் ரஸ்ஸல் அதற் கடுத்தாற்போல் நின்று கொண்டு எட்டிப்பார்ப்பதையும் படத்தில் காணலாம்.

சித்திரமும் சிருங்காரமும்

★

சார்ளி சாப்ளின் நடிக்கும் படம் — "கோல்ட் ரஷ்"— வாலண்டினோவின் வாழ்க்கையைக் காட்டும் படம்—கதா நாயகர் வேஷம்—தகுதியானவரைக் கண்டு பிடிப்பதில் சிரத்தை படங்களும் பிரசாரமும்—ஸ்ரீ சாந்தாராம் தொடர்ந்துவரும் முயற்சி—புதிய படத்தொகுதி—பம்பாய் டாக்கீஸ் "பஸந்த்" தயாராகி வருகிறது—"ஜமீன்தார்"—பாஞ்சோலி சித்திரபடம்—இந்தியப்படங்களின் நீளம்—அளவு குறிப்பிடப்பட்டது.—இந்தியா ஸர்க்கார் அங்கீகாரம்—ஒரு சிருங்காரப்படம்—போயர் — ஸல்லவன் நடிப்பு — "பாரசூட் படை"—விஷயத்தை விளக்கும் படம்.

சார்ளி சாப்ளின்

இவ்வருஷத்தில் உலகின் பல பாகங்களிலும் சார்ளி சாப்ளின் நடிக்கும் "கோல்ட் ரஷ்" என்ற படம் காட்டப்படும். இவ்வருஷம் காட்ட ஏற்பாடாகியிருக்கும் இந்தப் படத்தின் பிரதி முன்பு காட்டப்பட்டவற்றைவிட சிலாக்கியமானது. சங்கீதமும் சம்பாஷணைகளும் இதன் சிறப்புக்கு ஆஸ்பதமாகின்றன. முதன் முதல் 1925-ம் வருஷத்தில் இந்தப் படம் காட்டப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். அப்போது பேசும் படம் கிடையாது; வெறும் சலனப் படம் தான் அந்நாளில்.

இப்போது தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தப் பேசும் படத்தைப்பற்றி சாப்ளின் அதிக திருப்தி கொண்டிருக்கிறார். இந்தப் படத்தை நேரில் பார்த்தானந்திக்க வேண்டும் என்கிறார் அவர்.

"இப்போது இந்தப் படத்தை நீங்கள் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள்" என்று சாப்ளின் உறுதியாகக் கூறுகிறார்.

இந்தப் பேசும் படத்தில் பல பாகங்களும் பகுதிகளும் துண்டிக்கப்பட்டும் மாற்றப்பட்டும் இருக்கின்றன. ஆகவே முன்பு காட்டப்பட்ட சலனப் படத்தைக் காட்டிலும் இந்தப்பேசும் படத்தின் நீளம் 1500 அடி குறைவுபட்டிருக்கிறதாம்.

இதில் புதிய பாட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1925-ம் வருஷத்தில் எந்த பாட்டுகளுக்கு அதிக பிரசித்தி இருந்ததோ அவைகளே இதில் ஸ்தானம் பெற்றிருக்கின்றன. காரணம் இதுதான். இந்தப் புதிய படமும் 1925-ல் தயாரிக்கப்பட்டதுபோல் சோபிக்கவேண்டும் என்பதே அது.

படத்தில் பல பாட்டுகளை சாப்ளின்தான் பாடுகிறார். படம் ஓடிக்கொண்டே போகும்போது சாப்ளின் வியாக்யானத்தையும் பண்ணுகிறார். கதையை விளக்கி வருவதுடன், தமதுபாகம் வரும் போதெல்லாம் அவர் சகஜமாக சம்பாஷிக்கிறார். ஆனால் அவருக்கு பொம்மலாட்டத்தில்தான் அதிக ப்ரீதி இன்றும் இருக்கிறது என்பது குறிப்புக்குரிய விஷயமாகும்.

சாப்ளின் பின்கண்டபடி கூறுகிறார்: "படத்தில் வியாக்யானம் பண்ணிக் கொண்டே போகும்போது, படத்தில் காட்டப்படும் கதையில் ருசி குறையக்கூடாதென்பதே என் கருத்து கதையின் கோர்வை தெளிவாயிருக்கவும் அதை அறிந்தனுபவிப்பதற்கு வழிதேடவும் தான் நான் இவ்விதம் செய்கிறேன். கதையின் ஹாஸ்ய ருசி அதிகரிப்பதற்கும் நான் உதவியிருக்கிறேன்: ஆகவே கூடியமட்டில் குறைத்தே விளக்கம் பண்ணி வந்திருக்கிறேன்.

"இந்தப்படம் காட்டப்படுவதற்கு தற்சமயமே மிகவும் தகுதியானது என்பதும் நான் எடுத்துக்கூறவேண்டிய விஷயமாகும். நன்றாகச் சிரித்து சந்தோஷிப்பதற்கு லாயக்கானது இந்தப்படம்.

இந்தப்படம் யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பொரேஷன் மூலம் விநியோகிக்கப்படும்.

* * * *

ஒரு கௌரவம்

சமீபத்தில் அமெரிக்காவில் ரேடியோ மூலம் பிரசித்த பட புரொட்யூஸரான டேவிட் ஓ. ஸெல்ஸ்னிக் என்பவருக்கு கௌரவம் செய்யப்பட்டது. அச்சமயம் "நியூ யார்க் மிர்ரர்" அதிகாரிகள் படத்தைத் தயாரிப்பவர்களுள் இவர் முதன்மையானவர் என்ற காரணத்தையொட்டி இவருக்கு ஒரு சன்மானத்தை அளித்தனர்; இது ரேடியோ மூலம் அமெரிக்கா முழுதும் ஒலிபரப்பப்பட்டது.

மேற்படி பத்ரிகாபிமானிகள் நூற்றுக்கணக்கில் இந்த கௌரவத்திற்கு ஸெல்ஸ்னித்தான் 'அருகதை வாய்ந்தவர் என்று முடிவு செய்தனர். ஆகவே பத்திரிகைகள் சார்பில் அதன் நிர்வாக ஆசிரியர் அவரிடம் இந்த சன்மானத்தை சமர்ப்பித்தார்.

ஸெல்ஸனிக் தயாரித்த பல பிரசித்த படங்களுள் "கான் வித் தி விண்ட்" "ரெபக்கா" என்ற இரு படங்கள் பிரதான ஸ்தானத்தைப் பெற்றன.

யுனைடட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் சொந்தக்காரர்களுள் டேவிட் ஸெல்ஸ்னிக் ஒருவர்; மற்றவர்கள் மெரி பிக்போர்ட், சார்ளி சாப்ளின், அலெக்ஸாண்டர் கோர்டா.

* * * *

நடிகரின் மனமாற்றம்

பிரபல நடிகரான மாரிஸ் ஷிவாலியர் ஜர்மனியில் ஒரு சிறைக் கூடத்தைப் பார்வையிட்டார். சென்ற யுத்தத்தின்போது அவர் ஜெர்மனியில் கைதியாயிருந்தார். ஆயினும் இப்போது அவரது மனம் மாறியிருப்பதாகத் தோன்றுகிறது. ரேடியோ மூலமாகவும் விச்சி பத்திரிகைகள் வாயிலாகவும் அவர் தற்சமயம் அச்சு நாடுகளுக்கு ஆதரவு தேடி வருகிறார். (டபிள்யு. என். பி. எஸ்.)

பிரபல நடிகர் படம்

ருடால்ப் வாலண்டினோஎன்ற பிரபல நடிகரின் வாழ்க்கையைப் படம்பிடிக்க யுனைடட் ஆர்டிஸ்ட் கார்ப்பொரேஷன் ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தப் படத்தைத் தயாரிப்பவர் எட்வர்ட் ஸ்மால்: இதை டைரக்ட்செய்வதற்கு ஜார்ஜ் ரடாப் நியமிக்கப் பட்டிருக்கிறார். இப்போது படத்தை ஆரம்பிக்க ஒரே ஒரு தடை தான் முன் நிற்கிறதாம். அதாவது கதா நாயகர் வேஷத்தைத் தரிக்கத் தகுதி வாய்ந்தவர் இன்னமும் அகப்பட்டபாடில்லை. இந்தக்குறையை உடனே நிவர்த்திக்க முனைய வேண்டும் என்று நியூயார்க்கிலும் ஹாலிவுட்டிலும் இருக்கும் தமது சிப்பந்திகளுக்கு ஸ்மால் உத்திரவு போட்டிருக்கிறார்.

வாலண்டினோ வேஷத்தை யேற்க அருகதையுள்ளவரைக் கண்டு பிடிப்பதில் ஸ்மால் இப்போது பிரயாசைப்படுகிறார். எவர் முன் வந்தாலும் அவருடைய யோக்யதையைக் கவனித்து நடக்க ஸ்மால் சித்தமாயிருக்கிறாராம்.

* * * *

"கண்கள் பேசுகின்றன!"

20ம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியார் படமான "ஐ வேக் ஆப் ஸ்க்ரீமிங்" என்ற படத்தில் ஒரு காட்சி. பெட்டிக் ராபிளும் விக்டர் மச்சூரும்.

படங்களும் பிரசாரமும்

படங்கள் மூலம் பிரசாரம் பண்ணவும் கல்வி அபிவிருத்திக்கு வழி தேடவும் டைரக்டர் ஸ்ரீ வி. சாந்தாராம் மிகவும் மும்முரமாக வேலை செய்து வருகிறார். பிரதி வாரமும் அவர் மிகவும் சிலாக்கியமான பல சிறு படங்களைத் தயாரித்து இந்தியா முழுதும் அவற்றைக் காண்பித்து வருகிறார். இதனால் லக்ஷக் கணக்கான மக்கள் நற்பயன் அடைந்து வருகிறார்கள், ஸ்ரீ சாந்தாராம் மிகவும் சிறந்த டைரக்டர் படத்தொழிலில் பிறருக்கு எட்டாத பிரசித்தியை ஸ்வீகரித்தவர்: தாம் மேற்கொண்ட துறையில் உன்னதமான நிபுணர். இப்போது இவர் தயாரித்துவரும் படங்கள் மூலம் தாய் நாட்டைப் பாதுகாப்பதில் இந்தியருக்குள்ள உறுதியையும் தீரத்தையும் இதரர்கள் காணலாம். எதிரிகளை விரட்டியடிக்க அவர்கள் கொண்டிருக்கும் துணிவையும் சுலபமாய் அறியலாம்.

இந்த "இந்தியப் படங்கள்" என்ற தொகுதியில் ஸ்ரீ சாந்தாராம் ஒரு புது முறையைக் கையாண்டிருக்கிறார். இந்தியத் தலைவர்கள் பலரும் செய்த பிரசங்கங்களை ஒலிப்பதிவும் ஒளிப்பதிவும் செய்துகாட்ட அவர் ஏற்பாடு செய்திருக்கிறார்: இதனால் பல கட்சித் தலைவர்கள் கொள்ளும் கருத்துகளை நாம் படம் மூலம் அறிய முடியும். இது தவிர அச்சு நாடுகளின் வீண் ஜம்பப் பேச்சுகளையும், பொய்ப் பிரசாரத்தையும் தடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"தீரரான நம் அண்டை வீட்டுக்காரர்" "மேலே குறி" "விதியின் தாக்கு" என்ற சிறு படங்களையும், பண்டித ஜவஹர்லால் நேரு, ஜனாப் மகம்மதலி ஜின்னா, ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் ஆகியோர் பிரசங்கம் புரியும் காட்சிகளையும் இவர் தயாரித்து நாடு பூராவும் காட்டி வருகிறார்.

ஸ்ரீ சாந்தாராம் கொண்டுள்ள நன்னம்பிக்கை அபரிமிதமானது: நிகரற்றது என்றும் கூறலாம். "நல்ல முயற்சி" என்ற மகுடமிட்டு ஒரு படத்தை அவர் இப்போது தயாரித்து வருகிறார்: இது நிகழ்கால சம்பவங்களைக் காட்டுகிறது. ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸூம் மற்ற தலைவர்களும் நாட்டின் முன்னேற்றத்தையொட்டி செய்த முயற்சி இப்படத்தில் பிம்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் கூறியதுபோல் இம்முயற்சி ஒருபோதும் வீண் போகாது.

* * * *

பம்பாய் டாக்கீஸ்

இப்போது இந்த டாக்கீஸார் "பஸந்த்" என்ற படத்தைத் தயாரித்து வருகின்றனர். வழக்கம்போல் இங்கு எல்லாம் மணிக்கணக்கில் நிறைவேறிவருகிறது. அமியா சக்ரவர்த்தி டைரக்ட் செய்யும் இந்த சமூகப்படமும் நல்ல பிரசித்தி பெறும் என்பதில்சந்தேகமில்லை. மும்தாஸ் காந்தியும் உல்ஹாஸூம் இந்த படத்தில் பிரதான நடிகர்கள்.

* * * *

'ஜமீன்தார்'

லாகூர் பாஞ்சோலி சித்திர பட கம்பெனியார் தயாரித்த "கன்—டான்" என்ற படம் பூர்த்தியாகி விட்டது. படத்தணிக்கையும் முடிந்து விட்டது. லாகூரில் படக் காட்சியும் ஆரம்பமாகியிருக்கிறது. இந்தப் படம் மேற்படி கம்பெனியார் முன்பு தயாரித்த "கஜான்ஸி"யை விட அதிக பிராபல்யம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதர நகரங்களிலும் இதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்திருக்கிறது.

லாகூரில் இந்த சித்திர படக் கம்பெனி ஸ்டுடியோவில் "ஜமீந்தார்" படம் பிடிப்பு ஆரம்பமாகியிருக்கிறது. கித்வானி டைரெக்ட் செய்யும் இந்தப் படத்தில் சாந்தா ஆப்தே, குலாம்மஹமத், எம். இஸ்மெல் மனோரமா முதலியோர் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறது: ஆகவே இந்த "ஜமீன்தார்" படமும் "கஜான்ஸி" மாதிரி சோபிக்கும் என எதிர்பார்க்கலாம்.

* * * *

இந்தியப் படங்களின் நீளம்

பம்பாய் இந்திய பிலிம் புரொட்யூஸர்ஸ் அஸோஸியேஷன் நிறைவேற்றிய தீர்மானத்தை இந்திய ஸர்க்கார் அங்கீகரித்திருக்கின்றனர்.

இனிமேல் மொத்தம் 11000 அடி நீளமும் அதற்குக் குறைவும் உள்ள படங்கள் தான் படத்தணிக்கை போர்டுகள் முன்பு காட்டப்பட்டு ஸர்டிபிகேட் பெற முடியும். இந்தியப் படங்களின் நீளத்திற்கு இவ்விதம் ஓர் எல்லை விதிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். சினிமா அபிமானிகளுக்கும் இந்த முடிவு திருப்தியைத் தரும்.

இது காரணமாக இப்போது பம்பாய் ஸ்டுடியோக்களில் வெகு மும்முரமாக கத்திரிப்பு வேலை நடந்து வருகிறது என்று கூறப்படுகிறது: படக் கதைகள் சுருக்கப்படுகின்றன: பல திருத்தியமைக்கப்படுகின்றன. காட்சிகள் விஷயமாகவும் அதிககவனம் காட்டப்படுகிறது. குறிப்பிட்ட அளவுக்குள் படத்தின் நீளத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் பலமாக நடந்து வருகின்றன.

இந்திய சர்க்கார் அளித்திருக்கும் இந்த அங்கீகாரம் இம் மாதம் முதலிலிருந்தே அமுலாகும் என்றும் கூறப்படுகிறது.

* * * *

ஒரு சிருங்காரப் படம்

சார்லஸ் போயரும் மார்கரெட் ஸல்லவனும் நடிக்கும் "அபாயிண்ட்மெண்ட் பார் லவ்" என்ற படம் சிருங்கார ரஸம் நிரம்பியது: பார்ப்பதற்கு புத்துணர்ச்சியளிப்பது.

காதற் கதைகளையெழுதி காலத்தைக் கழிப்பவர் ஒருவர் : காதல் உணர்ச்சி முதலாக எல்லாவற்றிற்கும் சாஸ்திரப்படி காரணம் காட்டும் டாக்டரான ஒரு ஸ்திரீ: ஒருநாள் அந்த ஸ்திரீ அந்த கதாசிரியரிடம் காதலுக்கும் ரஸாயனத்திற்கும் சம்பந்தமிருக்கிறது என்றும், அதைத் தெளிவாக நிரூபித்துக் காண்

பிக்க முடியும் என்றும் கூறுகிறாள். அவர் அதை நம்ப மறுத்துவிட்டார்: அவ்வளவு தான்! இருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. யூனிவர்ஸல் கம்பெனியாரின் மேற்படி படத்தின் கதையின் முக்கியாம்சம் இது தான். இது நியூ க்ளோப்பில் இவ்வாரம் ஆரம்பமாகிறது.

ஆரம்பம் முதல் முடியும் வரை விநோதமும் வேடிக்கையும் நிரம்பியது இந்தப் படம். இந்தப் படத்தின் கதை வருமாறு:

ஆண்ட்ரி காஸில் (சார்லஸ் போயர்) ஒரு நாடகாசிரியர். டாக்டர் ஜேன் அலக்ஸடாண்டர் (மார்கரட் ஸல்லவன்) ஆண்ட்ரியினால் காதலிக்கப்படுகிறாள். டாக்டர் ஜேனுக்குத் தன் தொழிலில் அபாரசிரத்தை. கடைசியில் இருவரும் மணக்கின்றனர். விவாகமானதும் இருவரும் வெளிக்கிளம்புகின்றனர். அந்த சமயத்தில் ஆண்ட்ரியின் பழைய காதலியான நான் லான்ஸன் என்ற நடிகை அந்த இடத்திற்கு வந்து சேருகிறாள். இதே சமயத்தில் டாக்டர் ஜேனுக்கும் அவசர அழைப்பு ஒன்று வருகிறது. ஆகவே புதிய தம்பதிகளின் இல்வாழ்க்கை பங்கப்படுகிறது. இருவரும் நியூ யார்க் நகரம் திரும்பிவிடுகின்றனர்.

இதற்கப்புறமும் சிக்கல் விட்டபாடில்லை, டாக்டர் ஜேன், இருவரும் தனி அறையில் தங்கியிருக்கவேண்டும் என்றும் ஒருவர் மற்றவரால் பாதிக்கப்படாமல் தன் தொழிலை நடத்த வேண்டும் என்றும் கூறிவிடுகிறாள். இது ஆண்ட்ரியின் கோபத்தை கிளப்புகிறது. தனது நாடகங்களின் புரொட்யூஸரான ஹேஸ்டிங்கின் யோசனையின்பேரில் டாக்டர் ஜேன் காதல் பற்றிக்கொண்ட விஞ்ஞானக்கொள்கைகளைத் தகர்க்க அவன் முற்படுகிறான்: அவளிடை பொருமையைக் கிளப்ப முயற்சிக்கிறான். நான்ஸியுடன் உறவாடுவதாகவும் எடித் என்பவளுடன் நட்பு கொள்வதாகவும் அவன் பாசாங்கு பண்ணுகிறான்: ஆனால் இவற்றையெல்லாம் பார்த்து ஜேன் பொருமைப் படவில்லை. இந்த சமயத்தில் அவளது நண்பன் மைக்கேல் வருகை ஆண்ட்ரியின் பொருமையை எழுப்பி விடுகிறது.

இருவருக்கும் பிறகு பலத்த வாக்குவாதம் நடக்கிறது. இறுதியில் மறுபடியும் தாம்பத்ய வாழ்க்கையைத் திருப்திகரமாக நடத்த அவர்கள் ஒப்புகின்றனர். ஆனால் இருவரும் ஒருவரை மற்றவர் நம்பவில்லை. டாக்டர் ஜேனின் அறையில் ஆண்ட்ரி இரவு பூராவும் காத்திருக்கிறான்: டாக்டர் ஜேன் ஆண்ட்ரி அறையில் அதே மாதிரி காத்திருக்கிறாள். இது ஒரு சிறு பையனுக்கு மட்டுமே தெரியும்.

பிறகு டாக்டர் ஜேனும் மைக்கேலும் ஒன்றாக இருக்கும் போது ஆண்ட்ரி மைக்ரோபோன் மூலம் முந்திய நாள் இரவு அவள் எங்கிருந்தாள் என்பதைத் தெரிவிக்கும்படி உத்திரவிடுகிறான்: டாக்டர் ஜேன் பதிலளிக்க மறுக்கிறாள்: இவை யாவும் பத்திரிகைகளில் பஹிரங்கமாகின்றன.

விவாகரத்து தான் சரி என்று டாக்டர் ஜேன் தீர்மானித்திருக்கும் போது. அவளிடம் அந்தச் சிறுவன் ஒருவர் அறையில் மற்றவர் அன்றிரவு இருந்ததை எடுத்துச் சொல்கிறான். இதைக் கேட்டு சந்தோஷத்துடன் அவன் ஆண்ட்ரி அறைக்குப் போகிறாள். அங்கு தன் மீது கோபித்துக் கொண்டிருக்கும் கணவனுடன் நான்ஸி இருப்பதைப் பார்த்து அவளை பலமாக அறைந்துவிட்டு வெளியே வருகிறாள். இதற்குப் பிறகு ஆண்ட்ரி அவளுடைய அறைக்குப் போய் அவளது நடத்தையைக் கண்டிக்கிறான். அப்போது டாக்டர் ஜேன் அன்றிரவு நடந்த விபரீதத்தை வெளியிடுகிறாள். இருவரும் மனமொத்து விடுகின்றனர்.

* * * *

“பாரச்சூட் படை”

“பாரச்சூட் படை” என்ற ஆர். கே. ஓ. ரேடியோ படம் எல்பின்ஸ்டனில் இவ்வாரம் காட்டப்படுகிறது. இந்த உயர்தர படத்தில் பாரச்சூட் படையினர் நவீன யுத்தத்தில் செய்யும் சேவை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி, அவர்கள் செய்து வரும் வேலை, அதன் தன்மை, அதனால் கிட்டும் பலன், இவை யாவற்றையும் இந்தப் படத்தில் காணலாம். நாம் ஒவ்வொருவரும் இந்தப் படத்தைப் பார்ப்பது பிரயோஜனகரமாகும்.

பென்னிங் கோட்டையில் படக் கதை ஆரம்பமாகிறது, இப்படத்திற்காக ஒரு நல்ல கதையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் தோன்றும் நடிகர்களும் தங்கள் பாகங்களைச் சிறப்பாகவே நடித்திருக்கின்றனர்,

ராபர்ட் ப்ரெஸ்டன், நான்ஸி கெல்லி. எட்மண்ட் ஓப்ரியன், ஹாரிகாரி முதலியோர் காட்டியிருக்கும் நடிப்பு மெச்சத்தக்கதாயிருக்கிறது. மொத்தத்தில் இந்தப்படம் தற்சமயத்தில் நல்ல பொழுதுபோக்கு என்றே கூறவேண்டும். விஷயமறிய விரும்புவோருக்கும் உண்மையறியாதவர்களுக்கும் இந்தப்படம் அதிக பயனளிக்கும்.

சென்ற வார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்த இரண்டாவது தவறு யாதெனில், அவர் குளிர் காலத்தை மறந்துவிட்டதுதான். ரஷ்யப் படை பலம் சென்ற வருஷத்தைவிட அதிகம்.

மேலும், நாமும், அமெரிக்காவும் ஜெர்மனிமீது தாக்குதலின் வேகத்தை அதிகரிக்க முன் வந்திருக்கிறோம்.

இவ்வருஷ யுத்தத்தில் ஜெர்மனிமீது பிரிட்டிஷ்-அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சு ஒரு முக்கிய அம்சமாயிருக்கும்.

* * * *

டோக்கியோ மீது குண்டு வீச்சு

சென்ற ஏப்ரல் மாதம் 18-ந் தேதி அமெரிக்க ராணுவப் படையைச் சேர்ந்த வெடிகுண்டு விமானங்கள் டோக்கியோவில் குண்டுகள் வீசியதாக அதிகார தோரணையில் அறிவிக்கப்படுகிறது.

வாஷிங்டன் ராணுவசர்க்கார் மேற்படி குண்டுவீச்சு சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் ஜப்பானில் குண்டுவீசினர். நடுப்பகலில் நல்ல சூரிய வெளிச்சத்தில் அமெரிக்க விமானங்கள் தாழப் பறந்துகொண்டு ராணுவ கடற்படை, தொழிற்சாலை நிலையங்களைத் தாக்கினர். டோக்கியோ, யோகஹாமா, நகோயா முதலிய விடங்களில் குண்டுகள் வீசப்பட்டன. குறிப்பிட்ட விடங்களைத் தடை இன்றி எரிகுண்டுகளால் தாக்கினார்கள் பல விடங்களில் தீ பற்றியது. சில விடங்களில் நெருப்பு இரண்டு நாட்கள் வரையில் எரிந்தது.

ஜப்பானுக்குச் சமீபமாக விமானங்கள் சென்றுகொண்டிருந்த பொழுது, ஜப்பானிய ரேடியோவில் ஓர் ஆங்கில ஒலிபரப்பு நடந்துகொண்டிருந்தது. வாழ்க்கைச் சந்துஷ்டிகளைப்பற்றியும், ஜப்பான் வெடிகுண்டு விமானங்களால் தாக்கமுடியாது, என்பதைப்பற்றியும் பிரசாரம் நடந்துகொண்டிருந்தது. விமானங்கள் குண்டு வீச ஆரம்பித்தவுடன் ரேடியோ ஒலிபரப்பு நிறுத்தப்பட்டு, ஜப்பானிய பாஷையில விமானக் குண்டுவீச்சுகளைப் பற்றி ஜப்பானியருக்கு அறிவிக்கப் பட்டது. மூன்று ஜப்பானிய விமானங்கள் காணப்படவில்லை என்றும் விமானத் தாக்குதலினால் சுமார் 4000 பேர்கள் நாசமடைந்திருப்பார்களென்றும் ‘நெருப்பை அணைக்க உடனே மழை பெய்ய வேண்டுமென்று ஜப்பானிய மக்கள் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டுமென்றும் ஆஸ்பத்திரிகளும் கலாசாலைகளும் ராணுவ முயற்சிகளுக்குப் பாதகம் ஏற்படாத பல ஸ்தாபனங்கள் தாக்கப்பட்டதாகவும் டோக்கியோ ரேடியோ அறிவித்தது.

* * * *



யுத்த முயற்சி காரணமாய் பெட்ரோலை அநாவசியமாகச் செலவழிக்கக் கூடாதென்பதற்காக, பிரபல ஸோப் உற்பத்திக் கம்பெனி ஒன்றில் ஸைக்கிள் மூலம் சாமான் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

பிரிட்டிஷ் ராஜ குடும்பம்

மன்னர் சகோதரர் க்ளஸ்டர் கோமகனுக்கு பிள்ளை பிறந்தபோது எடுத்த படம். நிற்பவர் (இடதிலிருந்து) எலிஸபெத் ராஜகுமாரி, மன்னர் பிரான், க்ளஸ்டர் கோமகன், புக்ளியூ கோமகன்; உட்கார்ந்திருப்பவர் (இடதிலிருந்து) மார்கரெட் ராஜகுமாரி, எலிஸபெத் ராணியார், க்ளஸ்டர் சீமாட்டி, மேரி ராணியார், பக்ளியூ சீமாட்டி.

—இ என். பி.

★

ரங்கூனில் சேதம்

★

எதிரி விமான குண்டு வீச்சு காரணமாக ரங்கூனில் ஓர் பிரதேசம் தீப்பற்றி எரியும் காட்சியை இப்படத்தில் பார்க்கலாம்.

★